பக்கங்கள்: 56
விலை: 30

**வடமாகாண மர நடுகை மாதம்**
*கார்த்திகை - 2018*
"நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்."
-வாரன் பஃவெற் (அமெரிக்கத் தொழிலதிபர்)

# உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
சுடர் 34 கதிர் 01 கார்த்திகை 11ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 27 நவம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

# மாவீரர் நினைவேந்தலுக்கு எழுச்சியுடன் தாயகம் தயார்

## சிவப்பு மஞ்சள் கொடிகளுடன் துயிலும் இல்லங்கள் மாலை 6.05 மணிக்கு ஈகச் சுடரேற்றல்



**யாழ்ப்பாணம், நவம்பர் 27**
**காவிய நாயகர்களை, தாயக விடுதலைக்காகத் தம் உயிரை உவந்தளித்த வீர மறவர்களை நினைவு கூருவதற்குத் தாயக மக்கள் எழுச்சியுடன் தயாராகியுள்ளனர். மாவீரர் துயிலும் இல்லங்கள், நினைவுத் தூபிகள், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்பவற்றில் இன்று மாவீரர் நினைவேந்தல் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்படவுள்ளது.** >> 53

இன்று உதயன் தனது 34ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கின்றான்

## நாடாளுமன்று இன்று கூடுகின்றது

கொழும்பு, நவ்.27
நாட்டில் அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ள நிலையில் நாடாளுமன்றம் இன்று பிற்பகல் கூடவுள்ளது. இன்றைய அமர்வின் >> 53

# விடுதலைக் கனவை நெஞ்சிருத்தி சாவைத் தழுவிய சந்தன மேனியர்

நெஞ்சிருத்தி அஞ்சலிப்போம் –தமிழ்நேசன் அடிகள் | வீரர்களை அஞ்சலிப்போம் –சிறிதரன் எம்.பி | மனங்களில் வாழ்வர் –சி.வி.விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், நவ.27
விடுதலைக் கனவை இதயத்தில் தாங்கிச் சாவைத் தழுவிய சரித்திர நாயகர்களாம் மாவீரர்களை இன்று நாம் நெஞ்சிருத்தி அஞ்சலிக்கின்றோம். நமது இலச்சிய நெருப்பு அணைந்து போகக் கூடாது. அது கனன்று கொண்டே இருக்க வேண்டும்.
இவ்வாறு அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் தெரிவித்துள்ளார். மாவீரர் நாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். >> 53



# பிறந்தநாள் கொண்டாட முயன்ற சிவாஜி கைது!

யாழ்ப்பாணம், நவ.27
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்தநாளைக் கொண்டாட முயன்ற வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவருடன் வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் கே.கருணானந்தமூர்த்தியும், நகர சபை உறுப்பினரான சி.சிவஞானசுந்தரமும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பின்னர் பொலிஸாரால் விடுவிக்கப்பட்டனர்.
வே.பிரபாகரனின் பிறந்தநாளை அவரது இல்லக் காணியில் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டி >> 08



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

## ரவீந்திர மீது நடவடிக்கை எடுக்க கோரிக்கை

கொழும்பு, நவ. 27
பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன மீது பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆர்.பி.செனிவிரத்னபொலிஸ்மா >> 08

## இன்று விசாரணை

கொழும்பு, நவ. 27
கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபருக்கு அடைக்கலம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டு தொடர்பாக, வாக்குமூலம் வழங்குவதற்காக அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன குற்றப் >> 53

## விடுதலைப் புலிகளது சின்னத்தை பயன்படுத்தாது நினைவு கூரலாம்

*பாடல்கள் ஒலிபரப்புவதைத் தடுக்க முடியாது ஊர்காவற்றுறை நீதிமன்று கட்டளை*

யாழ்ப்பாணம், நவ.27
இறந்தவர்களை நினைவுகூருவதையும், பாடல்களை ஒலிபரப்புவதையும் தடை செய்ய முடியாது. தடை செய்யப்பட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடி, இலச்சினை மற்றும் சீருடையுடனான உருவப் படங்களைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப் படுகின்றது.
இவ்வாறு ஊர்காவற்றுறை நீதிவான் மன்று நேற்றுக் கட்டளையிட்டது.
தீவகம் சாட்டி, மாவீரர் துயிலும் இல்லத்தில் கடந்த ஆண்டைப் போன்று இம்முறையும் தடை செய்யப்பட்ட புலிகள் அமைப்பை நினைவு கூர முற்பட்டுள்ளனர். கருணாகரன் குணாளன் என்பவர் உட்பட தமிழ்த் தேசியச் செயற்பாட்டுக் குழுவினர் (செண்பகம் >> 53

## மகிந்தவுக்கு எதிரான மனு மீது 30 அன்று விசாரணை

கொழும்பு, நவ.27
தற்போதைய தலைமை அமைச்சர் மற்றும் அமைச்சரவைக்குப் பதவிகளில் நீடிப்பதற்கு அதிகாரமில்லை என்று தீர்ப்பளிக்க வேண்டும் என்று கோரி >> 08

## நாடாளுமன்றக் கலைப்பு: விசாரிப்பதற்கு 7 நீதிபதிகள்

கொழும்பு, நவ.27
நாடாளுமன்றத்தைக் கலைப்பதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட அரசிதழ் அறிவிப்புக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள வழக்கை விசாரணை செய்ய >> 08

*தனக்கு எதிராகச் சாட்சியமளித்த*

## கடற்படை அதிகாரியை சுடத் துரத்திய அட்மிரல்

கொழும்பு, நவ. 27
கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான வழக்கின் முக்கிய சாட்சியான சிறிலங்கா கடற்படை அதிகாரி பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன உட்பட ஆறு கடற்படை அதிகாரிகளால் தாக்கப்பட்டுள்ளார். பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர இந்தத் தகவலை உறுதி செய்துள்ளார்.
11 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கின் முக்கிய சந்தேக நபரான >> 08

# மக்களின் உரிமைக்காக உயிர் நீத்த எம் மறவர்களுக்கு அஞ்சலி





இன்று உதயன் 34ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கிறான். தமது இன்னுயிரையும் ஆகுதியாக்கி உதயனின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உரமளித்த பணியாளர்களை இந்தத் தருணத்தில் உள்ளத்தில் கனலும் உணர்வுகளுடன் நினைவில் கொள்கிறோம். அவர்களின் அர்ப்பணிப்பு, தியாகம் என்பவற்றின் பெறுமதியுணர்ந்து அவர்கள் நடந்த பாதையின் தடம் மாறாது தொடர்வோம் என்ற உறுதியுடன் அவர்களை எமது இதயங்களில் அஞ்சலிக்கின்றோம்.

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் எனக்கு வைக்கப்பட்ட பொறி

## கூறுகிறார் மைத்திரி



கொழும்பு, நவ. 27
தனக்கு எதிரான குற்றவியல் தீர்மானத்தைக் கொண்டுவர வழியமைத்து விடும் என்பதால்தான், கடந்த நவம்பர் 14ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தான் நிராகரித்ததாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதனை அவர், வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுடன் நேற்றுமுன்தினம் நடத்திய சந்திப்பின்போது உறுதி செய்தார்.

'நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதற்கு, நவம்பர் 14ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் முதலாவது பந்தியை நீக்குமாறு நிபந்தனை விதித்தேன். அதற்குக் காரணம், அதில் ஒக்ரோபர் 26ஆம் திகதி, தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணிலை நீக்கியும், புதிய தலைமை அமைச்சராக மகிந்தவை நியமித்தும், வெளியிட்ட இரண்டு அரசிதழ் அறிவிப்புகளும் அரசமைப்புக்கு முரணானவை, செல்லுபடியற்றவை என்று கூறப்பட்டிருந்தது.

அந்தப் பந்தியை உள்ளடக்கிய தீர்மானத்தை ஏற்றுக் கொண்டால், நான் அரசமைப்பை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டுகளை சுமக்க நேரிடும். பின்னர் அது, எனக்கு எதிராகவும் பயன்படுத்தப்படலாம்.

அதனை நான் ஏற்றுக் கொண்டால், நான் அரசமைப்பை மீறிவிட்டதாக, எதிர்காலத்தில் என் மீது குற்றவிசாரணைத் தீர்மானத்தைக் கொண்டு வர முடியும், என்றும் தெரிவித்துள்ளார். (5)

# எந்தப் பக்கம் வசந்த?

கொழும்பு, நவ.27
ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், காபந்து அரசின் அமைச்சருமான வசந்த சேனநாயக்க தற்போது நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசில் வெளிவிவகார இராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்த வசந்த சேனநாயக்க அண்மையில் இடம்பெற்ற ஆட்சிக் கவிழ்ப்பை அடுத்து மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு தெரிவித்திருந்தார். அதையடுத்து சுற்றுலாத்துறை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். அதன்பின்னர் மகிந்த அரசால் நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத நிலையில் வசந்த சேனநாயக்க மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் சாய்ந்தார். சுற்றுலாத்துறை அமைச்சுப் பதவியிலிருந்து விலகப் போகின்றேன் என்றும் அறிவித்திருந்தார்.

ஆனால் அவரது பதவிக்கு வேறு எவரும் நியமிக்கப்படவில்லை. அதன்பின்னர் கடந்த வாரம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் வசந்த சேனநாயக்க பங்கேற்றார். அதனால் அவர் மீண்டும் மகிந்த அணியின் பக்கம் தாவிவிட்டார் என்று கருதப்பட்டது.

இந்தநிலையில் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டம் அலரி மாளிகையில் நடைபெற்றது. அதில் வசந்த சேனநாயக்க பங்கேற்றுள்ளார். அதனால் அவர் எந்தத் தரப்பில் உள்ளார் என்று மக்களுக்குக் குழப்பமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த வடிவேல் சுரேஸ் அரசியல் குழப்பங்களின் பின்னர் மகிந்த பக்கமும், ரணில் பக்கமும் மாறி மாறித் தாவியிருந்தார். (ற)

# முடிந்தால் மைத்திரி வழக்குப் பதியட்டும்

## சவால் விடுகிறார் சம்பிக்க

கொழும்பு, நவ.27
2015ஆம் ஆண்டு முதல் ஊழல்வாதிகளுக்கு பாதுகாப்பளித்தது யாரென்று எமக்கு தெரியும். போலி ஊடகப் பரப்புரைகளை முன்னெடுக்காது முடிந்ததால் அவற்றுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுங்கள் என்று மைத்திரிக்கு சவால் விடுகிறோம்.

இவ்வாறு சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு அலரி மாளிகையில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேலும் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:

அரச தலைவர் ஆணைக்குழு தொடர்பில் அரச தலைவர் கருத்து வெளியிட்டுள்ளார். போலி ஊடகப் பரப்புரைகளை மேற்கொள்ளாது ஆணைக்குழுவை நியமியுங்கள் என்றும், ஊழல் குற்றச்சாட்டுகள் இருப்பவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யுங்கள் என்றும் பகிரங்கமாக சவால் விடுகிறோம். ஊழல்வாதிகளை சாகல ரட்ணாநாயக்க பாதுகாத்திருந்தார் என்றால் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுங்கள். ஊழல் வாதிகளைப் பாதுகாத்தது யாரென எமக்கும் தெரியும். பொலிஸ் ஆணைக்குழுவும் மைத்திரியிடம்தான் உள்ளது. இலகுவாக அவர் நடவடிக்கையெடுக்க முடியும். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளவரே தலைமை அமைச்சராக நியமிக்கப்பட வேண்டும். அவரின் தனிப்பட்ட விருப்பத்தில் நியமிக்கப்பட முடியாது. அரசமைப்பின் பிரகாரம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் உள்ளவரைதான் நியமிக்க முடியும்.


29ஆம் திகதி நிதியை நிறுத்தும் சட்டத்தை கொண்டுவ்ருவோம். ஹன்சார்டிலும் உள்ளது. அமைச்சரவையும், தலைமை அமைச்சரும் இல்லை. நாடாளுமன்றத்தில்தான் நிதி பலம் உள்ளது. 30ஆம் திகதி அமைச்சர்களுக்கு நிதியை நிறுத்தும் சட்டத்தை கொண்டு வருவோம். மகிந்தவுக்கு கூறுகின்றோம். சட்டவிரோத தலைமை அமைச்சுப் பதவியை கொடுத்துவிட்டு செல்லவும். நாடாளுமன்றத்தை பெரும்பான்மை உள்ளவரை நியமித்துக்கொள்கிறோம். என்றார். (ற)

# மாவீரர்களை நினைவேந்த தயாராகும் துயிலும் இல்லங்கள்
















கிளிநொச்சி கனகபுரம் துயிலும் இல்லம், கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்ட சம்பூர் துயிலும் இல்லம், யாழ்ப்பாணத்தின் உடுத்துறை துயிலும் இல்லம், முல்லைத்தீவு அளம்பில் துயிலும் இல்லம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் ஆகியன மாவீரர்களை நினைவுகூரத் தயார்படுத்தப்பட்டுள்ளன.

see more news in NEWUTHAYAN.COM

# கல்வி வலயங்களுக்கு ஆளுநர் இன்றுபயணம்

யாழ்ப்பாணம், நவ. 27
கல்வி வலயங்களில் நடைபெறுகின்ற செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக வடக்கு மாகாண ஆளுநர்ரெஜினோல்ட் குரே துணுக்காய் மற்றும் கிளிநொச்சி கல்வி வலயங்களுக்கு இன்று செல்லவுள்ளார் என்று ஆளுநர் அலுவலகம் அறிவித்தது.

இன்று காலை 9.30 மணிக்குத் துணுக்காய் கல்வி வலயத்துக்கும் நண்பகல் 1.30 மணிக்கு கிளிநொச்சி கல்வி வலயத்துக்கும் ஆளுநர் செல்லவுள்ளார். (ம-72)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நாவலர் வீதி, நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

**திரு.வே.பி.சண்முகநாதன் J.P**

(நல்லூர் மத்தியஸ்தர் சபை உறுப்பினர், ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் கமநல சேவை-நல்லூர், J/77 மருதடி முதியோர் சங்க செயலாளர், பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் எண்பார்வையாளர்-யாழ்ப்பாணம், அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின்முன்னாள் தலைவர்)



அவர்கள் 26.11.2018 திங்கட்கிழமை கௌரவ மாகாண மேல்நீதிமன்ற நீதிபதி அ.பிரேம் சங்கர் முன்னிலையில் யாழ்ப்பாணம் நீதி நிர்வாக மாவட்டத்தின் சமாதான நீதவானாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**நல்லூர் தெற்கு மக்கள் சார்பாக**
**திரு.க.கணபதி (ஜே.பி)**
**(தலைவர், J/77 முதியோர் சங்கம்)**

(CS/21444)(10)



## வாடகைக்கு விடப்படும்



நல்ல நிலையில் உள்ள மகேந்திரா பிக்கப் வாகனம் வாடகைக்கு விடப்படும். (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

(AKN/597)(1)

**076 697 5133**


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சிவசுப்பிரமணியம்



காரைநகர் ப்லா வோடையைப் பிறப்பிடமாகவும், கனகராயன்குளம் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிவசுப்பிரமணியம் நேற்று (26.11.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார்கணபதிப்பிள்ளை பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தனலட்சுமி மற்றும் யோகராணி ஆகியோரின் அன்புக் கணவரும்சிவகுமாரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2018) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : சிவகுமார் (மகன்)**
**0771319476**
**கனகராயன்குளம் வடக்கு.**

யாழ். கல்வி வலயத்தில் மேலதிகமாக இருந்த

# 46 ஆசிரியர்கள் உடனடி மாற்றம்

## கஸ்டப் பிரதேச பாடசாலைகளுக்குச் செல்கின்றனர்

**யாழ்ப்பாணம், நவ. 27**

**யாழ்ப்பாணக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் தேவையான ஆளணிக்கும் அதிகமாக இருந்த 46 ஆசிரியர்கள் போதிய ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.**

கடந்த வாரம் கல்வி அமைச்சுக்குப் பயணம் மேற்கொண்ட வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களை அழைத்துக் கலந்துரையாடினார். இந்தக் கலந்துரையாடலின்போதுசிலபாடசாலைகளில்தேவைக்கு மேற்பட்டஆசிரியர்கள்பணிபுரிவதுகண்டறியப்பட்டது. இதையடுத்து அவ்வாறான ஆசிரியர்களை கஸ்டப் பிரதேச பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் குறைபாட்டை நிவர்த்தி செய்ய பயன்படுத்தும்படி ஆளுநர் கல்வி அமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலனுக்குப் பணித்திருந்தார். இதையடுத்து உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இந்த மாற்றம் இடம்பெற்றது. (ம-105)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 27
வலிகாமம்வடக்குப்பிரதேசசபைக்குஉட்பட்டஅளவெட்டிப்பொதுநூலகம்தேசியவாசிப்புமாதத்தைமுன்னிட்டு நடத்திய போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு நாளை இடம்பெறவுள்ளது.

அளவெட்டிப் பிரதேச கலாசார மண்டபத்தில் நாளை காலை 9 மணிக்கு இடம்பெறும் நிகழ்வுக்கு வலி. வடக்குப் பிரதேச சபையின் உப அலுவலகப் பொறுப்பதிகாரி தி.தியாகச்சந்திரன்தலைமைதாங்கவுள்ளார். முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விஞ்ஞானப் பீடாதிபதிஜெ.பிரின்ஸ்ஜெயதீபன் முதன்மைவிருந்தினராகக்கலந்துகொள்ளவுள்ளார். சிறப்புவிருந்தினராக வலி. வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் கலந்து கொள்ளவுள்ளார். மதிப்புறு விருந்தினர்களாகவலி. வடக்குப்பிரதேசசபைச்செயலாளர் இ.பகீரதன், அளவெட்டி அருணோதயக் கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன், மல்லாகம் மகா வித்தியாலய அதிபர் யோகராணிதில்லைநாதன், அளவெட்டி அருணோதயா வித்தியாசாலையின்அதிபர் கு.லங்கா பிரதீபன், வலி. வடக்குப் பிரதேச சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.சிவயோகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)


## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில் 13.04.1950
விண்ணில் 27.11.2017

**அமரர் முடியப்பு எட்வேட் றெஜி**

*"என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வான்"*

எங்கள் வாழ்விற்கு மெழுகுவர்த்தியாய் இருந்து
உங்களையே உருக்கி ஒளியூட்டிய
எங்கள் அன்புத் தெய்வமே !
அப்பா வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம்
அப்பா.... அப்பா.. என்று அழுகின்றோம்
கதறுகின்றோம்
அருகில் இல்லையே ! நீங்கள்
ஆண்டொன்று மறைந்து விட்டதே !
அவசரமாய் நீங்கள் போனது போல்
பிரிவு என்பது பாரினிலே தான் என எண்ணி
பரலோகத்தில் இணைந்திருக்க
பரமனிடம் வேண்டுகின்றோம்



நீங்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**

உடுப்புக்குளம், அளம்பில்,
முல்லைத்தீவு.

(CS 21343)(14.17)


## மரண அறிவித்தல்

### திருமதி சிவதேவி சற்குணராசா



பிறப்பு 20.01.1945
இறப்பு 26.11.2018

யாழ். கட்டுவனைப் பிறப்பிடமாகவும், தற்போது மல்லாவியை வசிப்படமாகவும் கொண்ட திருமதி சிவதேவி சற்குணராசா நேற்று (26.11.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்துரை செல்லம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மீனாம்பாள் தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற சற்குணராஜாவின் அன்புமனைவியும் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புத்தங்கையும் சிவநாதன், சிவமணி (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரியும் சசிமிலானி (லண்டன்), சசிந்தன், சசிந்தினி ஆகியோரின் அன்புத்தாயும் கபிரதனின் (லண்டன்) அன்பு மாமியும் சுரேந்தர், பிரவிந்தர், கஜீஷன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.11.2018) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அணிஞ்சியன்குளம் மல்லாவி பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## நூல் வெளியீடும் மணிவிழா நிகழ்வும்

யாழ்ப்பாணம்,நவ 27
ராணிசிறீதரன். எழுதிய "புறங்கைச் சுமை" கட்டுரைத் தொகுதி வெளியீடும் மணிவிழா நிகழ்வும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா தலைமையில் பண்ணாகம் அம்பாள் கலை மன்ற கலாசார மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சத்தியவாக்கு!

வருடங்கள் 33 கடந்தோடிவிட்டன, உதயன் பத்திரிகை தொடங்கப்பட்டு. பல ஆட்சிகள், பல அரசியல்சூழல்கள், பல அச்சுறுத்தல்கள், பல அடக்குமுறைகள், பல போட்டிகள், பல சூழ்ச்சிகள் என எல்லாவற்றையும் கடந்து வந்த இந்த நீண்ட நெடிய பயணம் உதயனைப் பொறுத்தவரையில் இலகுவானதாக அமைந்ததில்லை. நித்தியகண்டம் பூரண ஆயுள் என்பதைப் போலவே ஒவ்வொரு நாளையும் கடந்து வந்திருக்கிறான் உதயன். எல்லாக்காலங்களிலும் அவனது ஒரே ஆறுதலும் பலமுமாக இருந்த, தமது உயிருக்குநிகராக உதயனை விரும்பும் வாசகர்களே என்றும் அவனது உறுதியான பயணம் தொடர்வதற்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள், இருக்கிறார்கள்.

அச்சுறுத்தல்களும் ஆபத்துக்களும் கூடவே வருபவை என்பதால் அவை பற்றி என்றும் உதயன் அலட்டிக் கொண்டதில்லை. ஆனால், அதிகரித்துவரும் அச்சுப் பொருள்களின் விலையேற்றம் மற்றும் அதிகரித்துவரும் விலைவாசி உயர்வுக்கு மத்தியில் பத்திரிகையை அச்சிடுவதே பெரும் சவால் என்கிற நிலையை நோக்கிக்காலம் நகர்ந்துகொண்டிருப்பது குறித்து உதயன் தற்போது உண்மையிலேயே அச்சமடைந்துள்ளான். அச்சுத்தாள்கள் இன்மையும் அச்சுப் பொருள்களுக்கான தட்டுப்பாடும் ஏற்கனவே உதயன் கடந்துவராத பாதைகள் அல்ல.

90களில் யாழ்ப்பாணக்குடாநாடு கொழும்பு அரசின் பொருளாதார முற்றுகைக்குள் தள்ளப்பட்டிருந்த காலத்திலும் அச்சுத் தாள்களைப் பெறுவதும் அச்சுப் பொருள்களைப் பெறுவதும் பெரும்– கடும்சவாலானதாகவே இருந்தது. ஆனால் உதயன் சளைத்துப்போனானில்லை. அன்று சந்தையில் கிடைத்த எந்த அச்சுத்தாளில் ஆயினும் நாளிதழ் வெளிவந்துகொண்டே இருந்தது. ஒவ்வொருநாளிலும் ஒவ்வொரு அளவில் வெவ்வேறு வண்ணங்களில் நாளிதழ் வெளியான நாள்கள் அவை. ஆனால் அன்றிருந்த நிலமையுடன் ஒப்பிடும்போது இன்று நிலமை முற்றிலும் வேறானது.

தொடர்புசாதனங்களின் பெருக்கம், இணையத்தளப் பயன்பாட்டின் அதிகரிப்பு என்பவற்றால் ஏற்பட்டிருக்கும் மின்னியல் ஊடக வளர்ச்சிக்கு மத்தியில் அச்சுப் பொருள்களின் விலையேற்றமும் பன்னாட்டுச் சந்தையில் அச்சுறுத்தல்களாக ஏற்பட்டுவரும் தட்டுப்பாடும் மிகப் பெரும் அச்சுறுத்தலாக மாறி வருகின்றன. அதற்கு ஈடுகொடுத்து பத்திரிகையை வெளியிடுவது என்பது இமாலய சாதனையாகிவிடுகின்றது. இத்தகைய நேரத்தில் உதயனைத் தாங்கிப் பிடிப்பவர்கள் எமது விளம்பரதாரர்களே!

வாசிப்புப் பழக்கம் அருகிவரும் இளம் தலைமுறையொன்றை பெருக்கி வரும் இந்தவேளையில் இதுபோன்ற சவால் அச்சு ஊடகங்களின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கிவிடும். மேற்குநாடுகளில் கடந்த 15 ஆண்டுகளில் இதனைக் காண நேர்ந்திருக்கிறது. அங்கெல்லாம் செய்திப் பத்திரிகைகளும் இதழ்களும் தமது அச்சுப் பதிப்பைச் சுருக்கிக்கொண்டு இணையப் பதிப்புக்கு மாறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. போகிற போக்கில் அத்தகைய நிலை இங்கும் தோன்றுமோ என்கிற அச்சத்தை அச்சுப் பொருள் சந்தை ஏற்படுத்துகின்றது.

இதையெல்லாம் தாண்டி, தொடர்ந்தும் உதயனை எப்படியேனும் வெளியிட்டேயாகவேண்டும் என்று நாம் அர்ப்பணிப்புக் கொண்டிருப்பதற்கு நாள்தோறும் உதயனை வாங்கிப்படிப்பதற்காகவென்றே காத்திருக்கும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களாகிய நீங்கள், மட்டுமே காரணம்.

தெரிந்தோ தெரியாமலோ உதயன் நவம்பர் 27 ஆம் திகதி வெளிவந்தமை தமிழர்களின் அரசியல் வரலாற்றில் நிகழ்ந்த மற்றொரு பரிணமிப்பு. தமிழர்களின் விடுதலைக்காகவும் தமிழ்த் தேசியத்துக்காகவும் தமது இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர்களின் தினமும் உதயனின் பிறந்த தினமும் ஒன்றாகியிருப்பது வரலாற்றில் உதயனின் பணி என்பதை காலம் நிர்ணயம் செய்திருக்கிறது என்றே கூறவேண்டும்.

தமிழர்களுக்காகவும் தேசியத்துக்காகவும் தமதுயிரை ஈகம் செய்த அனைவரையும் மனதிருத்தி துணிவுடனும் நேர்மையுடனும் உண்மையைத் தேடும் தனது பணியை உதயன் தொடரும் என்று இன்றைய தினத்தில் மீண்டும் ஒருமுறை சத்தியவாக்குரைக்கின்றோம்.

# கல்லறைகள் கருத்தரிக்கும்!

## எமது மண்ணின் வீர வித்துக்களை ஞாபகம் கொள்வோம்

மு. ஈழத்தமிழ் மணி

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களை ஈந்து, வித்துடல்களாகப் புதைகுழியில் விடுதலைத் தாகத்தோடு உயிர்த்திருக்கும் மாவீரர்களைத் தட்டியெழுப்பும் தமிழ்த் தேசிய எழுச்சி நாளாக மாவீரர் நாள் மகத்துவம் பெறுகிறது. அந்தவகையிலே எங்கள் மூச்சாகி, எங்கள் வாழ்வுமாகி எங்களையெல்லாம் இயக்குகின்ற ஒப்பற்ற தியாக மறவர்களை இன்றைய தினத்தில் நெஞ்சில் கொலுவிருத்தித் தலை வணங்குகிறோம். 1989 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் நாள் தமிழீழத்தின் முதலாவது மாவீரர் நாள் உணர்வார்ந்த நிலையில் உன்னதமான நிகழ்வாகக் கடைப்பிடிக்கப்பட்டது. அதன் தொடர்நிலையாக இன்று வரைத் தமிழ்த் தேசியத்தின் புனித நாளாக மாவீரர் நாளைத் தமிழ் மக்கள் கடைப்பிடித்து வருகின்றனர். விடுதலை உணர்வை வலுவாகவே பற்றி நிற்கின்றனர்.

**ஒளி முகங்கள் புனிதமானவை!**

மாவீரர் துயிலுமில்லங்களில் மாவீரர் இசைப்பாடல் ஒலிக்க பொதுச் சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்துகின்ற தருணம் ஆத்மார்த்தமானது. கல்லறைகளில் இருந்து ஒளிமுகம் சூடிப் பேசுகின்ற மாவீரர்களின் ஆன்ம நேசம் அற்புதமானது. அவர்கள் கார்த்திகைப் பூவின் வண்ணங்களாய் மொழியும் கனவுப் புன்னகை அழிவற்றது. கண்ணீர் மல்கி நின்றிட ஆன்மங்களை வருடும் உணர்வு புனிதமானது.

“ஒரு விடுதலை வீரனின் சாவு ஒரு சாதாரண இறப்பு நிகழ்வல்ல. அந்தச் சாவு ஒரு சரித்திர நிகழ்வு. ஓர் உன்னத இலட்சியம் உயிர் பெறும் அற்புதமான நிகழ்வு. உண்மையில் ஒரு விடுதலை வீரன் சாவதில்லை. அவனது உயிராக இயங்கி வந்த இலட்சிய நெருப்பு என்றுமே அணைந்து விடுவதில்லை. அந்த இலட்சிய நெருப்பு ஒரு வரலாற்றுச் சக்தியாக மற்றவர்களைப் பற்றிக் கொள்கின்றது. ஓர் இனத்தின் தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பிவிடுகின்றது.” என்று தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கூறிய சித்தாந்தம் தாய்த் தேசமெங்கும் நிலைபெறுகிறது.

**அழிவின்றிய மனபலம்!**

இந்தநிலையில், உணர்வுகளின் வழி உறுதி கொள்வதற்கான திருநாளாக எம்முன்னே இன்றைய நாள் மலர்ந்திருக்கிறது. விழாவாக அன்றி மாவீரர்களின் நினைவாலயங்களின் முன்னே ஒன்றுகூடி விடுதலையின் பற்றுறுதி கொள்வோம். மண்ணில் உறங்கும் மானிடத் தெய்வங்களோடு மனம்விட்டுப் பேசுவோம்.


சிங்களப் பேரினவாதம் தமிழர்களை அடக்கி, ஒடுக்கி அவர்களுக்கான உரிமைகளைத் தர மறுத்த சந்தர்ப்பத்தில் விடுதலைப்போராட்டம் ஆரம்பமானது. தழிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் வல்லரசுகளின் உதவியும் ஆத்ம பலமும் ஆக்கிரமிப்பு இராணுவத்துக்குப் பக்கபலமாய் இருந்து உறுதுணை புரிந்த போதும், தமிழ் மக்களின் பாதுகாப்பு அரணாக இருந்து எத்தகைய தியாகத்தையும் செய்யத்துணிந்த போராளிகளின் மனபலம் உயிர் ஆயுதமாய் நிலைபெற்றது. அழிக்க முடியாத தனிப்பெரும் சக்தியாக தமிழ் மக்களைக் காத்து நின்றது. இப்போதுமாய் வழிநடத்திச் செல்கின்றது. “இந்த மண் மகிழ்வான வாழ்வைப்பெறும் என்ற நம்பிக்கையில் நான் சாவடைகிறேன்” எனச் சொல்லிப் போன ஒவ்வொரு புலி வீரனது உயிர்த்தியாகமும். தியாகப்பதிவுகளும் உணர்வுள் கனன்று இலட்சிய நெருப்பை உருவகித்துக்கொண்டே இருக்கின்றன.

**இலட்சியத்துக்காய் விதையாகிப்போன மாவீரர்கள்!**

விடுதலைப்போரின் முதல் வித்தொன்று 1982 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதியன்று லெப். சங்கராக வீழ்ந்தது. அதன் தொடர்நிலையாய் விடுதலைப்போரின் ஒவ்வொரு மாற்றங்களிலும் வித்தியாசமான தியாக வடிவங்கள் தோற்றம் கொண்டன.

1987 ஆம் ஆண்டு யாழ்குடா வடமராட்சியை முழுமையாக ஆக்கிரமிக்கும் நோக்கோடு படை நடவடிக்கையை மூர்க்கத்தனமாக மேற்கொண்ட சிங்களப் படைகளுக்கு எதிராகக் கரும்புலி கப்டன் மில்லர் மேற்கொண்ட தாக்குதல் வீரதிரமானது. நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைந்திருந்த படைமுகாம் மீது கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் புதிய திருப்புமுனையை மில்லர் ஏற்படுத்தினார். அதன்வழிப்பட்டே அப்போதைய ஜெ.ஆர். அரசு இந்தியாவுடன் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்பது வரலாறு.


தொடர்ந்து இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் அடிப்படையில் அமைதிப்படையாக உருத்தரித்த இந்திய இராணுவம் தாயக மண்ணில் வந்திறங்கியது. ஆனாலும் அது மேற்கொண்ட ஊழித் தாண்டவங்கள் கட்டுமீறிச் சென்றன. இந்தநிலையிலே ஆயுதம் தாங்கிய விடுதலைப்போராட்டம் ஒரு சந்தர்ப்பத்திலே அகிம்சைப் போராட்டமாகப் பரிணாமம் கொண்டது. நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் முன்றலில் லெப். கேணல் திலீபன் தமிழ்மக்களின் பிரச்சினைக்கு



தீர்வு வேண்டி ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்துச் சாகும்வரை உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற்கொண்டார். இலட்சக்கணக்கில் மக்கள் கண்ணீரோடு திரண்டிருக்க 12 நாள்கள் தொடர்ந்த அந்த அகிம்சைப் போராட்டத்தை இந்தியா கண்டு கொள்ளவில்லை. திலீபன் முன்விவைத்த விடயங்களக்கு இறுதிவரை செவிசாய்க்கவில்லை. திலீபன் தியாகச் சாவடைந்தார். அவர் பற்ற வைத்த இலட்சிய நெருப்பு எங்கும் பிரகாசம் தர ஆரம்பித்தது. இதைத் தொடர்ந்து இந்திய இராணுவத்துடனான போர் நடவடிக்கையின்போது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதல் பெண் மாவீரராக 2 ஆம் லெப். மாலதி தனித்துவம் பெறுகிறார்.

இவ்வாறாக 2009 ஆம் ஆண்டு காலப்பகுதிவரை மாவீரர்களின் வீரமான தியாகப் பதிவுகள் ஒவ்வொன்றும் தனித்துவ நிலை பெறுகின்றன. தாய் மண்ணின் விடுதலைக்காக விதையாகிப்போன பல்லாயிரம் மாவீரர்களை இந்தத் திருநாளில் நினைந்து சுடர் ஏற்றிப் பணிவோம். மாவீரர்களின் இலட்சியக்கனவை நிறைவேற்றுவதற்குத் திட சங்கற்பம் பூணுவோம்!

# மாவீரர் தினம் தமிழர்களின் விழுமியமாக்கப்பட வேண்டும்



ஏரம்பு சுப்பையா

தமிழீழம் என்ற உயரிய நோக்கத்துக்காக ஈழத் தமிழர் மத்தியிலிருந்து போராடச் சென்று களமாடிச் சாவடைந்த இளைஞர், யுவதிகளே இன்றைக்கு மாவீரர்களாக மதிப்பளிக்கப்படுகின்றார்கள். இன விடுதலை என்ற பொது நோக்கத்துக்காகத் தமது குடும்பத்தையும், உறவுகளையும் பிரிந்து தமது இனம் சார்ந்த விடுதலைக்காகப் பல்வேறு வழிகளிலும் (அறவழி, ஆயுதவழி) போராடி உயிர் நீத்தவர்களே மாவீரர்களாக அடையாளப் படுத்தப்படுகிறார்கள். சென்ற ஆண்டு வரை நினைவேந்தல் விடயங்களில் தம்மைச் 'சக்கரவர்த்திகளாக' முன்னிறுத்திய பலரை இந்த ஆண்டு மாவீரர் நாள்களில் காணக்கிடைக்கவில்லை என்பது நிதர்சனம்.

### கார்த்திகை வீரர்களை நினைவுகூருகின்றது ஜே.வி.பி.

மக்கள் விடுதலை முன்னணி எனப்படுகின்ற ஜே.வி.பி. தன்னுடைய போராட்ட வீரர்களின் நினைவைக் கார்த்திகை 29ஆம் திகதியன்று எந்தவித சலனங்களும் இல்லாது கடைப்பிடித்து வருவது அறிந்ததே. போரடிச் சாவடைந்தவர்களின் தொடர்ச்சியாக நீடித்து வருகின்ற அந்தக் கட்சியால் வருடம்தோறும் கார்த்திகை 29ஆம் திகதியன்று கார்த்திகை வீரர்களை நினைவுகூர முடிகின்றது. தமிழர் போராட்ட விடயத்தில் போராட்டம் தனியாகவும் அரசியல் தனியாகவும் இருந்ததால், போராட்டம் கைவிட்டுச் சென்ற மாவீரர்களின் நினைவேந்தல்களைக் கட்சிகளால் முன்னெடுத்துச் செல்வதில் பல முரண்நிலைகள் ஏற்பட்டிருந்தன. ஜே.வி.பி. முன்னெடுக்கின்ற நினைவுகூரல்களின்போது எழாத விமர்சனங்கள் தமிழ்க் கட்சிகள் மேற்கொள்கின்ற நினைவேந்தல்களின்போது எழுந்துநிற்பதற்கு இதுவும் காரணமாகலாம். கொழும்பு அரசு பிரச்சினை இல்லை என்றால் வீரப்பேச்சுக்களை விசிறி எறிபவர்கள் இந்த முறை சற்று அமர்த்தி வாசிக்கின்றனர். தென்னிலங்கையில் திடீரென ஏற்பட்ட அரசியல் மாற்றம் சென்ற வருட மாவீரர் தின நிகழ்வு, சிறப்பாக நடந்தது என்றே நினைக்கத் தூண்டியிருக்கிறது.

### மெய்சிலிர்க்க வைக்கும் மாவீரர்களின் துணிச்சல்

மாவீரர்கள் என்பவர்கள் எப்படியெல்லாம் உயிர் நீத்தார்கள் என்று பார்த்தால், தமது கொள்கையை, இரகசியத்தைக் காப்பாற்றுவதற்காகவும், தமது போராட்டத்துக்கு வலுச் சேர்ப்பதற்காகவும் சயனைட் குப்பிகளை உமிழ்ந்தும், மார்பில் குண்டுகளை ஏந்தியம், குண்டுகளைச் சுமந்து பாய்ந்து எதிரியைக் கொன்றொழித்தும், இரகசியம்பேணுவதற்காகத் தம்மைத் தாமே சுட்டுக் கொன்றும் என ஏகப்பட்ட உயிர்த்தியாகங்கள் வெளித்தெரியவரும். இவற்றை விடக் குண்டுத் தாக்குதல்கள், வானூர்தித் தாக்குதல்கள், தற்கொலைத் தாக்குதல்கள், கடற்சண்டைகள் எனக் களமாடிச் சாடைந்து, வித்துடல் கிடைத்தவர்களும் கிடைக்காது போனவர்களும் என மாவீரர்களின் தொகை அதிகம். சாவுக்கு அடிபணியாத அவர்களின் துணிச்சலும், இனப் பற்று என்றைக்குமே மெய்சிலிர்க்க வைக்கும் விடயமே இவ்வாறு இன விடு தலைக்காகப் போராடிய இவர்கள் இந்திய இராணுவத்தாலும் இலங்கை இராணுவத்தாலும் கொல்லப்பட்டார்கள்.

### புலிகளே இறுதிவரைப் போரிட்ட உறுதிமான்கள்

தமிழ் மக்களுக்கானவை என்று சொல்லிக் கொண்டு போராட்ட அமைப்புக்கள் பல துளிர்விட்டிருந்தாலும் தமிழ் மக்களுக்கான இன விடுதலைப் போராட்டத்தில் உச்சக் கட்டப் போரை விடுதலைப் புலிகளே இறுதி வரை மேற்கொண்டிருந்தார்கள். மேற்படி ஆயுதப் போராட்டமானது 1976ஆம் ஆண்டில் வட்டுக் கோட்டைத் தீர்மானத்தின் பின் தமிழீழம் ஒன்றே தீர்வு எனவும் ஆயுதம் ஏந்திப் போராடுவது எனவும் ஆரம்பமாகியிருந்தது. புலிகளின் போராட்டம் மழுங்கடிக்கப்படுவதற்கு முதலில் 2008 நவம்பர் 27ஆம் திகதி வரை விடுதலைப் புலிகளால் மாவீரர் தினம் நடாத்தப்பட்டது. பின்னர் வந்த நாள்களில் இந்தத் தினத்தைத் தமது அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் நிலையே காணப்படுகின்றது. மாவீரர்களுக்கான பொது நிகழ்வு ஒன்றை மக்கள் நினைவுகூருவது ஒன்றும் பிழையான விடயம் அல்ல.

### உயிர் நீத்தவர்கள் வேடிக்கைப் பொருளல்ல

மாவீரர்கள் உயிர்த் தியாகம் செய்வதற்கு முன்னர் அவர்கள் அனுபவித்த பட்டினி, நோய், தூக்கமின்மை, சுற்றிவளைப்பு நெருக்கடிகள், காயப்பட்டமை எனப் பல்வேறு துன்பங்களுக்குப் பின்னரே சாவு நிச்சயமாகியிருக்கிறது. அவர்கள் சார்பான அந்த நினைவை மேற்கொள்ளும் போது அவர்களை வேடிக்கைப் பொருளாக்குகின்ற வகையில் பலரும் செயற்படுவது கவலைக்குரியது. 2008ஆம் ஆண்டுக்கு முன்னர் நடைபெற்ற மாவீரர் நிகழ்வுகள் எதிலும் பங்குபற்றாத பலர் தற்போது அரசியலுக்காக முன்னின்று செயற்படும் நிலையே காணப்படுகிறது. நாட்டு விடுதலைக்காகச் சாவடைந்தவர்களுக்கு அவர்களின் ஊர்களிலுள்ள ஒரு வீதிக்கு அவர்களின் பெயர்களை வைக்கும் நிலையில்கூடத் தமிழ் அரசியல்வாதிகள் இல்லை என்பதுதான் இங்குள்ள உண்மை நிலைவரம்.



### அரசியலாக்கி அழியவிடாமல் விழுமியமாக நிலைநிறுத்தப்பட வேண்டும்

மாவீரர்களின் சாவு எப்போதும் நினைவுகூரப்ப வேண்டியது அவர்களை இந்த மண்ணுக்குத் தந்த பெற்றோர்கள் என்றைக்குமே மதிப்பளிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களது சாவுகளைப் போலியாக அல்லாது புனிதமாகக் கடைப்பிடிப்பதே சிறந்தது. வெறும் சுடரெற்றுவதற்கு அப்பால் ஈழத்தமிழரின் மனங்களில் அவர்களுக்கென இடமொதுக்கப்பட வேண்டும். அரசியலாக, மேடைப் படங்களாக அல்லாமல் அது எங்களுடைய விழுமியம் என்கிற நிலைக்கு மாவீரர்கள் நாள் மாற்றியமைக்கப்பட வேண்டும். பண்பாட்டுடன் கலந்ததாக மாவீரர் தினம் உருமாற்றப்பட வேண்டும். அதைக் கடைப்பிடிப்பது விழுமியமாகவும், அதுவே தொடர்ந்து தமிழர் நம் பண்பாடாகவும் மாற்றமுறுதல் வேண்டும். இந்த நிகழ்வு அரசியல் ஆக்கப்பட்டால் விரைவில் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து மாவீரர்கள் அந்நியப்பட வாய்ப்புண்டு. எனவே இந்த நாளை அரசியலாக்காது தமிழர்களின் விழுமியங்களில் ஒன்றாக மாற்ற முனைவதே சரியானது.


ஓர் இனத்தின் மிக நீண்ட கனவு ஒன்றுக்காகப் போராடி உயிர் நீத்த மாவீரர்கள் எமக்காகவும், எமது சந்திகளுக்காகவும், இந்த மண்ணுக்காகச் செய்த தியாகங்களை மதிக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கே உண்டு.

மாவீரர்களின் சாவுகளையும் அவர்கள் சந்தித்த வேதனைகளையும் அரசியல் என்ற விடயத்துக்காகத் திசை திருப்புவது ஏற்புடையதல்ல. இதற்கு ஒரு போதும் இடமளிக்காது மக்களே தமது பிள்ளைகளை நினைவு கூருவது சரியானது. அந்த நினைவுகூருதல் மனங்களில் மாத்திரமாக இருந்தால்கூட போலியற்றதாக இருந்தால் அதுவே உறுதியானது என்பதை உணர்வோமாக!

## காலம் : கார்த்திகை

**நாழிகை : 6.05**

அந்தப் பிளம்பு சோதி வடிவாகிவிட்டது
பார்வைக்கு எட்டாது
போனாலும்
உணர்வுக்கு எட்டுகிறது
உணர்வு மனக்கிளர்ச்சியாகி
பின்னர் உள்ளே
புதைந்து காலத்தில்
தடம் பதித்துச் சென்றிருக்கிறது
இதை நம்ப முடிகிறதா...?
இந்த உண்மை நெடுங்காலமாக
எனக்குள் புதைக்கப்பட்டிருக்கிறது
நான் மண்ணாகிப் போனதால்
அழுங்கிப் போய்க் கிடக்கிறேன்
பாதசாரிகளுக்கு அறவே தெரியவில்லை.
அவர்கள் மேலே நான் கீழே.
முளைக்க வைத்தாலும் மிதித்து
விட்டுச் செல்கிறார்கள் மண்ணுக்கு
மனதிருப்பது அவர்களுக்குத்
தெரியாதிருக்கலாம் ஆனால்
எனக்குள்ளிருக்கும் பிளம்பை
ஏன் அவர்கள் உணர்கிறார்களில்லை
சொன்னால்போல்
நானும் இப்போதுதான்
தேடிப் பார்க்கிறேன் என்னுள்
கிடந்த சோதிகள் ஒன்றாகி,
திரண்டு எங்கோ போய்விட்டன.
எப்படி நிகழ்ந்தது இது இன்று
ஏதும் நாள், கோள் மாற்றமா...?



ஜோதா

# கார்த்திகை கண்மணிகள்



வேம்போடு கேணியூர் கிருஷ்ணா.

உயிருந்து கொண்டு
உடலம் பியத்தனர்-இவர்
உலக உருண்டையில்
இரண்டறக் கலந்தனர்
தமிழர் நம் நெஞ்சினில்
உரமெனப் பதிந்தனர்...

தாயொடு தாய்மண்ணே
மேலேன்றவர்
தலைவர் முன்னிதை
சத்தியம் செய்தனர்
சித்தம் அதுவென
சிந்தனை மேலிட
சரித்திரம் படைத்தனர் -இவர்
சித்திரம் போலெம் சிந்தையில்
தேங்கினர்...

புகை போகா இடைதனில்
புயலெனப் புகுந்தீர்-எதிர்
அயர்ந்து தூங்க விடா
அஸ்திரமானீர்-நம்
ஈழத் திருநாட்டின்
அத்திபாரமாவீரே...!

உலகம் உய்த்தறிய வீரம்
தந்தீர்-அதுவே
உயர்வென உயிர்த்தானம்
செய்தீர்...!

விடிவுக்கு முந்திய
சாவுதான் ஆயினும்
விடுதலை வேள்வியில்
ஆகுதிப் பொருளானீர்...!

சாவதை வென்றிட்ட
சந்தனப் பேழைகள் சரித்திரம்
மீட்டுவோம்
வாட்டிடும் துயரிலும்-அவர்
உயர்வதைப் பாடுவோம்...!

தம் வாழ்வைத் துறந்து
நாம் வாழ வீழ்ந்தகர்
வீரத்தைப் போற்றுவோம்
கார்த்திகைத் திருநாளில்
கண்விழிக்கும் கண்மணிகள்
மண்மலரப் பேசுவோம்
உயிருருகும் கீதமதில்
உருகித் திளைப்போம்
மாவீரச் செம்மல்களே
போற்றி... போற்றி...

# சுத்தமான வீரன் நீ !



சுத்தமான வீரன் நீ
சொந்தநலன் நோக்காத
(சுத்தமான...)

சுவிஸ் வங்கிப் பெட்டகத்தின்
சுவையறியாத் தலைவன் நீ
புவித்தலைமைக்
கேற்றவனாய்ப்
போற்றுதற் குரியவன் நீ
(சுத்தமான...)

வெளிநாட்டு வைப்புகளில்
வேறுவேறு பெயர்களிலே
களிப்போடு பணஞ்சேர்த்த
கயவர்கள் மத்தியிலே
(சுத்தமான...)

சொந்தமனை யாளுடனே
சொத்தான பிள்ளைகளையும்
இந்தமண்ணுக் கிரையாக்கி
இதிகாசம் படைத்திட்ட
(சுத்தமான...)


கதிரைக்கும் காசுக்கும்
கண்ணியத்தை விலைபேசும்
மதிகெட்டோர் மத்தியிலே
மனந்தளம்பா திருந்திட்ட
(சுத்தமான...)

ஆட்சியாளர் கைகளுக்குள்
அகப்பட்ட நரிக்கூட்டம்
சூழ்ச்சிசெய்யப் போர் முனையில்
தோல்விகளைச் சந்தித்த
(சுத்தமான...)

தன்குடும்பம் வாழ்தற்கு
தன்னினத்தை அடகுவைத்த
சின்னமனம் கொண்டவர்கள்
தீயவர்கள் மத்தியிலே
(சுத்தமான...)

அருள்மணி

# பாமாலை



மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை
முடிசூடும் தமிழ்மீது உறுதி!
வழிகாட்டி எம்மை உருவாக்கும்
தலைவன் வரலாறு மீதிலும் உறுதி!
விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி!
இழிவாக வாழோம்! இனிமேலும்
ஓயோம் உறுதி!

தாயகக்கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப்பேழைகளே!
இங்குகூவிடும் எங்களின் குரல்மொழி
கேட்குதா? குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர் உங்களின்
தோழிகள் உறவினர் வந்துள்ளோம்!
அன்று செங்களம் மீதிலே
உங்களோடாடிய தோழர்கள்
வந்துள்ளோம்!

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்!
வல்லமை தாருமென்றுங்களின்
வாசலில் வந்துமே வணங்குகின்றோம்!
உங்கள் கல்லறை மீதிலும் கைகளை
வைத்தொரு சத்தியம் செய்கின்றோம்!
சாவரும்போதிலும் தணலிடைவேகிலும்
சந்ததி தூங்காது!

கவிஞர் புதுவை இரத்தினதுரை

# திரும்பவும் எழுந்து வாருமப்பா!



மண்ணுக்காய் உயிர் நீத்த மாவீரரே
மாபெருந் தியாகத் தீபங்களே
மலைபோன்ற படை உமை எதிர்த்த போதும்
மனந் தளராமல் மோதிய மறவர்களே


மானத்துக்காக மடிந்தாய் ஒரு பெண்
மண்ணுக்காக மரணித்தாள் நம் ஈழப்பெண்
மறக்காமல் நாம் நினைக்கையிலே-உன்
மடிசுமந்த தாயவளே

சீர்கேட்டுக் கிடக்குதய்யா எம் இனமே
சீராக்க இனி யார் வருவாரய்யா
பண்பாடு போற்றி வாழ்ந்த எம் இனமே
பாழாகி நொந்து வருந்துதைய்யா
நிம்மதியின்றி உறங்குகிறோம்-இன்று

யாரிடம் சொல்வோம் நாம் இதனை
சாம்பலில் இருந்தெழும் பறவைபோல்
திரும்பவும் வந்து நம் இனம் சாருமைய்யா
போதுமையா போதைகளும்
வதைகளும்-இதைப்
போக்கவாவது திரும்பவும்-நீவிர்
எழுந்து வாருமய்யா

ஞா.துரை, குருநகர்

# நாங்கள் இந்த மண்ணின் மைந்தர்கள்



வந்தேறு குடிகளல்ல
வாழ்வுவளம் பெற
வல்லமை பெறுவோம்.

முகங்கொடுக்கும்
பொதுப்பரீட்சை
முதுசொமாய் ஆகட்டும்
வாழ்வின் வசந்தம்தரும்
வளமாக அமையட்டும்.
கற்றுத்தந்த பாடங்களை
பற்றுடனே பயின்றிடுவோம்
வெற்றி நாளும்
உண்டெனவே
தற்றுணிவு கொண்டிடுவோம்.

எழுவான் திசையின்
விரிகதிராய் நாமிருப்போம்
தழுவிடும் தென்றலாய்
தரணியை ஆள்வோம்.

கிருஷ்ணவேணி சிங்கராஜன்

## மகிந்தவுக்கு...

மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணைகள் எதிர்வரும் 30ஆம் திகதியும், டிசெம்பர் 3ஆம் திகதியும் விசாரணைக்கு எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட 122 நாடாளுமன்ற உறுப்பினர்களின் சத்தியக் கடதாசிகளுடன் கடந்த வெள்ளிக்கிழமை இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி பி.பத்மன்சூரசேன மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய நீதியரசர்களால் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அதன்போதே மேற்கண்டவாறு அறிவிக்கப்பட்டது.

இந்த மனுவில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டுள்ள தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச உட்பட 49 பேர் அடங்கிய அமைச்சர்கள் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர். (ற-31)

## ரவீந்திர...

அதிபரிடம் கோரியுள்ளார்.

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கு உட்பட முக்கியமான பல வழக்குகளை விசாரித்து வரும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி நிசாந்த சில்வா விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளவர் என்று அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன குற்றம்சாட்டியிருந்தார். அந்தக் குற்றச்சாட்டு பொய்யானது என்று பொலிஸ் மா அதிபருக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அறிக்கை அளித்திருந்தனர்.

முக்கியமான விசாரணை அதிகாரி மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி விசாரணைகளில் தலையீடு செய்ய முயன்ற அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன மீது பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் செனிவிரத்ன பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவுக்கு எழுத்து மூலம் பரிந்துரைத்துள்ளார். (ற-5)

## நாடாளுமன்றக்...

7 பேர் கொண்ட நீதிபதிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் கடந்த 9ஆம் திகதி அதி சிறப்பு அரசிதழ் வெளியிடப்பட்டு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உயர் நீதிமன்றில் 13 அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அரச தலைவரின் தீர்மானம் அரசமைப்புக்கு உட்பட்டது என்று தெரிவித்து 10க்கும் மேற்பட்ட மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.


PLC சக்தி
BUSINESS LOAN



உங்கள் வியாபாரத்திற்கான உந்துசக்தியும் வாழ்க்கையில் ஜெயித்திடுவதற்கான தைரியமும்

உங்கள் வியாபாரத்தின் வெற்றிக்காக பீப்பள்ஸ் லீசிங் உதவிக்கரம் நீட்டுகிறது. உங்கள் வியாபாரத்திற்கு தேவையான மொத்த கொள்வனவுகள், குறுகியகால முதலீடு, வியாபாரத்தை விஸ்தரித்தல், வியாபார பன்முகத்தன்மை மற்றும் ஏனைய நிதித் தீர்வுகளுக்கு பீப்பள்ஸ் லீசிங் சக்தி வியாபாரக் கடன் மூலம் பல சலுகைகள் உங்களுக்காக.

- தேவைக்கு ஏற்ப குறுகியகால அல்லது நீண்டகால கடன்களை பெற்றிடும் வசதி
- கடனை பகுதிகளாக செலுத்தி தவணையை குறைத்திட முடியும்
- இலவச ஆயுள் காப்புறுதி
- கடனை மொத்தமாக செலுத்தும் போது 90% வரை வட்டிக்கு விலக்களிப்பு
- சொத்துகள் மற்றும் வாகன பத்திரங்களுக்கு கடன்களைப் பெற்றுக்கொள்ளும் வசதி

இல. 1161, மருதானை வீதி, கொழும்பு 08
HOTLINE 0112 206 300
PEOPLE'S LEASING


## சுடோக்கு

என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | | 9 | | 2 | 8 | |
| | | | | 2 | | | 6 | |
| 7 | | 4 | | | | | | 3 |
| 4 | 6 | | 1 | | | | | |
| | | 1 | | | | | 3 | |
| | | | | 8 | 7 | | | |
| | | | | | | 7 | | 2 |
| | 4 | | | 5 | | | | |
| 3 | | | | | 6 | 5 | | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 1 | 7 | 2 | 6 | 9 | 8 | 3 |
| 7 | 3 | 6 | 4 | 9 | 8 | 2 | 5 | 1 |
| 9 | 2 | 8 | 3 | 5 | 1 | 7 | 6 | 4 |
| 6 | 9 | 3 | 8 | 7 | 5 | 4 | 1 | 2 |
| 1 | 5 | 4 | 2 | 6 | 3 | 8 | 7 | 9 |
| 8 | 7 | 2 | 1 | 4 | 9 | 6 | 3 | 5 |
| 2 | 6 | 7 | 5 | 3 | 4 | 1 | 9 | 8 |
| 3 | 8 | 9 | 6 | 1 | 2 | 5 | 4 | 7 |
| 4 | 1 | 5 | 9 | 8 | 7 | 3 | 2 | 6 |

அடிப்படை உரிமை மனுக்களை விசாரணை செய்த 3 நீதியரசர்கள் கொண்ட குழு, அரச தலைவரின் அரசிதழுக்கு இடைக்காலத் தடை விதித்தது. அந்த மனுக்கள் மீதான விசாரணைகள் எதிர்வரும் 4ஆம், 5ஆம், 6ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

அந்த மனுக்களை விசாரணை செய்யத் தற்போது 7 நீதிபதிகள் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. பிரசன்ன ஜெயவர்த்தன, பிரியந்த ஜெயவர்த்தன, புவனேக அலுவேஹேரே, விஜித் மலல்கொட, சிசிர டி அப்ரூ, மாதுறு பெர்னாண்டோ என 7 பேர் அடங்கிய உயர் நீதிமன்ற குழுவைத் தலைமை நீதியரசர் நலின் பெரேரா நியமித்துள்ளார். எதிர்வரும் 3ஆம் திகதி முதல் விசாரணை இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## பிறந்தநாள்...

ருந்தது. அந்தக் காணி நேற்றுக் காலை நான்கு பேரால் துப்புரவாக்கப்பட்டது. அங்கு வந்த பொலிஸார் துப்புரவாக்கல் நடவடிக்கையைத் தடுத்தனர். துப்புரவு செய்தவர்களின் அடையாள அட்டைகளைப் பறித்துச் சென்றனர். அவர்கள் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு அவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டு அடையாள அட்டைகளை அவர்களிடம் பொலிஸார் மீளக் கையளித்துள்ளனர்.

இவை நடைபெற்ற சிறிது நேரத்தின் பின்னர் பிறந்தநாளைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளுடன் எம்.கே.சிவாஜிலிங்கம் அங்கு சென்றார். அங்கு நின்றிருந்த பொலிஸார் அவரைத் திருப்பி அனுப்பினர். அதையடுத்து சிவாஜிலிங்கமும் குழுவினரும் தீருவிலில் அமைந்துள்ள குமரப்பா, புலேந்திரன் நினைவுத் தூபிக்குச் சென்றனர். அங்கு பதாகையைக் கட்டிக் கேக் வெட்ட முயன்றனர். அப்போது அங்கு சென்ற பொலிஸார் அவர்களிடம் இருந்து கேக் மற்றும் பாதாகையைப் பறிமுதல் செய்தனர். சிவாஜிலிங்த்தையும் ஏனையே இருவரையும் கைது செய்து முச்சக்கரவண்டியில் ஏற்றி வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

கைது செய்யப்பட்ட சிறிது நேரத்தில்பொலிஸார் அவர்களை விடுவித்தனர். எனினும் கேக், பாதாகைகளை அவர்களிடம் மீள வழங்கவில்லை.

சட்டங்களுக்கு அமையக் கைது செய்தோம் என்றும், சட்டரீதியாகவே பொருள்களைப் பறிமுதல் செய்தோம் என்றும் தெரிவித்த பொலிஸார் இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளைத் தெரிவிப்போம் என்றும் கூறினர் எனச் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இந்தச் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் அங்கு செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்களையும், அந்தப் பகுதியில் நின்றவர்களையும் பொலிஸார் அலைபேசிகளில் பதிவு செய்ததுடன், அங்கிருந்த மோட்டார் சைக்கிள்களையும் ஒளிப்படம் எடுத்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டனர் என்று கூறப்படுகின்றது. (ற-26,173)

## கடற்படை...

கடற்படை அதிகாரி லெப்.கொமாண்டர் பிரசாத் சந்தன ஹெற்றியாராச்சிக்கு கடற்படை தளம் ஒன்றில் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன பாதுகாப்பு அளித்ததுடன், தப்பிச் செல்ல உதவினார் என்ற





**மேடம்:** உங்களின் முக்கிய செயல் ஒன்று நிறைவேற தாமதமாகலாம். தொழில்வியாபாரத்தில்பெற்ற அனுகூலத்தை தகுந்த முறையில் பாதுகாப்பீர்கள்.

**இடபம்:** குடும்ப நலனில் அக்கறை கொள்வீர்கள். நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கும். சராசரி பணவரவுடன் நிலுவைப் பணமும் வசூலாகும்.

**மிதுனம்:** உங்கள் செயல் நிறைவேற இஷ்ட தெய்வ அருள்பலம் துணை நிற்கும்.எதிர்மறையாக இருந்த விஷயங்கள் அனுகூலம் தரும்.

**கடகம்:** அடுத்தவரின் விவகாரத்தில் கருத்து சொல்ல வேண்டாம். குடும்பத்தேவை நிறைவேற தாமதமாகலாம். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**சிங்கம்:** உங்களின் மனசாட்சிக்கு அதிக முக்கியத்துவம் தருவீர்கள். கூடுதல் உழைப்பினால் உற்பத்தி விற்பனையின் அளவு சீராக இருக்கும். புதிய வகையில் செலவு உருவாகும்.

**கன்னி:** சமயோசித புத்தியால் சில நன்மை பெறுவீர்கள். மனதில் மகிழ்ச்சியும் தன்னம்பிக்கையும் ஏற்படும்.தொழில், வியாபாரம் செழித்து திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள்.

**துலாம்:** உங்கள் எண்ணமும் செயலும் உற்சாகம் பெறும். வாழ்வில் வளம் பெற புதிய வாய்ப்பு உருவாகி வளரும். தொழில் வியாபார இலக்கு எளிதில் பூர்த்தியாகும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த உதவி குறைந்த அளவில் கிடைக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை சுமாரான அளவில் இருக்கும். பணவரவை அத்தியாவசிய செலவுக்கு பயன்படுத்துவீர்கள்.

**தனுசு:** சுயகவுரவத்தை சோதிக்கும் விதமாக சிலர் பேசுவர். சொந்த பணியில் கவனம் கொள்ளுங்கள். உடல்நிலை சீராக இருக்கும்.

**மகரம்:** எதிர்கால நல்னில் அக்கறை கொள்வீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபார வளர்ச்சி அபரிமிதமான முன்னேற்றம் தரும்.

**கும்பம்:** பிறரை விமர்சிக்க உங்களை சிலர் தூண்டுவர். தொழில் வியாபார நடைமுறை மந்தகதியில் இயங்கும். சேமிப்பு பணம் அத்தியாவசிய செலவுகளுக்கு பயன்படும்.

**மீனம்:** முக்கிய விஷயத்தில் சுமுகத்தீர்வு ஏற்படும். பணியை முழுமனதுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி நிலை உருவாகும்.

குற்றச்சாட்டில் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

இந்த விசாரணைகளின் முக்கிய சாட்சியான லெப்.கொமாண்டர் லக்சிறி கலகமகே, அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன மற்றும் கடற்படை அதிகாரிகளைக் கொண்ட குழுவினரால் நேற்றுமுன்தினம் அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

கடற்படை உணவகத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் லெப். கொமாண்டர் லக்சிறி இருந்தபோது அங்கு சென்ற அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவும் ஏனைய ஐந்து க்டற்படை அதிகாரிகளும் அவரை அச்சுறுத்தியதுடன் தாக்கவும் முற்பட்டனர். அவரைத் துப்பாக்கியைக் காட்டி சுட்டுவிடுவேன் என்று அச்சுறுத்தினர் என்றும் கூறப்படுகிறது. இதுதொடர்பாக கோட்டே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தம்மை அவர்கள் பிடிக்க முனைந்தனர் என்றும், எனினும் தப்பி வந்து விட்டேன் என்றும் லெப்.கொமாண்டர் லக்சிறி கலகமகே முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அவர் தாக்கப்பட்டார் என்று கடற்படை அதிகாரிகள் கூறியுள்ள போதும் முறைப்பாட்டில் அச்சுறுத்தப்பட்டார் என்றே கூறப்பட்டுள்ளது என்று பொலிஸ் தரப்புக் கூறியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொழும்பு ரெலிக்கிராப் ஊடகம் வெளியிட்ட செய்தியில், அட்மிரல் விஜேகுணரத்னவுக்கு எதிராக சாட்சியமளித்த லெப்.கொமாண்டர் லக்சிறி கலகமகே நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் கடற்படைத் தலைமையக உணவகத்தில் இருந்தபோது, முன்னாள் கடற்படைத் தளபதியான அட்மிரல் விஜேகுணரத்ன அங்கு வந்தார். கடற்படைத் தலைமையகத்துக்குள் லெப். கொமாண்டர் கலகமகேவைப் பார்த்த, அட்மிரல் விஜேகுணரத்ன, மோசமான மொழியில் கத்தியதுடன், அவரை இழுத்து வருமாறும் உத்தரவிட்டார். அப்போது, லெப்.கொமாண்டர் கலகமகே மோதலைத் தவிர்க்கத் தப்பி ஓடத் தொடங்கினார். அட்மிரல் விஜேகுணரத்னவின் உதவியாளர் ஒருவர் கைத்துப்பாக்கியுடன் அவரைத் துரத்தினார். அவர் சுட்டுவிடுவார் என்ற அச்சத்தில் கலகமகே துப்பாக்கியைத் தட்டி விட்டுக் கடற்படைத் தலைமையகத்துக்கு வெளியே தப்பி ஓடினார். இந்த மோதலின் போது லெப்.கொமாண்டர் கலகமகேயின் அலைபேசி கீழே விழுந்தது. அதனை அட்மிரல் விஜேகுணரத்னவின் உதவியாளர் பறித்துக் கொண்டார்' என்று குறிப்பிட்டுள்ளது. (ற-5)

27.11.2018

**சிறப்பிதழ்**

# 34 ஆவது

# அகவையில் காலடி பதிக்கும்

# உதயன்

**ஊடக சுதந்திரத்துக்கான பன்னாட்டு விருதை தனதாக்கிய இலங்கையின் ஒரேயொரு பத்திரிகை**

## சிகரத்தைத் தொட்ட சாதனை



உதயன் குழுமத்தினருக்கும் வாசகர்களுக்கும் முதற்கண் அன்பார்ந்த ஆசிகளும் வாழ்த்துக்களும். உதயன் இன்று 34 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றான் என்பது சிகரத்தைத் தொட்ட சாதனை யாகும். பல தடைகளையும், இழப்புக்களையும் தாண்டிச் சாதனைகளை சாதித்திருக்கக்கூடிய பத்திரிகை உதயன். சாதாரண வாழ்க்கையின் தகவல் பரிமாற்றத்தில் இன்று நேருக்குநேராய் நாம் இருந்து 'வீடியோ சட்' செய்வது வரை வளர்ந்து இருக்கும் பிரமிக்கத்தக்க தொழில்நுட்ப வளர்ச்சியில் அவைகளுக்கெல்லாம் ஈடுகொடுக்கும் முகமாகத் தனது காத்திரமான ஊடக சுதந்திர பண்பியல்புகளோடு அனைத்து வர்க்கத்தினருக்கும் ஏற்றாற்போல் உதயன் வெளிவந்து கொண்டிருப்பது சிறப்பம்சமாகும். தமிழ் மக்களது உள்ளங்களில் நிலைத்திருக்கும் உதயன் அனைவரதும் உயர்வுக்காகத் தனது பணிகளை இன, மத, பேதமின்றி தொண்டாற்றி சிறப்படைய வாழ்த்துகின்றேன். உதயன் குழுமத்தின் தலைவர் மற்றும் அனைவருக்கும் சிறி மஹாசரஸ்வதி அம்பாளின் திருவருள் துணை என்றென்றும் கிடைத்திடப் பிரார்த்தித்து ஆசிர்வதிக்கின்றேன்.

குருமுதல்வர்,
**சிவசிறி சபா.வாசுதேவக்குருக்கள்,**
சிறிசரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவில்,
வீணாகானகுருபீடம், சண்டிலிப்பாய்.

## சவால்களுக்கு மத்தியில் பணி தொடரும் உதயனை வாழ்த்துகின்றேன்



உதயன் பத்திரிகை தனது 34ஆவது அகவையில் கால் பதிக்கின்றவேளை உதயன் பத்திரிகைக் குடும்பத்தைப் பாராட்டி வாழ்த்த விரும்புகிறோம். உதயன் பத்திரிகையின் முதன்மை ஆசிரியர் ரி.பிறேமானந், முதன்மை ஆசிரியர் என்கின்ற வகையில் ஆற்றும் பணி சிறப்பானது. பாராட்டப்பட வேண்டியது. எமது இந்த வாழ்த்துக்களும் ஆசீர்வாதங்களும் உதயன் பத்திரிகைக் குடும்பம் இன்னும் சிறப்பாகவும் துணிவாகவும் நடுநிலைமையாகவும் தமிழ் மக்களுக்குப் பணியாற்ற அதிக பலத்தையும் மன உறுதியையும் தரவேண்டும் என்றே ஆசிக்கிறோம்.

34 ஆண்டுகளாக உதயன் பத்திரிகை தமிழ் பேசும் மக்களுக்கு மகத்தான பத்திரிகைப் பணி புரிந்து தமிழ் மக்களின் போராட்டகால அனுபவங்களை வரலாறாகப் பதிந்துள்ளது. இடம்பெயர்ந்து செல்லும்போது அச்சு இயந்திரத்தைத் தம்முடன் தூக்கிச்சென்று இடம்பெயர்ந்த இடத்திலும் பத்திரிகைப் பணியாற்றி போராட்ட கால வரலாற்றைப் பதிந்த பெருமை உதயன் பத்திரிகைக்கு உண்டு.

1985ஆம் ஆண்டு தொடக்கம் ஊடக அடக்கு முறைக்கு முகங்கொடுத்து பல செய்தியாளர்களை இழந்து உள்நாட்டு வெளிநாட்டு விருதுகள் பாராட்டுக்களைப்பெற்று இன்று தலைநிமிர்ந்து நிற்கும் உதயன் பத்திரிகைக்குத் தமிழ்பேசும் மக்கள் பெயரால் வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவிக்க விரும்புகிறோம்.

இன்று ஊடகத்துறையை யாரும் இயக்கலாம். அதேவேளை ஊடகத்துறையை யாரும் கட்டுப்படுத்த முடியாது என்ற நிலை தோன்றியுள்ளது. சமூக ஊடகங்களின் தோற்றம் அதன் வேக வளர்ச்சி நவீன தொழில் நுட்பம் அதன் நுண்ணியத்தன்மை வாய்ந்த தொழில் நுட்பக் கருவிகள் என்பன எல்லோரையும் ஊடகத்தின் உள்ளே கொண்டு வந்துவிட்டது.

அண்மைக்கால இலங்கை நாட்டின் அரசியற் குழப்ப நிலைகளின் போது நாடாளுமன்றில் என்ன நடந்தது யார் யாரெல்லாம் எப்படி எப்படி நடந்து கொண்டார்கள் என்ன செய்தார்கள் என்பதை முழு உலகுமே சமகாலத்தில் வியப்போடும் விறுவிறுப்போடும் பார்த்து ஆச்சரியப்பட வைத்தது இன்றைய இந்த நவீன ஊடத்தின் தன்மையே. சமகாலத்தில் பார்க்காவிட்டாலும் உடனடியாகப் பார்க்கவும் திரும்பத் திரும்பப் பார்க்கவும் தமது கோபக் குறிப்புகளையும் கேலிக் கருத்துக்களையும் உலகம் முழுவதுமே பார்க்கும் படியாகத் தரவும் வைத்தது இன்றைய இந்த நவீன ஊடகத்தின் தன்மையே.

இன்றைய சவால்கள் மத்தியில் உதயன் பத்திரிகை தன் பணியை இனிதே தொடர இறையாசி வழங்குகிறோம். வாழ்த்துகிறோம்.

**மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை**
யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர்.



## சளைக்காது சலிக்காது மக்கள் பணியாற்றுபவன்

உதயன் 34ஆவது ஆண்டில் காலடி வைக்கும் இந்தநாள் ஒரு பெருநாளாகும்.

ஆழமான தடைகளை எல்லாம் தாண்டி மக்கள் கதியற்றுச் செயலற்று இருந்தபோதெல்லாம் சளைக்காது, சலிக்காது மக்கள் பணியாற்றி வந்த உதயன் 27.11.2018 அன்று தனது 34ஆவது வயதில் காலடி வைப்பது மட்டற்ற மகிழ்ச்சி.

நடுநிலை தவறாது நாளிதழ் என்னும் பெருமைக்குரிய மகுடம் தாங்கி மக்கள் உணர்வறிந்து காலநேரமறிந்து மக்களோடு மக்களாக எழுத்துப் பணியாற்றி வரும் நிர்வாகத்தினரையும் இந்தச் சந்தர்ப்பத்தில் வாழ்த்துகின்றோம்.

உங்கள் பணி தொடர எங்கள் நிறைவான வாழ்த்துக்களும் நல்லாசிகளும் உரித்தாகட்டும்.

**செ.மோகனதாஸ்,**
சந்நிதியான் ஆச்சிரமம்,
செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

## அபார சாதனை



ஈழத்திருநாட்டின் மக்களுக்காக உதயமான ஊடகங்களில் உதயன் பத்திரிகை தொடர்ந்து உறுதியாக நிலை பெற்றிருப்பது பெருமைக்குரிய விடயமாகும். நித்தமும் மக்களுக்குத் தகவல்களைச் சுமந்துவரும் உதயன், 34ஆவது ஆண்டில் காலடி வைப்பதையிட்டு வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன்.

உதயன் பத்திரிகையின் எழுச்சிக்காக இரவு பகலாக உழைத்துவரும் ஆசிரிய பீடத்தினர், நிர்வாகிகள், பணியாளர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான நல்லாசிகள் உரித்தாகுக.

கொடுமையான போரின் மத்தியிலும் உதயன் பத்திரிகை வெளிவந்தமை அபார சாதனை என்றே கூறவேண்டும். ஆழக்கிடங்குவெட்டி நில அறைக்குள் நின்று, விமானக் குண்டுவீச்சுக்கு மத்தியில் பத்திரிகை வெளிவருவதற்கு உழைத்தவர்களை மறக்கமுடியாது. நல்லூர் கைலாச பிள்ளையார் கோவில் தெற்கு வீதியில் நிலஅறையில் இயந்திரங்களின் உதவியுடன் மின்சார விளக்கில்லாத சூழலில் பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியில் உதயன் தன் கடமையைச் சிறப்பாகச் செய்தது.

உதயன் பத்திரிகையின் உன்னத பணிக்காகச் சிலர் தங்கள் உயிர்களையும் தியாகம் செய்தனர். பணியாளர்கள் சிலர் ஆயுததாரிகளால் தாக்கப்பட்டுக் குற்றுயிராகத் தப்பினர். எனினும் உதயனின் வருகை தடைப்படவில்லை. 33 வருடகால எதிர்நீச்சலைச் சந்தித்து தொடரும் பத்திரிகையின் எதிர்காலவளர்ச்சிக்காக அருள்மிகு துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றோம். பத்திரிகைகள் பொதுமக்களுக்காக நிதானமாகத் தம் கடமையைச் செய்ய வேண்டும். பத்திரிகா தர்மத்தைப் பாதுகாக்கவேண்டும். மக்கள் மனங்களில் பத்திரிகை பற்றிய அபிப்பிராயம் என்றும் உயர்வானதாக விளங்க வேண்டும். மக்களைப் பத்திரிகைகள் நல்ல பாதையில் அழைத்துச் செல்லவேண்டும். பத்திரிகைகளின் பண்புகள் வாசகர்கள் மத்தியில் நிலைபெறத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

வயதால், வல்லமையால், அனுபவத்தால், நிலைத்துநிற்கும் உதயன் பத்திரிகை தூய பாதையால் தம் பணியை மேம்படுத்தவேண்டும் என்று வேண்டி, உதயன் வாசகர்களுக்கும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
தலைவர், சிறி துர்க்காதேவி தேவஸ்தானம்,
தலைவர், சிவபூமி அறக்கட்டளை,
உபதலைவர், அகில இலங்கை இந்துமாமன்றம்.



## தமிழ் மக்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்க்கும் பத்திரிகை உதயனே



நம் தாயக மண்ணிலிருந்து மக்களின் குரலாக ஒலிக்கும். "உதயன்" பத்திரிகையானது ஆரம்பமாகி 34 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இந்த நன்நாளிலே எமது வாழ்த்துக்களையும் ஆசீர்களையும் வழங்கி நிற்கிறோம்.

உதயன் பத்திரிகையானது உண்மையிலேயே மக்களின் நாளாந்த செய்திப் பசிகளை போக்கி நிற்கிறது. காலையில் எழுந்ததும் உதயன் பத்திரிகையைப் பார்க்க வேண்டும் என்று ஆவலோடு ஏங்கி நிற்கும் ஏராளமான மக்கள் இருப்பதைக் காணும்போது உதயன் பத்திரிகையின் மேன்மையை எண்ணி மகிழ்ச்சி அடைகிறோம்.

பல்வேறு விதமான தாங்க முடியாத நாட்டுப் பிரச்சினைகள் வந்தபோதும், எந்தச் செய்தியையும் தவற விடாமல் உடனுக்குடன் தந்து மக்களின் மனங்களிலும் வாழ்விலும் ஏற்படும் பதற்றங்களையும் நீக்குகிறது. மக்களின் மனங்களுக்கு ஆறுதலையும், அமைதியையும் கொடுத்து தமிழ் மக்கள் அனைவராலும் ஆவலோடு எதிர்பார்க்கும் பத்திரிகையாகத் திகழ்கிறது.

இன்றைய நாள்களிலும், அரசியல் பெரும் குழப்பநிலை தோன்றி உலக நாடுகளிலேயே பெரும் பரபரப்பை ஏற்படுத்திய பல பிரச்சினைகள் நடைபெற்ற நாள்களிலும் அனைத்தையும் விவரமாகக் கொடுத்து தமிழ் அரசியல் தலைவர்களின் நிலைப்பாடுளையும் தெளிவாகக் கூறி ஆறுதல் கொடுக்கும், உற்சாகம் ஊட்டும் பத்திரிகையாக உதயன் திகழ்கிறது என்பதை எண்ணி மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். தொடர்ந்தும் இதேபோல் எம் தமிழ் உலகிற்கும் அனைத்து மக்களுக்கும் உண்மையோடும் நீதியோடும் மகிழ்வோடும் திகழ ஆசீருடன் வாழ்த்துகளையும் தெரிவிக்கின்றோம்.

அருள்தந்தை. அ.ம.ஸ்டீபன்,
ஆலோசகர், செபமாலைத்தாசர்சபை
யாழ்ப்பாணம்.

## வியத்தகு துணிவு தமிழினத்தின் தனித்துவத்துக்குக் கட்டியமாகிறது



எத்தகைய இடரின் போதும் உதயன் பத்திரிகை அஞ்சாநெஞ்சத்துடன் எவருக்கும் அடிபணியாது செயற்பட்டு வருவது தமிழினத்தின் தனித்துவத்துக்குக் கட்டியம் கூறுவதாக அமைகிறது. நீதி, நேர்மை, துணிவு, தன்னம்பிக்கை, சுதந்திர வேட்கை கொண்ட உதயன் அநீதியைத் தட்டிக் கேட்பதற்குப் போர்க்கோலம் கொள்வதில் தனித்துவமுடையவன். 'அஞ்சாமை திராவிடர் உடமை' என்பதை உலகுக்குப் பறைசாற்றி நிற்கும் உதயன் பாரதி கூறியது போல் பயமெனும் பேய்தனை அடித்துப் பொய்மைப் பாம்பைப் பிளந்து குருதி குடிக்கும் வீரம் படைத்தவன். இதன் முதன்மை ஆசிரியர், ஏனைய துறைசார் ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், நிர்வாகிகள் அனைவரும் மதம், மொழி, அரசியல் வேறுபாடின்றி நீதியை நிலைநாட்டும் தனித்துவத்தோடு செயற்பட்டு வருவதைப் பலமுறை பாராட்ட வேண்டியுள்ளது. அவர்கள் பணி தொடரட்டும். இந்தப் பத்திரிகை தமிழ் போல் என்றும் இளமையாக வாழ எமது வழிபடு தெய்வமாகிய சிறிசிவகாம சுந்தரி சமேத சிறிமத் நடராஜப் பெருமானை மனமொழி மெய்களால் பிரார்த்திக்கின்றேன். நமச்சிவாய வாழ்க.

**சி.சக்திகிரீவன்,**
செயலாளர் , இந்து சமயப் பேரவை,
யாழ்ப்பாணம்.

## அஞ்சாமையால் நேர்த்தியான சேவை

கடந்த 33 ஆண்டுகளாக தாயக மண்ணில் இருந்து மக்களின் குரலாக ஒலித்துக்கொண்டிருக்கும் உதயன் பத்திரிகைக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

உண்மை, நேர்மை, அஞ்சாமை ஆகியவற்றைக் கைக்கொண்டு தனது நேர்த்தியான சேவை மூலமாக தமிழ் பேசும் மக்களின் இதயங்களில் ஆழமான இடத்தைப் பிடித்துள்ளது உதயன். உதயன் பத்திரிகை மக்களுக்குப் பல்லாண்டுகாலம் சேவையாற்ற எல்லாம் வல்ல விநாயகரை வேண்டி நிற்கின்றேன்.

**ஜெ. முத்துக்குமார சாமி,**
தலைவர்,
கொழும்புத்துறை மேற்கு, விநாயகர் ஆலயம்.

## பீனிக்ஸ் பறவைபோல மிளிர்கின்றான் உதயன்



உதயனுக்கு இன்று பிறந்தநாள். தனது 33 ஆவது அகவையைப் பூர்த்தி செய்து 34 ஆவது அகவையில் தடம் பதிப்பதையிட்டு பேருவகை அடைகின்றேன். 1985 ஆம் ஆண்டு தொடக்கம் தங்குதடையின்றி வரும் முதலாவது நாளிதழ் உதயனாகும். எத்தனையோ இடர்களையும் தடைகளையும் தாண்டி பீனிக்ஸ் பறவைபோல உயர்தொடும் பத்திரிகையாக உதயன் மிளிர்கின்றான். இன்று மக்கள் மனங்களில் நீங்காத இடம் பெற்றுத் திகழ்கின்றான்.

இந்த இனிய பொன்னான நன்னாளில் அவன் இன்னும் பல தசாப்தங்கள் ஊடகப் பணியில் உயர்ந்து நிற்க எல்லாம்வல்ல அம்பிகையின் பாதங்கள் பணிந்து உதயன் குடும்பத்தில் பணியாற்றும் அனைவருக்கும் எனது உள்ளார்ந்த நல்லாசிகளைத் தெரிவித்து அமைகின்றேன்.

**சிவசிறி சோமஸ்கந்த தண்ட பாணிக தேசிகர்,**
இந்துமத குரு பீடாதிபதி.
முதன்மைக் குரு,
வல்வை சிறி முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்,
வல்டிவெட்டித்துறை.

## சமயங்களுக்கிடையிலான உறவுக்குப் பணியாற்றுபவன்



உதயன் பத்திரிகை தனது 34ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் மகிழ்வான இந்த நேரத்தில் உதயன் பத்திரிகையோடு 34 ஆண்டுகளும் நெருங்கிய தொடர்பில் இருந்தமையால் உதயன் பத்திரிகைக் குடும்பத்துக்கு எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மகிழ்கிறேன்.

1985ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி உதயன் பத்திரிகை மின்சார நிலைய வீதியில் தன் பணியை ஆரம்பித்த பின்னர் இறுதியாண்டு குருத்துவ மாணவனாகக் கல்விகற்றுக் கொண்டிருந்த நான் தவக்காலத்தில் பயன்படுத்தப்படுகின்ற சிலுவைப்பாதை சிந்தனைகளைப் பிரசுரிக்கும்படி கோரி உதயன் பணிமனைக்குச் சென்றேன். முதன்மை ஆசிரியராக கானமயில்நாதன் அமர்ந்திருந்தார். முன்பின் தெரியாவிட்டாலும் என்னை அன்போடு வரவேற்றார். கத்தோலிக்க பகுதிக்குப் பொறுப்பாக இருந்த வசாவிளானைச் சேர்ந்த எஸ்.ஜே.பி.இரட்ணதுரையை அழைத்தார். அவர் ஏற்கனவே குருமடத்தில் கல்வி கற்றவராக இருந்தமையால் எனக்கு அறிமுகமானவராக இருந்தார். சிலுவைப்பாதை சிந்தனைகள் 14 நிலைகளைக் கொண்டிருப்பதால் அதனை இரண்டு ஞாயிறு தினங்கள் பிரசுரிப்போம் என்று முடிவு செய்து பிரசுரித்தார்.

அன்று முதல் இன்றுவரை உதயன் பத்திரிகையுடனான எனது உறவு வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது. புனித வளன் கத்தோலிக்க அச்சக அதிபராக நான் பணியாற்றிய காலத்தில் (1997 - 2007) அப்போது உதயன் பத்திரிகையில் பணியாற்றிய வித்தியாதரனின் வேண்டுகோளுக்கிணங்க ஊரடங்கு வேளையிலும் பல தடவைகள் உதயன் பத்திரிகையைப் புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சடித்துக் கொடுத்திருக்கிறேன்.

உதயன் பத்திரிகை தமிழ் மக்களுக்கான தன் செய்திப் பணியில் கத்தோலிக்க மக்களுக்கும் செய்திப்பணியாற்ற வேண்டும் என்பதில் அன்று முதல் இன்றுவரை உறுதியாகவே இருந்து வருகிறது. ஞாயிறு சிந்தனை தவக்கால சிந்தனை மற்றும் சிறப்புத் தினங்களுக்கான கட்டுரை வேறு முக்கிய தேவை ஏற்படும் போதெல்லாம் அதற்கான கட்டுரை என்று கத்தோலிக்க ஆக்கங்களை வெளியிட்டுக் கொண்டே வந்திருக்கிறது. இவற்றைவிட யாழ்ப்பாண மறைமாவட்டச் செய்திகள், ஆயரின் அறிக்கைகள், கத்தோலிக்க செய்திகள் என்று கத்தோலிக்கத்துக்குத் தேவை ஏற்படும் போதெல்லாம் உரிய முக்கியத்துவத்துடனான இடத்தை வழங்கியே வந்துள்ளது.

2015ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை ஒவ்வொரு ஞாயிறு தினத்திலும் உதயன் பத்திரிகையின் சிறப்பு இணைப்பான சூரியகாந்தியில் கிறிஸ்தவ ஞாயிறு என்னும் பகுதியை உருவாக்கித் தந்து கிறிஸ்தவ மக்களுக்குக் கிறிஸ்தவ செய்திப்பணி ஆற்றிக் கொண்டு வருகிறது. கத்தோலிக்க மக்களின் நலன் கருதி தரப்படும் இந்தப் பகுதியைக் கத்தோலிக்க மக்கள் மட்டுமன்றி இந்து மக்களும் படிக்கின்றனர், பயனடைகின்றனர். இன, மத நல்லிணக்கம் புரிந்துணர்வு பற்றி அதிகம் பேசப்படும் போது உதயன் பத்திரிகை சமயங்களுக்கிடையிலான நல்லுறவையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்த ஆற்றும் பெரும் பணியாக கிறிஸ்தவ ஞாயிறு பகுதியைக் கருதலாம். உதயன் பத்திரிகை கத்தோலிக்க மக்களுக்கு ஆற்றும் செய்திப்பணி தொடர நன்றி. வாழ்த்துக்கள்.

**அருள்திரு ஜீபன் மரியாம்பிள்ளை,**
ஊடக வருகை விரிவுரையாளர்,
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்,
(உதயன் பத்திரிகை சமயங்களுக்கிடையிலான புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் கிறிஸ்தவ ஞாயிறு பகுதி எழுத்தாளர்)

## உதயனுக்கு வாழ்த்துக்கள்

நீலமணித் திருநாட்டின்
சீலம் சிறக்கவென வந்த
'உதயன்' நாளிதழே,
காலம் பல கடந்து
கதைகள் பல மாறினாலும்
ஓலமிடும் ஈழமக்கள்
அவலங்கள் ஆதங்கங்கள்
உலகறிய வைத்து - அவர்
ஆறுதல் தீரப் பல வழியமைத்து
ஓங்கி ஒலித்திடும் - இன்று
34 ஆம் வயதில் காலடி பதித்து
பல நூறாண்டு காலங்கள்
நீடூழி வாழ
அதிசய விநாயகரின் அருள்
கொண்டு வாழ்த்துகின்றேன்.

இ.கிருஸ்ணரூபன்,
செயலாளர்,
அதிசய விநாயகர் ஆலயம்,
பொதுச் சந்தைஇ மல்லாவி.



## சூரிய சந்திரர்கள் உதயமாகும் காலம்வரை உதயமாகவேண்டும்



மக்களுக்கு ஆற்றும் சேவையை மகேசன் சேவையாகக் கருதி தன்னலமற்ற தினசரி சேவை ஆற்றி வரும் உதயன், சூரிய சந்திரர்கள் உதயமாகும் காலம் வரை உதயமாகவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

உதயமாகும் 34ஆவது உதயனின் குழும இயக்குநர், பணியாளர்கள் அனைவருக்கும் எனது ஆசிகளும் துர்க்கா தேவியின் திருவருளும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க வையகம், வளர்க உதயன் சேவை

**பிரம்மசிறி சுந்தர.**
**செந்தில்ராஜ சிவாச்சார்யார்,**
முதன்மைச் சிவாச்சார்யார்,
தெல்லிப்பழை துர்க்காபுரம் சிறி துர்க்காதேவி தேவஸ்தானம்.

## தமிழர்களின் உரிமைக் குரலாய் வெளிவரும் ஒரேயொரு பத்திரிகை

பல இன்னல்களைக் கடந்து முப்பத்து மூன்று வருடங்களை நிறைவு செய்யும் உதயன் பத்திரிகை வடக்கிலிருந்து தமிழர்களின் உரிமைக் குரலாய் வெளிவரும் ஒரே ஒரு பத்திரிகை. போர்க் காலத்தில் உதயன் பத்திரிகையின் சேவை தமிழ் மக்களால் மறக்கமுடியாத ஒன்று. நடுநிலை தவறாமல் ஆன்மிகம், கலை, இலக்கியம் இன்னும் பல்சுவையான இதழாகத் தொடர்ந்து தமிழ் மக்களுக்கு உதயன் சேவை செய்ய வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**சிவசிறி மகா தர்மகுமார குருக்கள்,**
செயலாளர்,
இந்து மகா சபை,
மன்னார் மாவட்டம்.

## இனிதே பயணம் தொடரட்டும்

பத்திரிகைத் துறையில் இன்று 33ஆவது வயதைப் பூர்த்தி செய்யும் உதயன் பத்திரிகைக்கு எமது இதய பூர்வமான வாழ்த்துக்கள். பத்திரிகைகள் என்பது மக்களின் அன்றாட வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளையும் கொண்டுசென்று சேர்க்கின்ற பெரும் பணியைச் செய்கின்றது. அந்த வகையில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகின்ற உதயன் பத்திரிகை இன்று 34 வயதை அடைந்துள்ளான். உதயன் பத்திரிகை இனிதே அதன் பயணத்தைத் தொடர நாமும் வாழ்த்துகின்றோம்.

**ஜெ.மயூரக் குருக்கள்,**
செயலாளர்,
அந்தணர் ஒன்றியம்,
வவுனியா மாவட்டம்.

## அறிவு ஒளியைப் பரப்புகின்றது உதயன் நாளிதழ்

உதயன் உதயமாகி முப்பத்து மூன்று வருடங்கள் முடிவடைந்து இருக்கின்றன. மூத்த பத்திரிகை என்ற விதத்தில் முத்திரை பதித்திருக்கின்றான். இது ஒரு சாதனை. பெயருக்கு ஏற்ற விதத்தில் அறிவு ஒளியைப் பரப்புகின்ற இலக்கில் உதயன் ஈழத்தின் வட புலத்தில் அதிகளவு மக்களை கடந்த மூன்று தசாப்த காலத்தில் சென்றடைந்திருக்கின்றான். அதுவும் ஒரு சாதனை. போர்ச் சூழலிலும் இடம்பெயர் சூழ்நிலைகளிலும் கடும் சவால்களுக்கு மத்தியில் உதயன் உலா வந்திருக்கின்றான். அதுவும் ஒரு சாதனை. அறிவியல், ஆன்மீகம், அறிவிப்புக்கள், விளையாட்டு, சினிமா, சிறுவர் பகுதி என அனைத்துத் தரப்பினரையும் ஈர்க்கக் கூடிய விதத்தில் கட்டுரை, கவிதை, கதை எனப் பல வடிவங்களில் விடயங்களைத் தாங்கி வெளிவரும் உதயன் தொடர்ந்தும் சிறப்பாக வெளி வருவதற்கு எல்லாம் வல்ல இறைவனுடைய திருவருளையும் பூஜ்ய குருதேவரின் குருவருளையும் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

நட்சிதாகாசா,
**சுவாமி சிதாகாசானந்தா, சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்.**

## துணிச்சலுடன் செயற்படும் உதயன்



தனது 34ஆவது அகவையில் காலடிவைக்கும் உதயன்பத்திரிகை குழுமத்துக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சிஅடைகிறேன்.

சவால்கள் மிகுந்தகால கட்டங்களில் மிகவும்துணிச்சலாக செயறபட்டு நாட்டுநிலவரங்களைஉண்மைச் செய்திகளாக மக்களிடத்தில் கொண்டுசேர்த்தபெருமைஉதயன்பத்திரிகைக்குஉள்ளது. இந்த அச்சமற்ற செயற்படுகளுக்காகஉதயன்பத்திரிகைசெய்தியாளர்கள் உயிரிழப்புக்களையும் தழுவவேண்டிய சூழ்நிலைக்கு உள்ளானார்கள். தொடர்ச்சியான அழுத்தங்கள், கெடுபிடிகள், தாக்குதல்கள், உயிர்அச்சுறுத்தல்கள் இவை எல்லாவற்றையும் தாண்டி உதயன் பத்திரிகை சற்றும் தளராது உண்மைச் செய்திகளை மக்களிடத்தில் கொண்டு சேர்ப்பதில் மிக கருத்தாக செயற்பட்டு வருகின்றமையானது பாராட்டுதலுக்குரியது.

தொடர்ந்தும்இந்தஉன்னதபணியினைமுன்னெடுத்து செல்வதற்குச் எனதுவாழ்த்துதல்களையும்ஆசிகளையும்தெரிவிப்பதோடு இதுவரை காலமும் அயராது பணியாற்றிய நிர்வாகக் குழுவினருக்கும்அனைத்துப் பணியாளர்களுக்கும்எனதுபாராட்டுதல்களையும்தெரிவித்துக் கொள்கிறேன்.

*இரா. சம்பந்தன்*
எதிர்க்கட்சிதலைவர் - இலங்கை நாடாளுமன்றம்
தலைவர், தமிழ் தேசியக் கூட்டமைப்பு

## உறுதியான தடத்துடன் ஊடகப்பணி தொடரும்



உதயன் பத்திரிகை சவால்கள் நிறைந்த தனது ஊடகப் பணியில் 34ஆவது அகவையை ஆரம்பிக்கும் இந்த மகிழ்ச்சிகரமான தருணத்தில் என்து நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் உதயனது ஊடகப்பணி மென்மேலும் சிறப்புற்று வளர்ந்து வாசகர்களுக்கு நற்பயன் நல்க இறையாசி வேண்டித் துதிக்கின்றேன்.

தனது மக்கள் பணியில் உதயன் கடுமைமிகு சவால்கள் பலவற்றை எதிர்கொள்ள நேர்ந்தது. அத்தனை சந்தர்ப்பங்களிலும் அனைத்து சவால்களுக்கும் துணிச்சலுடனும் பொறுமையுடனும் முகம் கொடுத்து தனது அப்பழுக்கற்ற நேர்மைத்தன்மை, மதிப்புறு வாசக நெஞ்சங்களின் ஆதரவு என்பவற்றின் உதவியுடன் சவால்களையெல்லாம் வென்றெடுத்தது. உதயன் தனது ஊடகப்பணியை வெற்றியுடன் தொடர், முன்னெடுக்க வாய்ப்புக் கிட்டியுள்ளமை குறித்து உவகை அடைகிறேன். உதயனது வளர்ச்சியில் முன்னின்றுழைத்த நிர்வாகிகள், பணியாளர்கள் மற்றும் உதயனின் மக்கள் சேவையில் நேரடியாகவும், மறைமுகமாகவும் பங்கு கொண்டுழைத்த, உழைத்துவரும் நெஞ்சங்கள் குறித்துப் பெருமை கொள்கின்றேன்.

அதேசமயம், கடந்த 33 ஆண்டுகளாக உதயன் பயணித்த நேரான, சரியான பயணத்திலிருந்து சற்றேனும் தடம் மாறாது. தனது மக்களுக்கான ஊடக சேவையைத் தொடர்ந்து முன்னெடுப்பான் என இந்தத் தருணத்தில் எடுத்தியம்புகிறேன். உதயன் உங்கள் பத்திரிகை. தொடர்ந்து எதிர்காலத்திலும் உங்கள் பத்திரிகையாகவே இருந்து உங்களுக்கு ஊடகப் பணியாற்றும் என உறுதி கூறுகிறேன்.

*ஈ.சரவணபவன்,*
நாடாளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணம்- கிளிநொச்சி மாவட்டங்கள்,
தலைவர்,
உதயன் குழுமம்.



## உதயன் 34ஆவது ஆண்டில் வாழ்க, வளர வாழ்த்துகிறோம்



உதயன் பத்திரிகை 34 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதற்கு எமது வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

உதயன் வரலாறு, தமிழினம், தமிழ் மண் தம் விடுதலைக்காக, விடிவுக்காகப் போராடிய வரலாற்றுச் சுவடுகளின் வழியில் எத்தனையோ கொலைகள், அச்சுறுத்தல்கள், அழிப்பு நடவடிக்கைகளை எதிர்கொண்டும் ஓயாது, தலைசாயாது, துணிச்சலுடன் அர்ப்பணிப்புடன் மீண்டும் உயிர் பெற்று வாழ்கின்றது, வளர்கின்றது ஊடகப்பணிபுரிந்து வருகிறது என்பது வரலாற்றுப் பதிவில் பெருமைப்படும் செய்தியைத் தருகிறது.

உதயன் எதிர்கொண்ட அச்சுறுத்தல், அவலங்களின் முக்கிய சந்தர்ப்பங்களில் நானும் பார்த்துத் துயரடைந்திருக்கிறேன். நிகழ்வுகளில் சந்தித்திருக்கிறேன் என்பது வரலாற்றுச் சாட்சியம்.

இலங்கையில் தமிழ் ஊடகத்துறை ஜனநாயகப் பணிக் காலத்தில் உயிர்களைப் பணயம் வைத்தும் உயிர்களைக் கொடுத்தும் அவலங்களைச் சந்தித்தமையை யாரும் மறக்க முடியாது. அவர்கள் அனைவருக்கும் நாம் தலை வணங்குவோம்.

உதயன் பத்திரிகைக் குடும்பம், ஆசிரியர்கள், செய்தியாளர்கள், பணியாளர்கள் தம்மை முழுமையாக அர்ப்பணித்து முப்பத்து மூன்று ஆண்டுகள் ஊடகத்துறையில் அறிவியல், புதிய இலத்திரனியல் தொழில்நுட்பம் உலகில் பரிணாமம் பெற்றிருந்த பொழுதும் மக்களிடையே வாசித்தல், அறிவு ஆற்றல் பெறுதல், பழமையும் புதுமையும் தேடலும் படைப்பும் என்பனவற்றை வளர்த்தெடுப்பதில் ஆக்கமும் ஊக்கமும் கொண்டு மேம்படுத்தி வருவதில் உதயன் வெற்றி பெற்றிருக்கிறான்.

அதற்கும் மேலாக அடக்கி ஒடுக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் தம் உரிமைக்காக, தம் விடுதலைக்காக, தம் ஆட்சிக்காகப் போராடுவதற்கும் அந்த மக்கள் சமுதாயத்தை உருவாக்குவதில் கொள்கைப் பிடிப்போடு, இலட்சியப் பற்றோடு வழிநடத்துவதில் உதயன் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்து வெற்றிபெற வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

*மாவை சோ.சேனாதிராசா,*
நாடாளுமன்ற உறுப்பினர்,
தலைவர், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி.

## ஆக்கிரமிப்புக்களை விஞ்சி நின்றவன்!



34ஆவது அகவைக்குள் தடம் பதிக்கும் உதயனுக்கு வாழ்த்துச் செய்தி ஒன்று வழங்குவதில் மக்கள் பிரதிநிதி என்பதற்கப்பால் உதயனின் ஒரு நிரந்தர வாசகனாக மட்டற்ற மகிழ்ச்சியுடன் ஆத்ம திருப்தியும் அடைகின்றேன்.

எண்திசை செய்திகளையும் பாராட்டிப் படித்திட இலத்திரனியல் ஊடகங்களில் ஆக்கிரமிப்புக்களையும் விஞ்சிநின்று தனக்கென தாயக தேசத்தில் இடம் பிடித்திருக்கின்றான் உதயன். உதயனை வாழ்த்திட, நிறுத்திட, குரலை நசிக்கிட கயவர்கள் பலர் முயன்றிட்ட போதெல்லாம் நெஞ்சை நிமிர்த்தி நிலை தடுமாறாமல் தடம் மாறா இலக்கில் நிமிர்ந்து நின்றவன் உதயன். இனியும் உதயனை வீழ்த்த முடியாது. நான் என்ற நம்பிக்கையோடு தேசமெங்கும் செய்திகளைக் காவிச் சென்றான். அச்சு தவிர்த்து ஊடக தர்மம் பேணி நடுநிலை தவறாது பல்சுவைச் செய்திகளையும் தொடர்ந்தே வழங்கிட உதயன் துணிவுடன் வலம்வர உழைத்துக்கொண்டிருக்கும் உதயன் குழுமத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் எனது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

*செல்வம் அடைக்கலநாதன்,*
நாடாளுமன்ற உறுப்பினர்,
குழுக்களின் பிரதித் தவிசாளர் அலுவலகம், நாடாளுமன்றம்,
தலைவர் - தமிழ் ஈழ விடுதலை இயக்கம்.

## தனக்கே உரித்தான தைரியத்துடன் வலம்வர வாழ்த்துகிறேன்



தாயக மண்ணில் இருந்து தமிழ் பேசும் மக்கள் வாழும் உலகெங்கும்உறங்காமல் வலம்வரும் உதயனுக்கு 27.11.2018 வயது 34. நாலாபக்கமும் நல்ல பல செய்திகளைத் தமிழ் மக்களின் கைகளிலே காலை வேளையிலேயே தவழவைத்த பெருமை தனித்துவமானது. கல்லும் முள்ளும் நிறைந்த கரடுமுரடான பாதையிலே கனகச்சிதமாக இன்றுவரை நடைபோடுகிற வரலாறு சாமானியமானதல்ல. நெருக்குவாரங்கள், அராஜகங்கள், அடக்குமுறைகளை உடைத்தெறிந்து உண்மைகளை உலகுக்கு உச்சரிக்கும் உதயன் இன்னும் உயர்ந்துநின்று தனக்கே உரித்தான தைரியத்துடன் வலம்வர வாழ்த்துகிறேன்.

தமிழ் மக்களின் குரலாய் பிறந்ததில் இருந்து இன்றுவரை இம்மியளவும் பிசகாது நடுநிலையாக இருந்து நாசூக்காகத் தகவலை வெளியிடுவதே அதன் தனிச்சிறப்பு. ஆறு தசாப்தங்களாகத் தீர்வேதுமின்றி அகிம்சைப் பேராட்டம், ஆயுதப் போராட்டம் என்று நீண்ட போரின் பின்னரான அரசியல் சாணக்கியப் போராட்டம் இப்போது தொடர்கிறது. இதில் தனிப்பெரும் பத்திரிகையாக எமது போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் உதயன் அதன் குழுமம் இம்மியேனும் இடர்படாமல் நல் ஆரோக்கியத்துடன் தொய்வேதுமின்றித் தொடர்ந்து பயணிக்கவேண்டும்.

தமிழ் மக்களின் அரசியல், பொருளாதாரம், கலை, பண்பாடு, சுகாதாரம்இ மற்றும் விளையாட்டு உலக அரசியல் நிலவரம் அன்றாடச் செய்திகளுடன் நாளும் வலம்வரும் உதயன் நலமே பயணிக்க நல் வாழ்த்துகளையும் இதயபூர்வ ஆசிகளையும் அன்போடு பகிர்கிறேன்.

*திருமதி. சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா,*
நாடாளுமன்ற உறுப்பினர்,
வன்னித் தேர்தல் மாவட்டம், மல்லாவி.

## ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் பெருமை சேர்ப்பவன்



வடக்குத் தமிழர் தாயகத்திலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகை 34ஆவது வருடத்தில் காலடி பதிப்பது உதயனுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் பெருமை சேர்ப்பதாகும். தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை வெளி உலகுக்குக் காட்டியதில் மிகப் பெரிய பங்காற்றி அதற்காகவே பல உயிர்த் தியாகங்களைச் செய்த பத்திரிகையாக உதயன் பத்திரிகை திகழ்கிறது. அரசியல் அற்ற நடுநிலையாகத் தமிழ் மக்களுடைய இறைமையை நோக்கிப் பயணிக்கின்றது. தொடர்ந்து இவ்வாறான சேவையை உதயன் வழங்கவேண்டும் என்று மன்னார் மாவட்ட மக்கள் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*சார்ள்ஸ் நிர்மலநாதன்,*
நாடாளுமன்ற உறுப்பினர்,
வன்னித் தேர்தல் மாவட்டம்.

## நெருக்குவாரங்களுக்குள்ளும் தொடர்ச்சியாக வெளிவந்தவன்



பத்திரிகை உலகில் 33 ஆண்டுகளைத் தாண்டி 34 ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் உதயன் பத்திரிகைக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ் மக்களின் அபிமான பத்திரிகைகளில் ஒன்றாகத் திகழும் உதயன் பிரத்தியேகமாகப் போர்ச் சூழ்நிலையின்போது கஷ்டங்கள், அச்சுறுத்தல்கள், நெருக்குவாரங்களுக்கு மத்தியிலே தொடர்ந்து பத்திரிகையை வெளிவரச் செய்து மக்களுக்குச் செய்திகள் உரிய முறையில் சென்றடைய வழிசெய்தது.

மக்களுக்கு போர்க் காலச் செய்திகளை உடனுக்குடன் வழங்கியது மாத்திரமன்றி தமிழ் மக்களுக்குத் தேவையான தகவல்களையும் வழங்கி வந்தது. அதிலும் குடாநாட்டு மக்கள் வெளியுலகத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்த காலகட்டத்தில்கூட நாட்டு நடப்பையும் உலக நடப்பையும் மக்கள் சரியாக அறியக்கூடிய வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. அதேபோல் போருக்குப் பிறகும் தனது ஊடகப் பணியைச் சிறப்புறச் செய்து வருகின்றது. பல்வேறு காலகட்டங்களில் செய்திகளினூடாக நாட்டு நிலமைகளை உடனுக்குடன் வெளிப்படுத்தி வந்ததால் உதயன் பத்திரிகை தமிழ் மக்கள் மத்தியில் குறிப்பாக வடபகுதி மக்கள் மத்தியில் மிகப்பெரும் செல்வாக்கைச் செலுத்தி வந்தது.

இந்தவகையில், பத்திரிகைத் தர்மத்தைக் கடைப்பிடித்து உதயன் பத்திரிகை சரியான பாதையில் தனது ஊடகப் பணியைத் தொடர வேண்டுமென்று கேட்டு, உதயனின் வளர்ச்சிக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*த.சித்தார்த்தன்,*
நாடாளுமன்ற உறுப்பினர்
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.

# மக்கள் சேவையாளனுக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்கள்



தமிழ் மக்களின் உள்ளத்திலும், உணர்விலும் இரண்டறக் கலந்திருக்கும் ஓர் இனத்துவ உறவாகவே 'உதயனை' நான் கருதுகிறேன். ஈழவிடுதலைப் போராட்ட காலத்திலும் சரி இனவிடுதலைப் போர் மௌனிக்கப்பட்டதற்குப் பின்னரான இன்றைய காலகட்டத்திலும் சரி என்றுமே எமது மக்களுக்காய் ஓங்கி ஒலிக்கும் மக்களின் குரலாக இருந்து பேனா முனையில் தமிழர்களைத் தாங்கி நிற்கும் உதயனின் பணி அளப்பரியது. தமிழின வரலாற்றுத் தடங்களை மீட்டிப் பார்க்கையில் காலப்பிரவாகத்தின் கறைபடிந்த நாள்களில் கூட தமிழர்களுக்கான சூரியனாய் உதயன் உதித்தே வந்திருக்கிறான் என்பது உண்மை. பத்திரிகைத்துறையில் தான் கொண்ட கொள்கையில் பிறள்வின்றி, வரித்த இலட்சியத்தில் தளர்வின்றி மூன்றரை தசாப்தங்களைக் கடந்தும் மக்கள் மனங்களில் செல்லக்குழந்தையாய் சிம்மாசனமிட்டு உதயனால் மட்டுமே அமர முடியும் என்பது அத்தகைய இடத்தை இனி எப்பத்திரிகையாலும் எட்டிப்பிடிக்கவோ இட்டு நிரப்பவோ முடியாது என்பதும் நாம் உய்த்தறிந்த உண்மை.

அடக்குமுறைக்குட்பட்ட எமது மக்களின் அவலக் குரலை பன்னாட்டுக்குச் சொல்கின்ற பலமான சாட்சியாகவே உதயனின் பயணம் அமைந்திருக்கிறது. தொடர்ச்சியாக தமிழரின் உரிமைக் குரலாய் ஒலித்துவரும் ஒரே காரணத்துக்காக எத்தனை எத்தனையோ இடர்களையும் இழப்புக்களையும் உயிர்களையும் விலைகொடுக்கும் நிலை வந்தபோதும் தமிழர்களைப் போன்றே அடுத்தடுத்து அடக்குமுறைகளுக்குள் அகப்பட்டுக் கொண்ட போதும் தடம் மாறாது பயணிக்கும் உதயன் தனது 34ஆவது ஆண்டில் காலடிபதிப்பதையிட்டு உளப்பூரிப்படைகின்றேன்.

காலங்காலமாகவே சிங்கள ஆதிக்கத்தின் பிடிக்குள் சிக்குண்டும், அடியோடு இடம்பெயர்க்கப்பட்டும் அழிக்கப்பட்டும் வரும் இனமாகவே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் அபிலாசைகளையும் வடக்கு, கிழக்கின் நிலைப்பாட்டையும் பன்னாட்டுக்கு எடுத்துக்கூறும் ஒரு பல்மான சாட்சியாக பயணித்துக் கொண்டிருக்கும் உதயன் இனியும் எதிர்வரும் இடர்களையெல்லாம் கடந்து என்றென்றும் தமிழ் மக்களுக்காய் தன் பணி தொடர வேண்டுமென இவ் அகவை நாளில் அகமகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

*சிவஞானம் சிறீதரன்,*
நாடாளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
இணைத்தலைவர் - கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு.

# தணிக்கைகளைத் தாண்டிய தற்துணிவைப் பாராட்ட வேண்டும்



ஜனநாயக நாட்டின் நிராயுத முனையில் மக்களுக்கான கருத்துச் சுதந்திரத்தை முன்மொழிபவர்கள்பத்திரிகையாளர்கள். உலகளவில் பத்திரிகைகளுக்கு என்று தனித்துவத்தோடு என்றும் எடுத்தியம்பப்படும் என்ற நம்பிக்கை வாசகர்களிடையே.அதீத நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. மரபு ரீதியிலான எமது ஜனநாயக ரீதியிலான சாத்வீகமான போராட்ட வெளிப்பாடுகளுக்கு உறுதுணையாக அமைந்திருந்தது. கால நீரோட்டத்தில் சிற் சில வளைவு சுளிவுகளையும் தாண்டிப் பயணித்த சூழ்நிலை காணப்பட்டிருந்தது.நீண்டகால பாரம்பரியம் மிக்க எமது ஊடக இராஜ்ஜிய தன்மைகள் தணிக்கைகளையும் தூண்டி தளிர்விட்டிருந்தமையையும் தற்துணிவையும் பாராட்ட வேண்டும். எமது தமிழ் பேசும் மக்களின் ஜனநாயகரீதியிலான போராட்ட குணத்தின் வெளிப்பாடாகவும் அடையாளமாகவும் அச்சு ஊடகத்தைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். 34 ஆவது அகவையில் கருத்துப் பரப்பை பரப்பும் உதயன் பத்திரிகைக்கு எனதுவாழ்த்துக்களை வழங்குகிறேன். உலகளவில் ஒவ்வொரு துறை சார்ந்தும் மக்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக ஊடகங்கள் செயலாற்றுகின்றன. ஆனால் குறிப்பிடும் படியாக அனைவரிடத்திலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவனவாக செய்திகள் சென்றடைவதில்லை. ஜனரஞ்சகத்தைத் தாண்டி அரசியல் செய்திகள்,இலத்திரனியல் மற்றும் பத்திரிகைகளில் முக்கிய இடம் பிடிக்கின்றன. அதேபோன்று பொறுப்பு வாய்ந்த விவசாய பிரதி அமைச்சர் என்ற வகையில் விவசாயத்துறை சார்ந்த செயல்முறைகள்ளயும், நமதுவிவசாய செயற்றிட்டங்கள், மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதே எனது எண்ணச் செயற்பாடு.

நமது புரட்சிகரமான ஒவ்வொரு பாரம்பரியங்களும், வரலாறுகளும் பொன்னான யுகம் நோக்கி நகரட்டும்.

*இ.அங்கஜன்,*
விவசாயப் பிரதி அமைச்சர்.



# தமிழ்த் தேசியத்துக்காகவும் விடுதலைக்காகவும் தளராது குரல் கொடுப்பவன்



யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் உதயன் 34ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

கடந்த மூன்று தசாப்தத்துக்கும் மேலாக பல இன்னல்களுக்கும் மத்தியில் தனது பாதையிலிருந்து விலகாது தனக்குரிய பாணியில் பயணித்துக் கொண்டிருக்கின்றான். உதயன் சந்தித்த சவால்கள், இழப்புகள் அதிகமானவை. அரச பயங்கரவாதம் மற்றும் அரசியல் ரீதியாகவும் உதயன் மீது குண்டுத் தாக்குதல், துப்பாக்கிச் சூடு, என்பன பல தடவைகள் மேற்கொள்ளப்பட்டன. அதனால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள், பொருள் சேதம் மிகவும் அதிகமானவை.

இத்தனை சவால்களும் மத்தியில் தமிழர்களின் பிரச்சினைகளைத் தங்கு தடையின்றி பன்னாட்டுக்கு அறியத் தந்துள்ளான். தனது சீரிய பணிகளைத் தடையின்றித் தொடர்ந்து இனத்தின் விடுதலை மற்றும் தமிழ் இலக்கியம், அவர்களின் கல்வி, கலாசாரம் என்பனவற்றின் வளர்ச்சிக்கான ஊடக சேவையை அச்சமின்றிச் செவ்வனே செய்து வருகின்ற பெருமையும் உதயனுக்கு உண்டு.

உதயன் வெளிவந்து 33 வருட காலத்தில் அதன் எழுச்சியும் வளர்ச்சியும் எம்மை ஆச்சரியப்பட வைப்பதோடு பெருமையைச் சேர்க்கின்றது. தமிழ் இனத்தின் விடுதலைக்காகவும் தமிழ்த் தேசியத்துக்காகவும் தன் நிலையிலிருந்து தளம்பாது ஊடகப் பணியைச் செய்ய வேண்டும் என்பது எமது அவா. அதனை உதயன் செய்யும் என்பதில் எமக்குச் சந்தேகமில்லை என்பதையும் தெரிவிக்கின்றோம்.

வடக்கு மாகாணத்தில் வெளிவரும் தமிழ் ஊடகங்களில் மூத்த ஊடகம் என்ற பெருமையையும் தேடிக் கொண்டு 34 ஆவது அகவையில் கால் பதிக்கும் உதயனுக்கு எமது இனிய வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் பிரார்த்தனைகளும் உரித்தாகுக.

*சீ.வீ.கே. சிவஞானம்,*
அவைத் தலைவர், வடக்கு மாகாண சபை.

# தமிழ் மண்ணின் மூத்த தமிழ் பத்திரிகை உதயன்



தமிழ் மண்ணின் மூத்த தமிழ் பத்திரிகை உதயன். அப் பத்திரிகை தனது 34 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இத் தருணத்தில் வெளியிடப்ப டும் அதன் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்கள். நடுநிலை தளம்பாத ஊடகங்களே எமது மக்க ளின் எதிர்பார்ப்பு. அந்த வகையில் உதயன் தமிழ் மண்ணில் நீடித்து நிலைத்து நின்று நடு நிலையுடன் பொறுப்பான அன்றாடச் செய்திகளையும்சிறப்பான விடயங்கள்பலவற்றையும்சமூகமேம்பாட்டுக்கான கருத்துக்க ளையும் தவறாது எந்நாளும் நல்கி வர வாழ்த்துகின்றேன்.

சிறந்த ஊடகத் தர்மத்தின் பால் சார்ந்து உதயனின் பதிப்புகள் தொடர்ந்து வெளிவர எனது வாழ்த்துக்களும் நல்லாசிகளும் உரித்தாகுக.

*நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்*
முன்னாள் முதலமைச்சர் - வடமாகாணம்,
நிறுவுனரும் செயலர் நாயகமும், தமிழ் மக்கள் கூட்டணி.

# தமிழ்ச் சொற்களின் குறியீடாக தனக்கென முத்திரை பதித்தவன்!



தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின் வணக்கத்துக்குரிய நாளான இன்றைய மாவீரர்களின் நாளில் தனது 33ஆவது அகவையை நிறைவு செய்து 34ஆவது அகவையில் கால் பதிக்கும் உதயனை மனம் நிறைந்த மகிழ்வுடன் வாழ்த்துகின்றேன்.

தமிழரின் குரலாக மட்டுமன்றி தமிழ்ச் சொற்களின் குறியீடாகவும் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்து ஒவ்வொரு நாளும் மலர்ந்து கொண்டிருக்கும் உதயனை வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன். எங்களின் நீண்ட நெடிய பயணங்களையும் தமிழனின் ஒவ்வொரு சாதனை நாள்களையும் கட்டுரைகளாக்கி மக்களிடையே பகிர்ந்து கொள்வதிலும் எங்களின் வாழ்வியலையும் வாழ்வோடு பின்னிப் பிணைந்திருக்கின்ற கலாசாரத்தையும், கட்டிக்காப்பதிலும் உதயன் மக்களோடு இணைந்திருக்கின்றது. தொடர்ந்தும் அறவழியில் நின்று மக்களின் குரலாக பல நூறு ஆண்டுகள் வாழ்ந்திட உதயனை மனதார வாழ்த்துகின்றேன்.

*ஆ.சி.து.ரவிகரன்,*
முன்னாள் உறுப்பினர்,
வடக்கு மாகாண சபை, முல்லைத்தீவு.

# தமிழர்கள் விடியலை மூச்சாகக் கொண்டவன்



தமிழர் தாயகத்தில் நீண்ட ஊடகப் பாரம்பரியத்துடன் பயணிக்கும் உதயனுக்கு எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

33 ஆண்டுகள் தாயக மண்ணில் நிலைத்து நின்று தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்த உதயனை இன்றைய நாளில் வாழ்த்துவதில் அகமகிழ்கின்றேன். இன்னல்களையும், துன்பங்களையும் எதிர்கொண்டு, தமிழரின் விடியலை மூச்சாகக் கொண்டு இன்றும் எங்கள் தரணியில் நிமிர்ந்த நன்னடை போடுகின்றான் உதயன்.

தமிழரின் உரிமையை நிலைநாட்ட உதயன் கொடுத்த உயிர் இழப்புக்கள், பொருள் இழப்புக்கள் ஏராளம். உதயனின் இந்தத் தியாகங்கள்தான், தமிழ் மக்கள் மனதில் அவனுக்கு நீங்காத என்றும் குன்றாத இடத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. தியாகங்கள் என்றும் எமது தேசத்தில் மதிக்கப்பட வேண்டியவை. போற்றப்பட வேண்டியவை. இன்றைய சூழலில் பல செய்தித் தாள்கள் தோன்றுவதும் மறைவதும் வழமையாகிவிட்டது. ஆனால் உதயன் மூன்று தசாப்தங்களைத் தாண்டியும், தமிழ் மக்கள் மனதில் என்றும் உயர்வான இடத்தில் இருக்கின்றான். மக்கள் மனதை அவன் அறிந்ததாலேயே, மக்கள் அவனுக்கு அந்த உயரிய இடத்தைக் கொடுத்திருக்கிறார்கள். உதயன் அந்த இடத்தை எப்போதும் தக்க வைப்பான் என்று நம்புகின்றேன்.

*பா.டெனீஸ்வரன்,*
முன்னாள் உறுப்பினர்,
வடக்கு மாகாண சபை.

# உதயனுக்கு நிகர் உதயனே



34 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் தமிழ் மக்களின் மனங்களில் என்றும் எழுச்சியோடு நிலைத்து நிற்கும் முதல்தரப் பத்திரிகை உதயனுக்கு எனது வாழ்த்துக்கள். காலத்துக்கு ஏற்றவாறு தகவல்களை மாற்றிக் கொள்ளாது தனக்கே உரிய பாணியில் செய்திகளைத் தருவதில் உதயனுக்கு நிகர் உதயனே. மக்கள் மனங்களில் நீங்கா இடத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொண்டிருக்கின்றது. கடந்த காலங்களில் எத்தனையோ நாசகார செயற்பாடுகளுக்குள் சிக்குண்டு மீண்டெழுந்து தொடர்ந்து வாசகர்களுக்குச் செய்திகளை வழங்குவதில் முன்நிற்கின்றது. பல்லாண்டு சிறக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு உதயன் குழுத் தலைவர், ஊழியர்கள், வாசகர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*ச. மயூரன்,*
முன்னாள் உறுப்பினர்,
வடக்கு மாகாண சபை,
தமிழ் ஈழ விடுதலை இயக்கம்.

## உதயனின் பணி சிறப்புற வாழ்த்துக்கள்



எண்ணிலடங்கா சவால்களுக்கு மத்தியில் தனது முப்பத்து நான்காவது அகவையில் தடம்பதிக்கும் உதயன் நாளிதழிற்கு வாழ்த்துச் செய்தி வரைவதையிட்டு மகிழ்வு அடைகின்றேன்.
இயற்கையின் சீற்றத்தால் எவ்வாறான இடர்கள் உலகில் ஏற்பட்டாலும், காலையில் கதிரவன் தன் கடமை தவறாது கிழக்கில் உதயமாவது போல், கடந்த மூன்று தசாப்தங்களிற்கு மேலாக போர் இடர்கள், இயற்கை இடர்கள் அரங்கேறிய எமது மண்ணில் முப்பத்து மூன்று வருடங்களாகத் தொடர்ந்தும் வெளியாகிக் கொண்டிருக்கின்ற நாளிதழ் என்ற பெருமை உதயன் பத்திரிகையையே சாரும்.
காட்டாற்று வெள்ளத்தின் போதும், பலத்த சூறாவளியின் போதும் அடித்தும் முறித்தும் செல்லப்படுகின்ற மரங்கள், செடிகள், கொடிகள் போன்றல்லாது நாணல் புல்லானது அவை எல்லாவற்றுக்கும் ஈடு கொடுத்து மீண்டும் நிமிர்ந்து நிற்பதைப் போன்று எம் மண்ணில் வேரூன்றி வளர்ந்து வரும் உதயன் பத்திரிகை தொடர்ந்தும் தன் சேவையை சிறப்புற வழங்க வேண்டும்.
ஊடகங்கள் வெளியிடுகின்ற அல்லது பிரசுரிக்கின்ற ஒவ்வொரு விடயத்திலும் சமூகப் பொறுப்புணர்வு வெளிப்படவேண்டும். அப்பொழுதுதான் அந்த ஊடகம் வெளியிடுகின்ற செய்திகள்- தகவல்களில் மக்கள் நம்பிக்கை கொள்ளும் நிலை ஏற்படும். ஊடகவியலாளர்களிற்குரிய விழுமியங்களையும், வரையறைகளையும், ஊடகவியலாளர்கள் மட்டுமன்றி, ஊடக நிறுவனமும் இணைந்தொழுக வேண்டும்.
ஒரு நாட்டில் நான்காவது தூணாகக் கருதப்படும் ஊடகங்களே ஜனநாயகத்தின் காவலாளிகளாகவும் செயற்பட்டு வருகின்றன. அந்த வகையில் வடபுலத்தில் நிலவும் குறைபாடுகளை அடையாளங்கண்டு முக்கியத்துவம் வழங்கிப் பிரசுரிப்பதோடு, அரச துறையின் நேர்த்தியான சேவைகளில் குந்தகம் ஏற்படும் போதும், அவற்றின் வினைத்திறனற்ற செயற்பாடுகள் சுட்டிக் காட்டப்படும் போதும் அவற்றை அம்பலப்படுத்துவதில் உதயன் எமது மாகாணத்தில் முதன்மை பெறுகின்றது.
இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் போன்றவற்றின் வருகையினால் அச்சு ஊடகங்களின் தேவை குறைவடைந்து விடும் என்ற கருத்து பரவலாக இருக்கின்ற வேளையில் வெற்றிகரமாக முப்பத்து நான்காவது ஆண்டில் தடம் பதிக்கும் உதயன் பத்திரிகை பொதுமக்கள் கொண்டிருக்கும் மிகப் பெரிய மதிப்பு, அதன் ஜனநாயகம் மற்றும் நம்பகத்தன்மையை அடிப்படையாகக் கொண்டது.
அவற்றை உறுதி செய்வதன் வாயிலாகவும் முழுப் பரிமாணத்தோடு செய்திகளைக் கொடுப்பதன் வாயிலாகவும் நலிந்துள்ள எமது சமூகத்தின் மேம்பாட்டுக்கு வழிகாட்டியாகத் தனது பணியைத் தொடர்வதற்கு எனது உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி. தவராசா,
முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர்,
வடக்கு மாகாண சபை.

## விழ விழ எழுவோம் என்ற சொல்லுக்கு உதயனை அடையாளப்படுத்த முடியும்



தமிழர் தாயகத்தில் இருந்து தொடர்ந்து 33 வருடங்களாக வெளிவந்து கொண்டிருக்கும் தமிழ்த் தினசரி உதயனுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.
எமது தாயகத்தில் உதயன் சந்தித்தது போன்ற நெருக்கடிகளை எந்த ஊடகமும் சந்தித்து இருக்கவில்லை. விழ விழ எழுவோம் என்ற சொல்லுக்கு உதயனை அடையாளப்படுத்த முடியும்.
ஊடக சுதந்திரத்துக்காக உயிரிழப்புக்கள், சொத்து அழிவுகள், கொலை வெறித் தாக்குதல்களைத் தாண்டி உதயன் பல்லாண்டு காலம் வீறு நடை போட வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.
கொழும்புக்கு வெளியே 33 ஆண்டுகள் ஒரு பத்திரிகை வெளியாவது அதுவும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலே தொடர்ந்தும் வெளி வருவது குறித்து எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்.கே. சிவாஜிலிங்கம்
தவிசாளர்,
தமிழ் ஈழவிடுதலை இயக்கம் (ரெலோ), முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்,
முன்னாள் தலைவர், வல்வெட்டித்துறை நகர சபை.



## தமிழ் மக்களின் இதயங்களை வென்றவன் உதயன்



வடபுலத்தில் இருந்து வெளி வந்து கொண்டிருக்கும் உதயன் நாளிதழ் தனது ஊடகப் பயணத்தில் 34 ஆவது ஆண்டில் நுழைவதையிட்டு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ் பேசும் மக்களின் பிரதேசங்களில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் உதயன் தமிழ் மக்கள் மனங்களை வென்ற அபிமானம் மிக்க பத்திரிகையாகும். பல இடையூறுகளையும் துன்பங்களையும் அழிவுகளையும் தாண்டி 34ஆவது ஆண்டில் வீறுநடை போடும் இந்தப் பத்திரிகையின் ஊடகப் பணிகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது.
தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளை அதன் விளைவுகளை மட்டுமன்றி பன்னாட்டு அரங்கில் நடைபெறுகின்ற முக்கிய நிகழ்வுகள், விளையாட்டு சம்பந்தமான செய்திகளைத் தாங்கி யாழில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் இந்தப் பத்திரிகை தமிழ் மக்களின் இதயங்களை வென்ற நாளிதழ் என்பது மிகையல்ல.
பொதுசன ஊடகம் என்ற வகையில் பல்வேறு கோணங்களிலும் துறைகளிலும் கால்பதித்து வளர்ந்துவரும் இந்த நாளிதழ் பல்லாண்டு காலம் தனது ஊடகப் பணியை செவ்வனே ஆற்றி தமிழ் மக்களின் குரலாக ஒலிக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

இ.இந்திரராசா,
முன்னாள் உறுப்பினர்,
வடக்கு மாகாண சபை.

## திக்கெட்டும் புகழ் பரப்பட்டும்



இலங்கைத் திருநாட்டின் அறிவுக் களஞ்சியங்களில் ஒன்றாக மிளிர்ந்து வரும் நடுநிலை இதழான உதயனின் முப்பத்தி நான்காவது ஆண்டில் காலடி வைப்பதையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.
இலங்கைத் திருநாட்டில் பத்திரிகைத் துறையில் சாதனை படைத்துவரும் பத்திரிகை உதயன் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. படிப்படியாகப் பக்கங்களைச் சேர்த்துவரும் தன்மைகொண்டதாக உதயன் பத்திரிகை புகழ் அடைந்து வருகின்றது. நுட்பமான சொற்களை ஆராய்ந்து வாசிப்பதற்கும் அதனைக் கேட்பதற்கும் எளிமையான முறையில் அறிந்துகொள்ளவும் அறிவுப் பத்திரிகையாக இது விளங்கி வருகின்றது. உலகம் எப்படிநடக்கின்றதோ அப்படியேதானும் தகவல்களைச் சேகரித்து வெளியிடும் தன்மைகொண்டதாகவும் பலராலும் போற்றப்படுவதாகவும் செயற்பட்டு வருகின்றது. பத்திரிகை என்றால் உதயன். சிறியவர்கள் தொடங்கி பெரியவர்கள் வரைவிரும்பிப் படிக்கும் உன்னத பத்திரிகையாக இது விளங்கி வருவதை என்னால் அவதானிக்க முடிகின்றது.
அரசியல், உலக வரலாறு, பிராந்தியச் செய்திகள், சினிமா, விளையாட்டுச் செய்திகள், சிறுகதைகள், தொடர்கதைகள், விளம்பர நிகழ்வுகள் இராசி பலன், வர்ணம் தீட்டுதல், அன்றைய விலைவாசிகள், உணவு தயாரித்தல், அறிவியல் உலகம் எனப் பல்வேறு விடயங்களை ஒன்றுதிரட்டி பதித்து தமிழ் பேசும் மக்களுக்கு நடுநிலமைபேணும் இதழாக வெளிவருவதையிட்டு உவகை கொள்கின்றேன்.
உதயனின் முப்பத்தி மூன்றாவது ஆண்டு நிறைவுச் சிறப்புமலர் எமது மக்கள் கைகளில் தவழ்வது எமது மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம். இந்தப் பத்திரிகை காலமாற்றத்துக்கேற்ப தானும் பல்வேறு மாற்றங்களைக் கண்டு தனது தடங்களை வலிமையாக மேலும் பதிக்கவேண்டும். சாதனைகளை மென்மேலும் படைத்து பல நூற்றாண்டுகள் கண்டு திக்கெட்டும் புகழ் பரப்பவேண்டுமென்று மனமார வாழ்த்தி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

வாழ்க உதயனின் பணி
வளர்க உதயனின் சேவை.

ம. தியாகராசா,
முன்னாள் உறுப்பினர், வடக்கு மாகாண சபை
வவுனியா மாவட்டம்.



## உதயன் வெற்றிகரமாக தனது பணியைத் தொடரட்டும்

தாயக மக்களின் உள்ளத்துக் குரலாக கடந்த 33 ஆண்டுகளாகத் தடைகள் பலவற்றைக் கடந்து தடைகளை படிகளாக்கி வேரூன்றி இன்று முப்பத்து நான்காவது அகவையில் காலடி வைக்கும் மக்களின் மனம் நிறைந்த நாளிதழான உதயனுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறேன்.
கனதியான போர்ச் சூழல் ஒன்றிலிருந்து தொடர்ச்சியாக மூன்று தசாப்தங்களாக இடைவிடாது ஒரு செய்திப் பத்திரிகையை பிரசவிப்பதென்பது இலகுவானதல்ல. கடினமான பாதைகளில் பல இடர்களை கடந்து குருதி தோய்ந்த நிலையிலும் தனக்கென்று ஒரு தற்துணிச்சலுடன் உதயன் ஆற்றிய ஊடக சேவை மகத்தானது. மக்களின் வாழ்வியல் விழுமியங்களை நாகரீகமாக மதிக்கும் ஊடகங்கள் வரிசையில் உதயன் தனது பணியில் கடந்த மூன்று தசாப்தங்களில் வெற்றி கொண்டுள்ளமை பாராட்டுக்குரியதே.
மேலும் மாறிவருகின்ற உலக அரசியல் கலாசார வாழ்வியல் அம்சங்களிலும் உதயன் தனது பணியை எதிர்காலங்களிலும் வெற்றிகரமாக செயற்படுத்துவான் என்ற நம்பிக்கையுடன் உதயனின் பணிமேன்மேலும் சிறக்க எனது மனம் நிறைந்த நல்வாழ்த்துக்களை இந்நாளில் தெரிவிப்பதில் பூரிப்படைகிறேன்.

வை.தவநாதன்,
முன்னாள் வட்க்கு மாகாண சபை உறுப்பினர்,
மாவட்ட நிர்வாக செயலாளர்,
ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி, கிளிநொச்சி.



## கொள்கை மாறாதவன்

உதயன் மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ், இதன் உண்மையையும் வரலாற்றுமுக்கியத்துவத்தையும் நாம் சற்று சிந்திக்கவேண்டியவராயுள்ளோம். ஆரம்பகாலம் தொட்டு இன்று வரை உதயன் தனதுகொள்கையில் மாற்றமில்லாது, சீரியமுறையில் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழும் சூழல் வரவேண்டும் எனச் செயற்பட்டுவரும் நாளிதழ். உதயனின் பணிமேலும் சிறந்து விளங்கட்டும். கடந்தகாலங்களில் உதயன் எதிர் நோக்கிய இன்னல்களை என்றுமே மறக்கமுடியாது.
உதயன் இன்றும் தனது உன்னதமான பணியை சீரிய முறையில் தமிழர்களின் நலன் பேணுவதற்காக நல்கிவருகிறான். உதயனின் பணிசிறக்கட்டும் என வாழ்த்துகின்றேன் 34 ஆவது அகவையில் கால் பதிக்கும் உதயனின் பணிமேலும் பலஆண்டுகள் சிறக்கட்டும் என்று வாழ்த்துகிறேன்.

இ.ஆனோல்ட்
முதல்வர்.
யாழ்.மாநகர சபை.

## துணிவுடன் செய்திகளை வெளியிடுவதில் உதயனுக்கு நிகர் உதயனே



ஒரு நாட்டில் வாழ்கின்ற மக்களுக்கு அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகவும் மக்கள் சக்தியாகவும் தற்போது ஊடகங்களே விளங்குகின்றன. பண்டைய காலங்களை விட வியக்கும் அளவிலான விஞ்ஞான விந்தைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு ஊடகங்கள் என்பது மிக முக்கியமானதாகத் தற்போது மாறிவிட்டன. ஒரு இடத்தில் நடைபெறும் சம்பவங்களை இன்னொரு இடத்தில் வசிப்பவர்கள் ஒரு வாரத்தின் பின்னர் அறிந்துகொண்ட காலங்கள் மாறித் தற்போது உடனுக்குடன் தகவல்களை மிகவும் துல்லியமாக அறிந்து கொள்ளும் காலமாக தற்காலம் மாறி விட்டது. இதற்கு முக்கிய அச்சாணியாக விளங்குபவை சமூக வலைத்தளங்கள், வானொலி, தொலைக்காட்சி,பத்திரிகை போன்ற ஊடகங்களே.

அந்த வகையில் உதயன் பத்திரிகையும் தமிழ் மக்களுக்குக் கடந்த 33 ஆண்டுகளாக ஆற்றிய பணிகள் பாராட்டுக்குரியன. நாட்டின் எந்தப் பாகத்திலும் நடக்கும் சகல விடயங்களையும் மிகவும் நுட்பமாக ஆராய்ந்து உண்மைச் செய்திகளை நடுநிலை தவறாமல் உடனுக்குடன் துணிவுடன் வெளியிடுவதில் உதயனுக்கு நிகர் உதயனே.

70ஆண்டு கால தமிழரின் உரிமைப் போராட்ட வரலாற்றில் 33 வருடங்களாக உதயன் ஆற்றிய பணி மகத்தானது. தனியே ஒரு துறையைச் சார்ந்து இல்லாமல் சகல துறைகளையும் உள்ளடக்கி, அனைத்து வயதினரும் படித்துப் பயன்பெறக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டு கூடுதலான பக்கங்களுடன் வெளிவந்து கொண்டிருக்கின்றது. இன்று பல ஊடகங்கள் பல்கிப் பெருகி இருந்தாலும் யாழ்ப்பாண மக்களைப் பொறுத்தவரையில் உதயன் நாளிதழையும் அதன் பணிகளையும் ஒருபோதும் மறக்க முடியாது. 33 ஆண்டுகளை வெற்றிகரமாக கடக்கும் உதயன் நாளிதழ் இன்னும் பல ஆண்டுகள் வியக்கும் சாதனைகளைப் புரிந்து தமிழ் மக்களின் விடிவுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

*இ.ஜெயசேகரன்,*
முன்னாள் உறுப்பினர்,
வடக்கு மாகாண சபை.

## தமிழ்த் தேசிய இருப்புக்காக வலிமை சேர்த்த பத்திரிகை



இலங்கையின் ஊடகத்துறை வரலாற்றில் தனித்துவமான இடம்பிடித்துள்ள உதயன் பத்திரிகையின் 33ஆவது அகவை நிறைவு குறித்து வாழ்த்துரைப்பதில் மிக்க மகிழ்வுறுகின்றேன்.

தமிழ்த் தேசியத்தின் இருப்புக்காக வலிமை சேர்த்த பத்திரிகை என்பது உதயன் பத்திரிகையின் தனிச் சிறப்பாகும்.

இலங்கையில் போர் உக்கிரமடைந்திருந்த கால கட்டத்தில் அரச பயங்கரவாதம் இந்தப் பத்திரிகை நிறுவனத்தையும் ஆசிரிய பீடத்தையும் அங்கு பணியாற்றிய ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்திய வேளையிலும் நடுநிலை தவறாது துணிந்து செயற்பட்டமை ஒரு வீர வரலாற்றுப் பதிவாகும்.

எதிர்காலத்தில் உதயன் பத்திரிகை புதிய பாய்ச்சலில் ஆழமாகவும் அகலமாகவும் நீளமாகவும் கால்பதித்து புதிய பல சாதனைகளைப் படைக்க வேண்டுமென்று மனதார வாழ்த்தி இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

*பேராசிரியர் மு.இராஜேஸ்வரன் (ஜே.பி),*
முன்னாள் உறுப்பினர்,
கிழக்கு மாகாண சபை.

## மூத்தோர்களால் விரும்பி வாசிக்கப்படும் நாளேடு



'உதயன்' நாளிதழ் உன்னதமான பணிதனை மக்கள் மனங்களில் நிறைத்திட அற்புதமாய் மிளிர்ந்தமையால் அசுர வேகத்தில் அகவை முப்பத்து மூன்று நாளில் இன்று முழுமதியாகி உள்ளது. மூத்தோர்களால் விரும்பி வாசிக்கப்படும் ஒரு அனுபவ முதிர்ச்சி பெற்ற நாளேடாக தன்னை அடையாளப்படுத்தியுள்ளது. வாசகர்கள் நெஞ்சங்களில் நிறைந்து உணர்வுகளுடன் ஊக்கமற உறைந்து காலை வேளைகளில் கச்சிதமாக அனைவர் கரங்களிற்குள்ளும் தவழ்ந்திருக்கும் உதயனின் சிறப்பு மலர் பல காத்திரமான செய்திகளை சுமந்து நிற்கின்றது.

அன்றுபோல் இன்றும் என்றும் நிறைவால் உயர்ந்து நிற்கும் தருணத்தில் மூத்தோர்களின் ஆசீர்வாதங்களுடன் மேலோங்கி நிலைத்து நிற்க எமது வாழ்த்துக்களை மூத்தோர்களுடன் இணைந்து தெரிவித்து மகிழ்வுறுகின்றோம்.

**த.கிருபாகரன்,**
அத்தியட்சகர், அரச முதியோர் இல்லம், கைதடி



## தவறானவற்றைத் தவறென தடுமாறாமல் உரைப்பவன்



உதயனின் 33 ஆண்டுகால நெடும் பயணத்தில் கடந்த பல ஆண்டுகளாக வாழ்த்துச் செய்தி வழங்கி வரும் ஒருவன் என்ற ரீதியில், உதயனின் இன்றைய வளர்ச்சி குறித்து மிகவும் சந்தோசமடைகின்றேன். ஒவ்வொரு ஆண்டும் ஏதோவொரு விதத்தில் தன்னை இன்னும் மெருகேற்றிக் கொண்டு, வளர்ந்துவரும் ஊடகமாக உதயன் செயற்பட்டு வருவதனை அருகிலிருந்து அவதானித்தும், அதன் வாசகனாகவும் இருந்து வருகின்றவர்களில் நானும் ஒருவன் என்பதில் பெருமையடைகின்றேன். அந்த வகையில் போட்டி மிக்க இன்றைய ஊடக உலகில் 33 வருடங்களை வெற்றிகரமாக நிறைவு செய்து,34ஆவது ஆண்டில் காலடி வைத்து, இன்றும், தொடங்கிய நாளில் காணப்பட்ட அதே உற்சாகத்துடனும், இலக்குடனும் செயற்பட்டுக் கொண்டிருப்பது சாதாரண விடயமல்ல.

ஜனநாயக் கட்டமைப்பில் ஊடகத் துறையினுடைய முக்கியத்துவம் அல்லது பங்களிப்பு மிக முக்கியத்துவமான ஒன்றாகும். ஒரு விடயத்தை, சரியானதை தவறென்றும், தவறானதைச் சரியென்றும் நிரூபிக்கவல்ல ஆற்றல் இன்றைய நாள்களில் ஊடகங்களுக்குண்டு. ஆனால் அவ்வாறில்லாமல் உதயன் தனது சக்திகளை தவறான வழிகளில் செலுத்தாமல் ஊடக அறம் என்றால் என்ன என்பதற்கு எடுத்துக்காட்டாக நடந்துகொள்வதனை நாம் இன்று கண்டு வருகிறோம்.

உதயன் அன்றிலிருந்து இன்றுவரை சரியானதைச் சரி என்று சொல்லும் அதேவேளை, தவறானவற்றைத் தவறு என்று யார் தலையிட்டாலும் தடுமாறாமல் தனக்கென்று ஒரு பாணியை வகுத்து ஊடக உலகில் தனித்துவமாகச் செயற்பட்டு வருகின்றான். அது தான் உதயனின் தனிச்சிறப்பாகவும் இருந்து வருகின்றது. இது என்றும் தொடரும் என்பதே எனது திடமான நம்பிக்கையுமாகும்.

இவ்வாறான சமூகப்பணியில் ஈடுபட்டு வரும் உதயனுக்கும் அவனது ஆசிரியர் குழாமுக்கும், செய்தியாளர்களுக்கும், வாசகப் பெருமக்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பா.கஜதீபன்*
முன்னாள் உறுப்பினர், வடக்கு மாகாண சபை.

## உதயன் எனும் நாமம்



ஆறோடு ஐந்து நான்காண்டுகள்
தன்னிகரில்லா சேவை
தமிழினத்தின் தன்மானக் குரலாய்
தகுந்தபடி செய்தியிட்டு
சங்கடமான நிலைமையிலும்
சளைக்காது பணியாற்றி
இணையத்திலும் உன் விழுதெறிந்து
உலகெங்கும் எம் செய்தி இயம்பிடும்
உன் பணிக்கேது நிகர்
அதிகாலையில் அலாரமாய் உன் வரவு
அதிக பிரியர்களை உன் வசமாக்கி
அதிசய செய்தியெல்லாம்
அலாதியதைப் பரப்பி
உண்மைகளை எடுத்தியம்பி
ஒய்யாரமாய் நடை போட
இந் நன்நாளில் வாழ்த்துகிறேன்.

*ஆ.புவனேஸ்வரன்,*
முன்னாள் உறுப்பினர்,
வடக்கு மாகாணசபை, முல்லைத்தீவு.

## விடுதலைக்காய் தொடர்ந்தும் வீரியத்துடன் பாடுபடுபவன்



பல அராஜக அட்டூழியங்களுக்காகப் பெரும் சவால்களுக்கூடாக 'மீண்டும் மீண்டும் எழுவோம்' எனும் உறுதியுடன் தாய் மண்ணில் தலை நிமிர்ந்து உலா வரும் 'உதயன்'பத்திரிகை 34ஆவது ஆண்டில் காலடி பதிக்கின்றது. நம்பிக்கைத் துரோகமும், ஏறிய ஏணியை எட்டி உதைக்கும் இழிநிலையும், ஓங்கிநிற்கும் அரசியல் சூழலில் எம்மினம் பல சவால்களை எதிர்கொண்டு நிற்கின்றது.

இந்தச் சவால்களை முறியடித்து 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற தாரக மந்திரத்துடன் இன ஒற்றுமையை மேம்படுத்தி இன விடுதலைக்காய் தொடர்ந்தும் வீரியத்துடன் சேவையாற்ற வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

*வே. சிவயோகன்,*
முன்னாள் உறுப்பினர்,
வடக்கு மாகாண சபை.

## அநீதிக்கு எதிராகப் போராடுபவன்



தமிழ் மக்களின் குரலாக ஒலிக்கும் உதயன் பத்திரிகை தனது 34ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதை இட்டுப் பெருமிதம் கொள்கின்றேன். தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்து ஊடகத்துறையில் பல சேவைகளை ஆற்றி வருகின்றமை சிறப்புக்குரியதொன்றே.

போர்க் காலங்களில்கூட பெரும் அச்சுறுத்தலுக்கும் மத்தியில் ஊடகவியலாளர்கள் துன்புறுத்தப்பட்டுத் தாக்கப்பட்டுக் கொலைசெய்யப்பட்ட போதிலும் பல சவால்களை எதிர்கொண்டு இன்று அகவை 34 ஐ எட்டியுள்ளது என்பது மகத்தான ஒரு விடயம். பலதரப்பட்ட தகவலைப் பல கோணங்களில் மக்களைச் சென்றடையக் கூடிய விதத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

சிறியவர் முதல் பெரியோர்வரை அனைவரும் படித்தறியக் கூடிய விதத்திலான செய்தித் துணுக்குகளும் ஆக்கங்களும் சிந்தனைத் துளிகளும் என்று பல்வேறு வடிவங்களில் அமைந்து காணப்படுகின்றது.

எங்களுடைய மாகாண சபையின் 5 வருட காலத்திலே அங்கே நடைபெறுகின்ற நிகழ்வுகளை உடனுக்குடன் பக்கச்சார்பு இல்லாமல் வெளியிட்டதும் குறிப்பாக என்னால் அமைச்சருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட முறைப்பாட்டுக்கு முழுமையான ஒத்துழைப்பை உதயன் பத்திரிகை மட்டுமே வழங்கியது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூருகின்றேன். அந்த விசாரணையை முழுமைப்படுத்தி வெளியிட்டுத் தீர்ப்பு வரும்வரை தன்னுடைய அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளது என்பதையும் கூறிக்கொள்கின்றேன்.

நாட்டில் தமிழ்பேசும் மக்களுக்கான உரிமையை வென்றெடுப்பதில் தன்னுடைய முயற்சித் தடத்தை ஆரம்பித்து இன்றைக்கு 34 ஆவது அகவையில் காலடி எடுத்து வைப்பதையிட்டு மகிழ்வடைகின்றேன். ஊடகத்துறையில் பற்பல சாதனைகளைப் படைத்து முன்னேற எனது இதயம் கனிந்த வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*ஜி.ரி.லிங்கநாதன்,*
முன்னாள் உறுப்பினர், வடக்கு மாகாண சபை, வவுனியா.

## களம் பல கண்ட எங்கள் காவலன் உதயன்



பரந்த குடும்பத்தின் காலத் தேவைகளை விரைந்து தீர்த்தல் தலைமகனின் கடமை என்பதைச் சிந்த னையில் பதித்து பொறுமையாய் உலவியவன் உதயன்.
கல்வி, கலாசாரம், விளையாட்டு, ஆன்மீகம், நகைச்சுவை, கவியாக்கல், கதை புனைதல், கட்டுரைகள், விமர்சனம் என்று பரிமாண உணர்வுடன் செயற்பட்டு எழுத்துலகின் கிரீடங்களைத் தனதாக்கியவன். தாய்மையின் தவிப்புகளின் போதெல்லாம் பொங்கி எழுந்தவன். கண் முன்னும் கபடமாயும் எங்கள் முதுசங்கள் சூறையாடப்படும் போதெல்லாம் மூர்க்கங் கொண்டு முழங்கியவன். உரிமைக் குரலாய் வேதமாய் ஏற்று வேள்விகள் செய்தவன். துயரங்களையே தூரிகையாக்கி துணிச்சலுள்ளதோர் தலைமுறை தந்தவன். எங்கள் உதயன் என்றும் பொலிவுடன் இதயம் கவர்ந்து இப்புவிதனில் இதமாய் வலம் வர வாழ்த்துகின்றேன்.

பத்மநாதன்,
அதிபர்,
யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்.

## அட்சய பாத்திரமாக உதயனைக் காண்கின்றோம்



அகவை 34 இல் காலடி எடுத்து வைக்கும் உதயன் பத்திரிகைக்குக் கொக்குவில் இந்துக்கல்லூரிச் சமூகம் சார்பில் வாழ்த்துத் தெரிவிப்பதில் பேருவகை அடைகின்றேன். 'மக்கள் மனம் நிறைந்த நாளிதழ்' என்கின்ற மகுட வாசகம் தாங்கி ஊடக தர்மத்தின் பாற்பட்டு காலத்தின் தேவையறிந்து செய்திகளை மக்களுக்கு வழங்கித் தெளிவூட்டல் செய்வதில் உதயனின் பணி மகத்தானது.
தமிழ் மக்கள் மத்தியிலே உதயனுக்கென்று ஒரு சிறப்பான இடம் உள்ளதை எவரும் மறுதலிக்க முடியாது. உள்நாட்டு,வெளிநாட்டு நடப்புக்கள், வேளாண் செய்திகள், விளையாட்டுச் செய்திகள், அறிவியற்செய்திகள், சிறுகதைகள், சிறுவர் அரங்கம், கவிதைகள், ஆய்வுக்கட்டுரைகள், விமர்சனங்கள், ஆன்மீகச் செய்திகள், அரசியல்நடப்புக்கள், விமர்சனங்கள் மாணவர் சங்கம் என்று அனைத்து வயதுப் பிரிவு வாசகர்களது தேடல்களுக்கும் விருந்தளிக்கும் அட்சய பாத்திரமாக நாம் உதயனைக் காண்கின்றோம். உதயன் கடந்து வந்த பாதை என்பது கல்லும், முள்ளும் நிறைந்த மலைப்பாங்கு மிக்க கடினமான செங்குத்தான பாதையாகவே எம்மால் காணமுடிகின்றது. பல்வேறுபட்ட நெருக்கடிகளைச் சந்தித்து உயிர் தியாகங்களைச் செய்து, உடைமை அழிவுகளைச் சந்தித்த தருணங்களையும் நாம் ஒரு கணம் நினைத்துப் பார்க்கின்றோம்.
இவ்வாறான சாவால்களை எல்லாம் வென்று ஊடக தர்மத்தின்பால் அடித்தளம் அமைத்துக் கட்டி எழுப்பப்பட்ட பத்திரிகை என்ற வகையிலேயே உதயன் இன்று ஒரு நீண்ட பத்திரிகைத்துறை வரலாற்றைக் கொண்ட பத்திரிகையாகத் தன்னை நிலை நிறுத்தித் தடம் பதித்துள்ளான்.
இன்று சிறப்பு மலராக வெளிவரும் 'மக்களின் குரல்' உதயன் சிறப்பு மலருக்கு கொக்குவில் இந்துச் சமூகத்தின் சார்பில் வாழ்த்துத் தெரிவிப்பதில் பெருமகிழ்வும், நிறைவும் அடைகின்றேன்.

ம.ஞானசம்பந்தன்,
அதிபர்,
யா.கொக்குவில் இந்துக்கல்லூரி.

## வான வில்லின் வர்ணங்களாய் பிரகாசிக்கும் உதயன்



பல்வேறு சவால்கள், நெருக்கீடுகள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் சற்றும் தளராது நடுநிலையாகத் தொடர்ந்து பயணித்து வரும். ஈழத் தமிழர்களின் உளங்கவர் பத்திரிகை உதயன்.
மகிழ்வூட்டல், கருத்துருவாக்கம், பொழுது போக்கு என்ற ஊடகக் கோட்பாடுகளுக்கப் பால்ஈழத்தமிழர்களின் துன்பதுயரங்களையும் தேவைப்பாடுகளையும் பகிரங்கப்படுத்தி மனிதநேய வழி நின்று செயற்படுகின்றான் உதயன்.
பாலர் முதல் முதியோர் வரை தோழனாக திகழும் உதயன், உலக அரங்கு, அறிவியல் தகவல்கள், வியக்க வைக்கும் விளையாட்டுக்கள், தகவல் தொழில்நுட்பத்தின் சுவாரசி யங்கள், சிறுவர்களுக்கு விருந்தளிக்கும் சிறுவர் பக்கம், மருத்துவக் குறிப்புக்கள், முகநூல் பதிவுகள் என்று வானவில்லின் வர்ணாங்களாய் ஒளி பரப்பிய வண்ணம் மண்ணுலகில் உதயசூரியனாய் மானிடத்தை மலர வைக்கும் உதயன்.
தமிழர்கள் உள்ளவரை தமிழ்கூறும் நல்லுலகமெங்கும் நீ நிலைத்து நிற்க உளமார வாழ்த்துகின்றேன்.

கா.குணசிங்கம்,
அதிபர்,
யா/கச்சாய் அ.த.க.பாடசாலை.



- ✔ கதைப்புத்தகங்கள்
- ✔ பாடசாலை உபகரணங்கள்
- ✔ உயர்கல்வி பாடபுத்தகங்கள்
- ✔ அனைத்து விதமான காகிதாதிகள்

**இவை அனைத்து தேவைகளுக்கும் யாழ் நகரின் முன்னணி ஸ்தாபனம்**



பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.



## யாழில் ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்



DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

Experts in English Training

சிறந்த வேலைவாய்ப்பிற்கு...
உள்நாட்டு, வெளிநாட்டு உயர் கல்விக்கு...

**Spoken English**

**ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்**

Reading Writing Speaking Listening

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | Mon,Wed,Fri 8:00 a.m<br>Mon,Wed,Fri 3:30 p.m<br>Sat, Sun 3.30 p.m. | |
| நெல்லியடி | Tue, Thu 3.30 p.m.<br>Sat, Sun 3:30 p.m. | |
| சாவகச்சேரி | Tue, Thu 08.30 a.m.<br>Sat,Sun 08.30 a.m. | |
| சுன்னாகம் | Sat,Sun 9:30 a.m | |
| சண்டிலிப்பாய் | Mon,Wed,Fri 1:30 p.m | |
| கிளிநொச்சி | Sat, Sun 10.30 a.m | |

கற்பிக்கப்படும் பாடத்திட்டங்கள் பற்றிய விபரங்கள்

DIPLOMA IN FLUENT ENGLISH

Diploma in Fluent English Part - I: For people who are doubtful about their English and want to speak English fluently

Diploma in Fluent English Part - II: For speakers who want to master diction and style.

- அனுபவம் மிக்க விரிவுரையாளர்களினால் Grammar பற்றிய போதிய விளக்க முறைகள் மாணவர்களுக்கு பூரணமாக வழங்கப்படுகிறது.
- ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் ஆங்கிலம் கதைப்பதற்கான சந்தர்ப்பம் கணினி மூலமான
- Online Listening பயிற்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது .

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**IELTS** •Academic •General

•Unique Test Tips • Latest course Materials

**IELTS Life Skills (A1 , B1)**

திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (Reg No. P25/0056)

# DMI COMPUTER EDUCATION

| | | | | | |
|---|---|---|---|---|---|
| No.113, | M.M.V.வீதி | No. 174 HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | சீரணிச் சந்தி | No.19,A9 வீதி, |
| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021 225 6665 | Tel.: 021-228 5655 |



# Northern Central Hospital

**நரம்பியல் சிகிச்சைப் பிரிவு**

கை-கால் விறைப்பு, நடக்கும் பொழுது ஏற்படும் சிரமங்கள் (Walking Difficulties) தலைவலி, நித்திரைக் கோளாறுகள், வலிப்பு நோய், பாரிச வாதம், பார்க்கின்சன் நோய், கண்ணில் ஏற்படும் தொழிற்பாட்டுக் குறைபாடுகள் (Neuro- ophthalmological symptoms) போன்ற அனைத்து நரம்பியல் உபாதைகளுக்கும் வடக்கின் முன்னணி விசேட வைத்திய நிபுணர்களினால் ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

## Services at Neuroscience centre

**எமது நரம்பியல் பிரிவில் தற்பொழுது...**

MRI and CT SCAN
Sleep study
Botulinum toxin injection clinic
Electromyogram (EMG)
Nerve conduction study (NCS)
Movement Disorder Clinic
Acute stroke and Rehabilitation
Electroencephalogram (EEG)
Parkinson's Disease and Epilepsy Clinics

NEUROSCIENCE CENTER



போன்ற வசதிகளுடன் பின்வரும் நரம்பியல் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளலாம்

**Neurosurgeries at our Hospital**

- ✔ Anterior Cervical decompression and fusion
- ✔ Lumbar microdissectomy
- ✔ Lumbar Screw Fixation
- ✔ Burrhole
- ✔ Craniotomy
- ✔ VP shunt

**இருதய சிகிச்சைப் பிரிவு CARDIAC CENTER**

இருதய சத்திரசிகிச்சைகளை மேற்கொள்வதற்கு நெடுந்தூரம் பயணம் செல்ல வேண்டிய தேவை இப்பொழுது இல்லை.

யாழ்ப்பாணத்திலேயே உங்கள் வசதிக்கேற்றவாறு எந்தவித அசௌகரியங்களுமின்றி சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளலாம்.

நொதேண் சென்றல் வைத்தியசாலை உலகத்தரம் வாய்ந்த நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய இருதய சத்திரசிகிச்சை வசதிகளைக் கொண்டிருப்பதுடன் இற்றை வரை 90 மேற்பட்ட சத்திர சிகிச்சைகளை உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியில் பிரபலம் வாய்ந்த சத்திர சிகிச்சை நிபுணர்களினால் Oxonion Heart Foundation பங்களிப்புடன் வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

இதற்கான மொத்தக் கட்டணத்தில் குறிப்பிடப்பட்ட தொகையை ஜனாதிபதி உதவி நிதியம் மற்றும் ஆளுநர் உதவி நிதியத்திலிருந்து (President's fund and Governors' fund) மீளப் பெற்றுக்கொள்ள முடியும்.

**Northern Central Hospital**
342, Palaly Road, Thirunelvely, Jaffna.
T.P: 021 221 9988, 021 221 9977, 021 222 2263


e-mail:nchjaffna@gmail.com Website: www.nchjaffna.com

நடுநிலை தவறா சேவையாளன் உம் சேவை தொடர வாழ்த்துகின்றோம்

அச்சமைப்பின் புதிய பரிமாணத்துடன்...

# மதி கலர்ஸ்

# பிறிண்டர்ஸ்




**10, முருகேசர் லேன், நல்லூர். 021 2229285**

YARL HOSPITAL

யாழ். திருநெல்வேலியில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட

# யாழ் வைத்தியசாலை

24 மணிநேர சேவை

## தற்போது அதிநவீன வசதிகளுடன் கூடிய சத்திர சிகிச்சைக் கூடம்

**✓ Laproscopy Surgery** (வீடியோ மூலம் சத்திரசிகிச்சை)

- **-Hernia** (ஹேணியா) — 130,000/=
- **-Appendectomy** (அப்பன்டிஸ் சத்திரசிகிச்சை) — 110,000/=
- **-Hysterectomy** (கருப்பை அகற்றல்) — 130,000/=
- **-Cholecystectomy** (பித்தப்பை அகற்றல்) — 130,000/=
- **-Lap & Dye Examination** — 55,000/=
- **-LRT** (கர்ப்பத்தடை சத்திரசிகிச்சை) — 70,000/=

**✓ Gyn & Obs** (பெண்ணியல் சத்திரசிகிச்சைகள்)

- **-LRT** (கர்ப்பத்தடை சத்திரசிகிச்சை) — 55,000/=
- **-Vaginal Hysterectomy** (குடல் இறக்க சீர் செய்தல்) — 110,000/=
- **-Abdominal Hysterectomy** (கர்ப்பப்பை அகற்றல்) — 120,000/=
- **-D & C** (கர்ப்பப்பை சுத்திகரித்தல்) — 39,000/=

**✓ Laser Surgeries**

- **-Laser Vericose Surgery** (வரிகோஸ் சத்திரசிகிச்சை)

**✓ Eye Laser Treatment**

நீரிழிவு நோயினால் தாக்கமடைந்த விழித்திரையின் நரம்பு பகுதி மற்றும் குருதி கசிவை நிறுத்துவதற்கான லேசர் சிகிச்சை

**Video Colonoscopy** (வீடியோ மூலம் (மலவாசல்) பெருங்குடல் பரிசோதனை) 50,000/=

**Video Endoscopy** (வீடியோ மூலம் உணவுக்கால்வாய் பரிசோதனை) 12,500/=

அக்ராகாரா. அரச/ ETF தனியார் நிறுவனங்களின் காப்புறுதி அங்கீகாரம் பெற்றது.

**✓ General Surgeries**

- **-Vericosevein** (வரிகோஸ் சத்திரசிகிச்சை) — 95,000/=
- **-Hernina** (ஹேணியா சிகிச்சை) — 95,000/=
- **-Appendectomy** (அப்பண்டிஸ் சத்திரசிகிச்சை) — 80,000/=
- **-Thyroidectomy** (தைரொட்டு சுரபி அகற்றல்) — 130,000/=
- **-Parotidectomy** (உமிழ் நீர் சுரப்பி அகற்றல்) — 110,000/=
- **-Anal Fissure** — 45,000/=
- **-Anal Fistula** — 45,000/=
- **-Haemorrhoids (Piles) Surgery** — 55,000/=

**✓ E.N.T சத்திர சிகிச்சைகள்**

**Nose மூக்கு**

- **-Septoplasty** (மூக்கு சீராக்கல்) — 90,000/=
- **-Septorhinoplasty** — 170,000/=
- **-Endoscopic Sinus Surgery** — 95,000/=
- **-Endoscopic Nasal Polypectomy** — 85,000/=

**Ear காது**

- **-Myringoplasy** (காது சௌவு துவாரம் அடைத்தல்) — 80,000/=
- **-Mastoidectomy** — 120,000/=

**Larynx & Throat தொண்டை**

- **-Tonsilectomy / Adenoidectomy** — 75,000/=
- **-Phono Surgery** (குரல் மாற்ற சத்திரசிகிச்சை) — 60,000/=
- **-Thyroidectomy** (தைரொட்டு சுரபி அகற்றல்) — 130,000/=

மேலே குறிக்கப்பட்ட கட்டணங்கள் அனைத்தும் சத்திரசிகிச்சை கூடம், வைத்திய நிபுணர்கள், அத்துடன் ஒரு நாள் இணைந்த குளியலறையுடனான தங்கும் விடுதி அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(நிபந்தனைக்குட்பட்டது)

(SUP/1506)(10)

315, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 3533, 021 222 1011, 0777 781 005

மேலதிக தகவல்களுக்கு: 077 310 7685

## என்றென்றும் சுடர்விட்டு பிரகாசிக்கட்டும்



தமிழ் மக்களின் உரிமைக்குரலாக, உண்மைக்குரலாக என்றும் தலை நிமிர்ந்து நிற்கிறான் உதயன். இலங்கை வாழ் தமிழ் மக்களின் வேலைவாய்ப்புக்கள், வெளிநாடு செல்பவர்களுக்காகத் தகவல்கள் மற்றும் பாராட்டுச் செய்திகள், துயரச் செய்திகள், அன்றாடம் நடைபெறும் முக்கிய நிகழ்வுகள், சம்பவங்கள் அனைத்தையும் உள்ளதை உள்ளபடி கூறுவதில் உதயன் தனித்துவமானது. அதுமட்டுமல்ல சமூகக் கதைகள், சமூக சீர்திருத்தக் கருத்துக்களைப் பத்திரிகையில் பிரசுரித்து மக்களை நல்வழிப்படுத்துகின்றதுடன் இலைமறைக்காயாக இருக்கும் எழுத்தாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவும் அமைகின்றது. இதனால் பாலர் தொடக்கம் முதியவர் வரை விரும்பிப் படிக்கின்றனர். எந் நிலைவரினும் தன்னிலை மாறாது துடிதுடிப்புடன் துணிவான சேவைதனை அளிக்கும் உதயனே 'நீ நீடுழி வாழ்க. உன் புகழ் திக்கெங்கும் பரவட்டும்.

திருமதி பு.மங்களேஸ்வரன்,
அதிபர்,
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை.

## மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



திக்கெட்டும் செய்திகளை திகட்டாது எடுத்தியம்பி உதயத்தின் முன்னே உதித்துவரும் உதயனே முப்பத்தி மூன்றாண்டுகள் முழுமை பெற்ற உன் சேவை மண்ணகத்தில் நாமெல்லாம் மனம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம். கல்வி அறிவும் கலை இலக்கியமும் கவிதை, கட்டுரைகள் வீறுகொண்ட விளம்பரங்கள், அரசியல், வரலாறும் ஆரோக்கியம் தரும் விளையாட்டு அவை பல சுமந்து தரும் சூரிய காந்தியும் பள்ளி பாலர் முதல் பல் இழந்த பாட்டனாரும் உன் பல்சுவை கண்டு கனிந்திடுவர். எம் இனத்தின் ஆற்றுகைகள் அஞ்சலிகள் மற்றும் அன்றாட நிகழ்வுகளை அருகினிலே கொண்டு வந்து தன்மானத் தமிழனுக்காய் குரல் கொடுக்கும் தமிழன்னை நீ பல்சுவையுடன் பல்லாண்டு வாழ்க.

ந.பூலோகசிங்கம்,
அதிபர்,
வவுனியா இந்துக் கல்லூரி.

## தமிழ் மக்களுக்காக ஓங்கி ஒலிக்கட்டும்



பன்னாட்டு ரீதியில் ஈழத்தமிழரின் குரலாக 33 ஆண்டுகள் ஒலித்துக் கொண்டிருக்கும் உதயன் மேலும் புதுப் பொலிவுடனும் நவீன தொழில் நுட்பத்துடனும் அடுத்துவரும் காலங்களில் தரணி தனில் தமிழ் மக்க ளுக்காக ஓங்கி ஒலிக்க வாழ்த்துகின்றேன்
செய்திகளின் உண்மைத் தன்மையும், நடுநிலைமையும் பேணி துரிதமாக செய்திகளைத் தரும் உதயன் ஒவ்வொரு தமிழ் மக்களினதும் வீட்டுப்பிள்ளையாக உறவாடி வளர்ந்து சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

க.கிருஸ்ணகுமார்
அதிபர்,
நெல்லியடி மத்திய கல்லூரி

## ஏறுபோல் வீறு நடை போடும் உதயனே



ஊடக நெறிமுறைகளை அனுசரித்தே ஊர் உலக செய்திகளைத் தாங்கித் தினமும் உலாவரும் உதயனுக்கு 34ஆவது அகவை இன்று ஊழிக் காலம் வரை வாழ்கவென வாழ்த்துகின்றேன்.
எத்தனை இன்னல்கள், எத்தனை சவால்கள் அத்தனையும் எதிர் கொண்டு வெற்றிப்பாதையில் தடம் பதித்து எம் சுந்தரத் தமிழால் தகவல்கள் தந்து ஏறுபோல் வீறு நடை போடும் உதயனை ஏற்றமுடன் பணி தொடர வாழ்த்துகின்றேன் வாழியவே.

க.மங்களேஸ்வரன்,
அதிபர்,
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி.

## சிறப்பாக ஊடக பணியாற்றும் உதயன் நாளிதழ்



ஊடகப் பணியில் 34 ஆவது ஆண்டுக்குள் பிரவேசிக்கும் உதயன் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகமகிழ்வு கொள்கின்றேன்.
பல்வேறு கடினமான சூழ்நிலைகளையும் எதிர் கொண்டு வெற்றிகரமான ஊடகப் பணியாற்றும் உதயன் பத்திரிகை, தொடர்ந்து சமூகத்துக்கு ஏற்ற வகையில் தன்னகத்தே கொண்டு விளங்கவும் ஆரோக்கியமான தமிழ்ச் சமூகவியலை எமது மண்ணில் பேணிப் பாதுகாக்கவும், தனது பணிகளை தொடர்ந்து ஆற்றிட எனது வாழ்த்துக்களை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ரி.தனேஸ்வரன்,
அதிபர்,
சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி.




## எத்தனை இடர்கள் வந்தாலும் ஓங்கி ஒலிக்கும் உதயன் குரல்



உதயன் தனது 34ஆவது ஆண் டில் காலடி வைத்ததை இட்டு வாழ்த்தைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். கடந்த காலங்களில் தமிழர் பகுதிகளில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையிலும் மிகவும் துணிச்சலுடனும் பல நெருக்கடிகளைத் தாண்டி உதயன் நாளிதழ் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டு இருந்தது. ஒரு பத்திரிகையானது எத்தனை இடர்களைத் தாண்டி தன்னை நிலைநிறுத்திக் கொள்ள உழைக்க வேண்டும் என்பதற்கு "உதயன்"ஒரு சான்றாகவே அமைந்துள்ளது.
தமிழ் மக்களின் குரலாக , நடுநிலைத்தன்மையுடனும், துணிச்சலு டனும் எத்தனை இடர்களைச் சந்தித்தாலும் உதயன் தனது பணியைச் சிறப்புடன் தொடர வாழ்த்துகின்றேன்.

சு.சிவானந்தன்,
அதிபர்,
மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்



## மங்காப் புகழ் பெற்ற உதயனே



மக்கள் மனதில் மங்காப் புகழ் பெற்ற உதயனின் புதிய அகவைக்கு வாழ்த்துரைப்பதில் நிறைவடைகின்றேன். நாட்டில் நடப்பவை , சமகால வாழ்வை, அரசியல் பொருளாதாரத்தை, கலாசார ஆன்மிக, கல்விச் செயற்பாடுகளை தத்துருபமாக தினமும் காட்டும் கண்ணாடியாக வலம் வந்து கொண்டிருக்கிறான் உதயன் என்றால் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை தூண்டச் செய்யும் அரும்பணிகளை ஆற்றியிருக்கும் உதயன், சமூகப் பணியோடு கல்விச் சமூகம் பயனடையக் கூடிய வகையில் ஊடக செந்நெறிக்கேற்ப வெளியீடுகளை வெளிப்படுத்தி வருகின்றமை பாராட்டுக்குரியது. அந்த வகையில் மூன்று தசாப்தங்களைக் கடந்து பல சவால்களுக்கு மத்தியில் அதிகளவிலான வாசகர்களை தன்னகத்தே கொண்டு வெளிவந்து கொண்டிருக்கும் உதயன் எதிர்காலத்திலும் எமது தமிழ்பேசும் சமூகத்துக்கு பயனடையக் கூடிய புதிய திட்டங்களை உருவாக்கி பயணிக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

தி.அபராஜிதன்,
அதிபர்,
யா/போக்கட்டி அ.த.க.பாடசாலை கொடிகாமம்.

## தரணி ஓங்கும் உதயனே!



எழுவான் திசையிலிருந்துஒளிவீசும் ஆதவனைப் போல் ஈழ மண்ணின் நித்திலமாக இருளைஅகற்றி அறிவுஎன்னும் ஒளியினைஏற்றி தொடர்ந்துவெற்றிநடைபோட 34 ஆவதுஅகவைதனில் தடம் பதிக்கப் புறப்பட்ட உதயனே, உமதுஓயாதபணியைநினைத்துஅகமகிழ்ந்துவாழ்த்துகின்றேன்.
உமதுபணியோஅளப்பரியது.
காலைப்பொழுதில் மாந்தர் கரங்களில் தவழ்வதும், புரியாதசெய்திகளைப் புரியவைப்பதும் உமதுபணியன்றோ.
அன்னப் பறவையானதுநீரைவிலக்கிவிட்டுபாலைமட்டும் அருந்துவதுபோலமக்களின் மனங்களில் நம்பகத்தன்மையுடன் என்றும் செயலாற்றிற் தரணியில் புதுமணம் வீசிவெற்றி நடைபோடவாழ்த்துகின்றேன்.

கே.தவகீஸ்வரன்
அதிபர்,
யா/கொழும்புத்துறை இந்து ம.வி.

## உதயனின் நற்பணிதொடரட்டும்



பத்திரிகையாக மட்டும் தனித்து நிற்காது பல சமூக நற்செயற்பாடுகளுக்கும் புதிய உத்வேகம் அளிப்பது பாராட்டுதற்குரியது. சமூகம், சமயம்,கலை,கலாசாரம்,அரசியல்,பொருளாதாரம், விஞ்ஞானம்,தொழில்நுட்பம் என சகலதுறைகளிலும் செய்திகளை வழங்கிவரும் உதயன், ஈழத்தமிழர் வரலாற்றையும் தொடர்ச்சியாகக் காட்டிவருவதுதமிழ் மண்ணிலுள்ள பற்றினை பறைசாற்றுகின்றது. சூரியன் உதயமாகுமுன் எங்கள் கரங்களில் தவழும் உதயன் பத்திரிகை பூவுலகு உள்ளவரை நீடித்து நிலைத்து நேர்மையானபணியைச் செய்ய இறை ஆசிவேண்டி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமதி.வ.முகுந்தன்
அதிபர்,
யா/சாவகச்சேரிமகளிர் கல்லூரி

## வாழ்க உதயன்



ஊடகத்துறையில் 34 ஆவது அகவையில் தடம்பதிக்கும் உதயன் பத்திரிகையை வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றேன். உதயன் மக்களுக்காக ஆற்றிய சேவைகள் அளப்பரியன. மேலும் செய்திகளை உடனுக்குடன் நேர்மை தவறாது வெளியிட்டு வருகின்ற உதயனின் ஊடகப் பணி தொடர வாழ்த்துக்கள். மேலும் கல்வி உலகுக்குத் தேவையான ஆக்கங்கள், அனுசரணைகள் வழங்குவதில் அவனுக்கு நிகர் யாரும் இல்லை. மாணவர்களின் பல்வேறு ஆற்றல்களை விருத்தி செய்வதற்கான பல்வேறு செயற்பாடுகளினூடாக மாணவர்களின் வாசிப்புத் திறனுக்கு விருந்தளிப்பவன் என்றால் அது மிகையாகாது.
உதயன் பத்திரிகை ஆசிரியர், நிருபர்கள், பணியாளர்கள் அனைவரது பணிகள் தொடர வாழ்த்துகின்றேன். உதயனது பணி இன்னும் பல நூற்றாண்டுகள் தொடர எனது வாழ்த்துக்கள்.

க.சத்தியானந்தன்,
அதிபர்,
யா/மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை.

## வாசிப்புத் திறனுக்கு விருந்தளிப்பவன்

ஊடகத்துறையில் 34ஆவது அகவையில் தட்ம்பதிக்கும் உதயன் பத்திரிகையை வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றேன். உதயன் மக்களுக்காக ஆற்றிய சேவைகள் அளப்பரியன. செய்திகளை உடனுக்குடன் நேர்மை தவறாது வெளியிட்டு வருகின்ற உதயனின் ஊடகப் பணி தொடர வாழ்த்துக்கள். கல்வி உலகுக்குத் தேவையான ஆக்கங்கள், அனுசரணைகள் வழங்குவதில் அவனுக்கு நிகர் யாரும் இல்லை. மாணவர்களின் பல்வேறு ஆற்றல்களை விருத்தி செய்வதற்காகப் பல்வேறு செயற்பாடுகளினூடாக மாணவர்களின் வாசிப்புத் திறனுக்கு விருந்தளிப்பவன் என்றால் அது மிகையாகாது. உதயன் பத்திரிகை ஆசிரியர், நிருபர்கள், பணியாளர்கள் அனைவரதும் பணிகள் தொடர வாழ்த்துகின்றேன். உதயனது பணி இன்னும் பல நூற்றாண்டுகள் தொடர எனது வாழ்த்துக்கள்.

**க.சத்தியானந்தன்,**
யா/மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை.

## சூரியன் உதிக்கும் காலம் வரை உதிக்க வாழ்த்துகிறேன்

ஈழத் தமிழர் உள்ளங்களில் என்றும் உதிக்கும் என்ற நம்பிக்கையை பேணிய பத்திரிகை உதயன் என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

போர்க்காலத்தில் இரவு முழுவதும் நாங்கள் பதுங்கு குழியில் இருந்துவிட்டு அதிகாலை வெளியே வந்து சூரியன் உதயமாவதற்கு முன் என்ன நடந்தது என்ற அறிய கடைக்குச் சென்றால் அங்கே உதயன் பத்திரிகை அச்சிடப்பட்டு வெளி வந்திருக்கிறது. நல்லூர் பகுதியிலும் குண்டு வீழ்ந்த செய்தியும் இருக்கும். எங்கே வைத்து பத்திரிகையை அச்சிட்டார்கள் என்பது தான் எமக்கே பெரிய புதினமாக இருக்கும். இது பத்திரிகையில் இருக்காது. ஆனால் அறிய வேண்டும் என்று அறிந்தால் பதுங்குழியில் வைத்துத்தான் பத்திரிகை அச்சிட்டார்கள் என அறிந்தேன். தாள்கள் தட்டுப்பாடு காரணமாக பத்திரிகை வெளிவராது என்று எண்ணிய காலங்களிலும் வெளிவந்தது. அதனால் தான் என்றும் மக்களின் நம்பிக்கையை வென்றிருந்தது.

எந்த இறப்பையோ செய்தியையோ உதயனில் பார்த்து நம்பும் நம் மக்களின் நம்பிக்கைக்குரிய செய்தியானான். சூரியன் உதிக்குமளவும் உதயமாக வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**சைவப் புலவர்,**
செ.பரமேஸ்வரன்.
அதிபர், ஏழாலை சிறி முருகன் வித்தியாலயம், ஏழாலை.

## உதய சூரியனைப்போல் ஒளி குன்றாது வாழ்க



இன்று உதயன் தனது 33 ஆவது அகவை நிறைவைக் கொண்டாடுவதுடன் 34 ஆம் ஆண்டிலும் வெற்றிகரமாக அடியெடுத்து வைக்கிறது. உதயன் யாழ்ப்பாணத்தில் இருந்து நெடுங்காலம் வெளிவரும் முன்னணி நாளாந்த தமிழ்ப் பத்திரிகை. யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் முக்கியமான கால கட்டவாழ்க்கையில் உதயன் ஆற்றிய பங்கு மறக்க முடியாதது. மிகச் சிக்கலான அரசியல் சமூகப் பொருளாதாரச் சூழ்நிலையிலும் இது தொடர்ந்து வெளிவந்தது. உதயன் பத்திரிகையின் ஆரம்ப காலத்திலிருந்து அதன் வளர்ச்சியைப் பார்த்து வருபவன் நான். முகாமைத்துவம் மிக்க நிர்வாகி, அர்ப்பணிப்பு நிறைந்த ஆசிரியர்கள்,துணை ஆசிரியர்கள், ஊழியர்கள்,எந்தச் சூழ்நிலையிலும் செய்தியை சென்று சேகரித்து வழங்கிய நிருபர்கள் என உதயனை, உயிரையும் கொடுத்து வளர்த்தார்கள். அதனால் யாழ்ப்பாண மக்களுடன்,அவர்களது நாளாந்த வாழ்க்கையுடன் உதயன் இரண்டறக்கலந்து விட்டது. தங்கள் வீட்டுவிஷேசங்களையும்உதயனூடாகபகிர்ந்து கொண்டால் அது அதிகம் பேர்களைச் சென்றடையும் என்பது அவர்கள் நம்பிக்கையாகிவிட்டது.

2013ஆம் ஆண்டு நவம்பர் 27கள் அன்று பிரான்சின் தலைநகர் பரிசைத் தளமாகக் கொண்டு இயங்கும் எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு ஆண்டு தோறும் பன்னாட்டு ரீதியாக வழங்கிவரும் ஊடக சுதந்திரத்துக்கான விருதுகளில் மிக முக்கிய விருது உதயனுக்கு வழங்கப்பட்டுள்ளது. பிரான்சின் வடகிழக்குப் பிராந்தியமான ஸ்ராஸ்போர்க்கில் உலக ஊடகவியலாளர்கள் பெரும் எண்ணிக்கையில் திரண்டிருந்த ஒரு நிகழ்வில் வைத்து இந்த விருது உதயனுக்கு வழங்கப்பட்டது.

உதயன் என்பது சிறப்பாக சூரியனைக் குறிக்கும் பெயர். நாளாந்தம் சூரியன் உதயமாகி உலகுக்கு ஒளிகொடுத்து இயற்கையைப் போஷிக்கிறது. அதுபோல் உதயன் பத்திரிகையும் தொடர்ந்தும் இவ்வாறு தன் பணியை செய்து பொன்விழா, நூறாண்டு விழாக்களைக் கண்டு பணியாற்ற மனதார வாழ்த்துகிறேன்,ஆசி கூறுகிறேன்.

**தமிழருவி த.சிவகுமாரன்**
அமைப்பாளர்,வவுனியாத் தமிழ்ச் சங்கம்

## துணிச்சலுடன் பயணிக்கட்டும்



ஈழத்தமிழர்களின் ஊடகத்துறையில் சிறந்து விளங்கும் உன்னத உதயன் பத்திரிகையின் 34 ஆவது ஆண்டு சிறப்படையவும் இன்னும் பல தசாப்தங்கள் தாண்டி உண்மை துணிச்சலுடன் தமிழர் மனங்களில் பயணிக்கவும் பயன்பெறவும் பயணிக்கும் என்பதில் ஐயமில்லை நான் சிறுவயது முதல் பார்க்கும் பத்திரிகைகளில் முதன்மை யானவை உதயன். யாழ். மக்களுக்குச் சிறந்த பங்கு ஆற்றியது. உதயன் உதயமாகட்டும் பல இருள்நீங்க ...வாழி வாழி ..வாழி

**கலாநிதி .நா. செந்தூர்ச்செல்வன்**
அதிபர்
சிதம்பரேஸ்வரம் நடனாலயம் வவுனியா ,அநுராதபுரம் .



## எங்கள் குடும்பப் பத்திரிகை உதயன்

எங்கள் தாத்தாவுக்கு விடிந்ததும் உதயன் கட்டாயம் தேவை. தேத்தண்ணி குடிக்காவிட்டாலும் பேப்பர் அவருக்குச் சுடச்சுட ஒரு கோப்பி மாதிரி எல்லோரையும் படிக்குமாறும் செய்வார். சிலவேளை கடையில் பொருள்கள் கட்டிவரும் பேப்பரையும் திரும்பத் திரும்பப் படிப்பார். அது உதயனாக இருந்தால் அதற்கு ஒரு மரியாதை செய்வார்.

உதயனை எரிக்கவும்மாட்டார்
உதயனை எறியவும் மாட்டார்.

தாத்தாவுக்கு அரசியல் என்றால் ஊன்றிப் படிப்பார். பாட்டிக்கு குறுக்கெழுத்துப் போட்டி என்றால் நிரப்பி அனுப்புவார். அவருக்கு முதல் பரிசும் கிடைத்துள்ளது. ஆனால் பரிசு வாங்கவில்லை. எனது அம்மா, எனது சித்தி, எனது சித்தப்பாமார் எல்லோரும் உதயனை சும்மா விடமாட்டார்கள். விமர்சிப்பார்கள். எழுத்துப் பிழை இருந்தால் நான் கண்டுபிடித்துவிடுவேன். உதயன் மாணவருக்கான பத்திரிகையும் கூட. சிறுவருக்கான பகுதியை விருப்பமோடு வாசிப்பேன். எனது சித்திரம் உதயனில் பல வந்துள்ளது. மேலும் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். சிறுவர்களுக்காக உதயன் குரல் கொடுக்க வேண்டும். சிறுவர்களுக்கு ஓய்வு அவசியம். விளையாட்டும் அவசியம். அது இல்லாமல் போய்விட்டது. எந்த நேரமும் படிபடி என்று சொல்லாமல் படிப்பதற்குரிய சூழலை ஏற்படுத்தினால் உதயன் போல ஒவ்வொரு பிள்ளையும் உலகில் சாதிப்பான். உதயனுக்கு பிறந்தநாள் 27.11.2018 ஆகும். ஆயிரம் பிறைகண்டு நலமுடம் நீ வாழ்ந்து சாதிப்பாயாக. மரம் நடுகை மாதம் இதுவாதலால் 34ஆவது வயதுக்கான ஒரு வான் மரம் உங்கள் அலுவலத்திலும் நட்டு உதயனை மகிழ்விப்பீர்களாக.

**சிவ. பிருத்வி (மாணவன்)**
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

## வெற்றி நாயகனுக்கு அகவை நல்வாழ்த்துகள்



ஈழத்திருநாட்டிலும் உலகெங்கிலும் நாளிதழினூடாகவும் இணையத்தினூடாகவும் மக்கிளின் குரலாக ஒலிக்கும் வெற்றி நாயகன் 34 ஆவது ஆண்டில் கால் தடம் பதிக்கும் உதயனுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன். குடும்ப நாளிதழாக இருந்து தனது மக்களுக்குத் திருப்திகரமான உண்மையான சேவையை உடனுக்குடன் வழங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சேவையாற்றுகின்றான்.

காலையில் உதயமாகும் பகலவன் பனியைக் கிழித்த வண்ணம் எழுதுவதுபோல் சோர்ந்த மனங்களை எல்லாம் புத்துணர்வுடன் செயற்படத் தன்னகத்தே அரசியல், விளையாட்டு, உள்நாட்டு வெளிநாட்டுச் செய்திகள், சிறுவர்பகுதி, கவிதை, கட்டுரைகள், சிந்தனைத்துளிகள் எனப் பல செய்திகளோடு கடந்த மூன்று தசாப்தங்களையும் கடந்து ஊடக தர்மத்தின் வழியே அஞ்சாத நெஞ்சனாகப் பற்பல தடங்கல்கள் இடையூறுகளையும் தாண்டித் தனது வைராக்கியம் மிக்க சேவையைத் தமிழரின் உரிமைக் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் மக்களின் மனம் நிறைந்த தமிழ் நாளிதழாக தொடர்ந்தும் தனது சேவையைத் தமிழரின் உரிமைக் குரலுக்காக ஒலிக்க இந்த இனிய நன் நாளில் வாழ்த்துகின்றேன்.

**கி.விக்னராஜா**
கிளிநொச்சி இந்துக்கல்லூரி அதிபர்,

## உள்ளமதை அள்ளிக்கொள்ளும் ஒப்பற்ற குடும்ப நாளிதழ்



ஊடக சாம்ராஜ்ஜியத்தில் உள்ளமதை அள்ளிக்கொள்ளும் ஒப்பற்ற குடும்ப நாளிதழ் உதயன் வடமாகாணத்தின் வரப்பிரசாதம் நீயேதான். அரசியலிலிருந்து ஆன்மிகம் வரை அரசனில் இருந்து ஆண்டி வரை இரகசியத்தில் இருந்து பரகசியம்வரை இருட்டிலிருந்து விடியும் வரை உறவிலிருந்து உலகம் வரை ஊரிலிருந்து அட்டதிக்கு வரை உருப்படியான செய்திகள் இந்த மண்ணிலே ஊன்றிச் செறிவிக்கின்ற உன்னதமான பணியில் துடிப்போடும், பொறுப்போடும், விருப்போடும் தொய்வின்றிச் சுடச்சுடத் தருகின்றாய். ஆசிரியர் தலையங்கம், புதன் பொய்கை, ஞாயிறு வார இதழ், சூரிய காந்தி, விளையாட்டு அதிரடி, விளம்பர யுத்தி, மோட்ச தீபங்கள், இலக்கிய வார்ப்புகள், மருத்துவ மாண்புகள் சிறுகதைகள், சிறுவர் விருந்து, பல்சுவைப் பொரியல்கள், சினிமா இனிப்புக்கள், வல்லரச வாண்மைகள், விண்வெளிச்சாதனைகள், தித்திக்கும் திருவிழாக்கள், மணிவிழா மேதாவிகள், மாங்கல்ய அழைப்புக்கள் புலமைப் பரீட்சைப் புலமையாளர்கள், சாதாரண உயர்தரச் சாதனையாளர்கள், பல்கலைக்கழகச் சிரஞ்சீவிகள், அங்கேற்றங்கள், அறிவித்தல்கள், நாடாளுமன்ற அதிசயங்கள், ஜனநாயகப் போராட்டங்கள், உரிமைப்போராட்டங்கள், உணவு ஒறுப்புக்கள், அடாவடிகள், அட்டகாசங்கள், அதிகார முறைகேடு, பெண்ணுரிமைகள், கண்காட்சிகள், மனித பதைகுழிகள், விபத்துக்கள், வியாபார நடவடிக்கைள், மாநாடுகள், சமய விழுமியங்கள் என எமது வாழ்வுக்கு அத்தியாவசியமான செய்திகளைப் பட்டென்று சட்டென்று பரோபகாரமாய்ப் படைக்கின்றாய். வாசகரின் பசியை ஆவலோடு போக்குகின்றாய், நீயும், உனது குடும்பமும் தித்திக்க நீடூழி வாழவேண்டும். 34 வயதென்பது உன்மீது காதல் கொள்ளும் வயது. இப்போது உனக்கு நல்லகாலம் செல்வாயாக.

**கே.எஸ் சிவஞானராஜா**

## எட்டுத்திக்கும் பரவட்டும் உந்தன் புகழ்



உன்னதமானஉயிர்ப்போடுஉலகை நடப்புகளைஊரறியகொண்டுவருபவனேநாள்தோறும் வருபவனே நீ நாற்திசையும் அறிந்தவனே புதன் கிழமைகளில் பொல்பொய்கையாய்மாறிடுவான். ஞாயிற்றுகிழமைகளில்மனையாள்நாமம்சூட்டிக் கொள்வாய் முப்பத்து நான்காவது அகவையில் கால்பதிக்கும் கரிகாலன் நாமம் கொண்டவனே. ஆண்டு முந்நூறு கடந்தாலும் உதயன் உன் இளமை மாறாது ...

என்றென்றும் வாழ்த்துகளுடன்,
முல்லைக்கவி தனுஜா.

## சமூகத்தின் உரிமைக் குரலாக ஒலிக்கும் உதயன்



மனிதர்களின் தேவைகளை நிறைவேற்றப் பக்கபலமாகவும் நேரியதோர் வழிகாட்டியாகவும் சமூகத்தின் உரிமைக் குரலாகவும் அமையும் ஊடகங்களை தலைவணங்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். அத்தகைய ஊடகங்களில் முதன்மை வகிக்கும் உதயன் பத்திரிகை 34ஆவது அகவையில் கால் பதிப்பதையிட்டு நாம் பேருவகை அடைகின்றோம். உதயன் பத்திரிகையானது யாழ்ப்பாணத்திலிருந்து நெடுங்காலம் வெளிவரும் முன்னணி நாளாந்தப் பத்திரிகை என்பது யாவரும் அறிந்ததே. தமிழ்த் தேசியச் சூழலில் சமூகத்தின் உரிமைக் குரலாக உதயன் பத்திரிகை ஆற்றிவரும் ஊடகச் சேவை அளப்பெரியது. தான் வரித்துக் கொண்ட ஊடகக் கொள்கையின் பால் முற்பத்து மூன்று ஆண்டுகள் கழிந்தும் வழி தவறாது ஊடக தர்மத்தின் சான்றாக விளங்குகின்றது. இராணுவத்தினர் ஈழப் பகுதிகளை ஆக்கிரமித்தபோது உதயன்பத்திரிகை மூலம் எழுதப்பட்ட அரசியல் கட்டுரைகள் தமிழ்த் தேசியச் சூழலை அடித்தளமாகக் கொண்டு விளங்கியதை நாம் அறிவோம். அன்று தொட்டு இன்றுவரை தடம் மாறாத தமிழ் தேசியத்தையும் ஊடக தர்மத்தையும் இணைத்துச் செல்லும் பாங்கு மதிப்பிற்குரியதாகும்.

பல்வேறு சந்தர்ப்பவாத ஊடக வெளியீடுகளுக்கு மத்தியிலும் ஆயுத அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அடிபணியாது நின்று மக்களின் அபிலாசைகளையும் பூர்த்திசெய்யும் நற் சேவை புரியும் உதயன் பத்திரிகை ஊடக குழாமுக்கு அவர் தம் சேவை என்றென்றும் தொடர வாழ்த்துத் தெரிவிப்பதில் பேருவகையும் அடைகின்றோம்.

அருணாசலம் வேழமாலிகிதன்
கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர்.



## மக்கள் மனம் நிறைந்த பத்திரிகை



உண்மையுடனும் நேர்மையுடனும் தனித்துவமான மக்கள் மனம் நிறைந்த பத்திரிகையாக வெளிவரும் உதயன் 34ஆவது அகவையில் தனது காலடியைப் பதிப்பதில் பூநகரிப் பிரதேச சபையின் தவிசாளர் என்ற வகையில் வாழ்த்துக்கள் தெரிவித்து பெருமிதம் அடைகின்றேன். காலத்துக்குக் காலம் நேரத்துக்கு நேரம் விரைவாகவும் உண்மையுடனும் பத்திரிகை தர்மத்துக்கு அமைய நாட்டில் பல பகுதிகளில் இருந்து உடனுக்குடன் செய்திகளையும் அறிவு சார் விடயம் மற்றும் அரசியல் பொருளாதாரம் விளையாட்டுச் செய்தி என்பவற்றைத் தாங்கி வருவதுடன் கவிதை கட்டுரைகள் அனைத்தும் சிறப்பாக வெளிவருவதில் உதயனுக்கு தனக்கென ஒரு தனியிடத்தைக் கொண்டுள்ளமையால் தொடர்ந்தும் மென்மேலும் வளர எனது உளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றேன்.

தவிசாளர்,
பிரதேச சபை, பூநகரி.

## உயர்வின் உச்சத்தைத் தொட உதயனை வாழ்த்துகின்றேன்



அச்சுறுத்தல்களுக்கும் அழுத்தங்களுக்கும் அடிபணியாது. உறுதியான கொள்கையுடன் ஊடகத்துறையில் வீறுநடைபோடும் 'உதயன்' பத்திரிகை 34 ஆவது அகவையில் கால்பதிப்பதையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். தாயக மண்ணிலிருந்து தமிழ் மக்களின் குரலாக ஒலிக்கும் 'உதயன்' பத்திரிகை, அடக்குமுறைகளையும், அடாவடிகளையும் அம்பலப்படுத்தி, ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகச் சுமந்த வலிகளை வெறும் வார்த்தைகளால் மட்டும் விபரித்துவிட முடியாது.

தமிழர்களை அடக்கியாள சிங்களப் பேரினவாதிகள் திட்டம் வகுக்கையில் அதற்கு எதிராகக் குரல் எழுப்பி உண்மையை பன்னாடுகள் வரை கொண்டு சென்று குரல் அற்றவர்களுக்கான குரலாக விளங்கிய உதயன் பத்திரிகை பன்னாட்டு மட்டத்திலும் விருதுகளை வென்றுள்ளது. இது எம் மண்ணுக்குக் கிடைத்த பெருமையாகும். ஓர் இனத்தை அழிக்கவேண்டுமானால் போர்தான் தொடுக்கவேண்டும் எனக் கட்டாயம் இல்லை. அந்த இனத்தின் கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள், அடையாளங்களை அழித்தாலே தானாக அழிந்துவிடும். தமிழர் தாயகத்தில் இவ்வாறானதொரு போர்முறையும் அரங்கேற்றப்பட்டது.

இதற்கு எதிராகவும், எம் இனத்தின் அடையாளங்களைக் காக்கவும் எழுத்தாயுதம் ஏந்திப் போராடும் 'உதயன்' பத்திரிகைக்கும், அதன் குழுமத்தினருக்கும் நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அறிவுப் பசிக்குத் தேடல்தான் சிறந்த தீனி.

எனவே, எமது அறிவுப்பசியைப் போக்க நாளாந்தம் பல்வேறு தகவல்களைத் தாங்கி வெளிவரும் 'உதயன்' பத்திரிகை உயர்வின் உச்சம் தொட எனது வாழ்த்துகளையும் பதிவுசெய்ய விரும்புகின்றேன்.

அ.சா.அரியகுமார்
தவிசாளர்
பருத்தித்துறை பிரதேச சபை

## தமிழர் தாயகத்தின் உரிமைக்குரலோனுக்கு வாழ்த்துகள்



தமிழ் மக்களின் உரிமைப்பயணத்தில் மக்களோடு மக்களாக நின்று உரிமைக்காக என்றும் தளராது நடைபோடுகின்ற உதயன் பத்திரிகை தனது 34ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றமையையிட்டு வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன். முப்பத்து மூன்று வருடங்களாக எம் இனத்தின் தேவையறிந்து சேவையாற்றிவரும் எம் சமூகத்தின் காலக்கண்ணாடியான உதயன் பத்திரிகை எமதுசமூகத்தின் இருப்பிற்கு பக்கபலமாய் இருந்து இக்கட்டான சூழல்களிலும் பணியாற்றி வருகின்றான். தொடர்ந்தும் ஊடகப்பணியில் உயர்வடைய உதயன் பத்திரிகை நிறுவனத்தார்க்கு என் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் கூறிக்கொள்கின்றேன்.

செ.பிறேமகாந்
தவிசாளர், புதுக்குடியிருப்பு பிரதேச சபை

## பன்னாட்டு விருதுகளை வென்ற உதயன் இன்றும் வீறுநடையில்



தமிழ் மக்களின் இதயங் கவர்ந்த நாளிதழாகவும், உயிரோட்டமான செய்திகளையும், கட்டுரைகளையும், கவிதைகளையும் முறையான பக்க வடிவமைப்பில் வழங்கி வரும் உதயன் 34 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதனையிட்டு மிக்க் மகிழ்ச்சி அடைகின்றேன். கடந்த 3 தசாப்த காலத்துக்கு மேலாக நாடு தழுவிய ரீதியில் பல செய்திப் பத்திரிகைகள் வெளிவந்த போதிலும் 'உதயன்' தினசரி நாளிதழும், ஞாயிறு நாளிதழும் பல்வேறு கனதிகளுடன் தனித்துவமாக வெளிவருகின்றது. கடந்த காலங்களில் பல இன்னல்கள், போராட்டங்கள், அழிவுகளை எதிர்கொண்ட போதும் உதயன் இன்றுவரை அல்ல என்றும் பல நூற்றாண்டுகளுக்கு வீறுநடையுடன் வெளிவருவான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

த.நடனேந்திரன்
தவிசாளர் , வலி.மேற்கு பிரதேச சபை

## உதயன் தினசரி உதிக்க வாழ்த்துகள்



உதயனுக்கு அகவை முப்பத்து நான்கு என்பது பிரமிப்பை ஏற்படுத்துகிறது. வடமாகாண மக்களுக்கான உதயன் பத்திரிகை உதயமாகி இலங்கைத் தீவு முழுவதும் வலம் வருவது சிறப்பு. இலத்திரனியல் ஊடகங்கள் நிறைந்து கிடக்கும் உலகமயமாக்கல் உலகில் துணிச்சலுடன் வலம்வரும் பத்திரிகைகளில் உதயனும் ஒன்று என்பது மகிழ்ச்சியே. உதயன் தினசரி உதிக்க வாழ்த்துக்கள்.

தேசபந்து இ.கௌதமன்.
நகரபிதா,
வவுனியா நகரசபை.

## காத்திரமான ஊடகப் பணியாற்றிவரும் உதயன் பத்திரிகை



காத்திரமான ஊடகப் பணியாற்றிவரும் உதயன் பத்திரிகை 34ஆவது அகவையைத் தொடுவதில் பெருமையடைகின்றோம். பத்திரிகைப் பணி என்பது பெரும் தியாகங்களுக்கு உரித்தான ஒரு ஜனநாயகப் போராட்டத்துக்கான களமாகவே அமைகின்றது. அப் பணியை தளர்வற்ற முறையில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் நின்று உதயன் ஆற்றுவது போற்றுதலுக்குரியது.

போர் இடம்பெற்ற சமயத்திலும் தமிழ் மக்கள் மீது நிழல்போர் முடுக்கி விடப்பட்ட சமயத்திலும் உண்மைகளை வெளிக்கொண்டு வருவதற்காக உதயனின் உழைப்பை எதனுடனும் ஒப்பிட்டுப் நிகரடைய முடியா விடயமாகவுள்ளது. ஜனநாயகத்தில் மக்களின் அபிப்பிராயங்களே முக்கியத்துவமுடையனவாக அமைகின்றன. மக்களின் அபிப்பிராயத்தை சிறந்த முறையில் ஏற்படுத்தும் பத்திரிகைத்துறைக்கொள்கையை உதயன் முகாமைத்துவமும் ஆசிரியர்பீடமும் கொண்டுள்ளது என்பதனை பத்திரிகையை ஆய்வுப்பாங்கில் அணுகுபவர்கள் கண்டு கொள்வர். உதயன் கொண்டுள்ள கருத்துருவாக்கத்திற்கான களம் தமிழ்த் தேசிய அரசியலில் தாம் விரும்பியவாறு செல்வாக்குச் செலுத்திவிடலாம் எனக் கனவு காண்பவர்களுக்கு கடுப்பாக அமைவதும் குறிப்பிடத்தக்கது. இதனை நிகழ்கால அனுபவங்கள் வாயிலாக அறியலாம். உதயன் எப்போதும் தனது கருத்துத் தெரிவிப்புச் சுதந்திரத்திற்காகவும் மக்களின் கருத்தறியும் சுதந்திரத்திற்காகவும் விழிப்பாகவே செயற்பட்டுவருகின்றது. எனவே உதயனின் சேவை தமிழ் உலகுக்கு தொடர்ந்தும் தேவை. ஆகவே உதயன் மேலும் பல பரிமாணங்களில் பிரகாசிக்கவேண்டும் என வலிகாமம் கிழக்கு மக்கள் சார்பாக வாழ்த்துகின்றேன்.

**தி.நிரோஸ்**
தவிசாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை

## மக்களுடன் மக்களாக இணைந்த உன் சேவை தொடரட்டும்



34 ஆவதுஆண்டில் காலடி எடுத்து வைக்கும் தாயக மண்ணிலே தனித்துவமான குரலாக ஓங்கி ஒலிக்கும் உதயன் பத்திரிகை தமிழ் மக்களின் குரலாகவும்,போர்க் காலங்களிலும் மக்களுடன் மக்களாக இணைந்து சுடச் சுடச் செய்திகளை காலத்தின் தேவைக்கேற்ப அள்ளி வழங்கியதை நாம் மறக்கமுடியாது. அரசியல்,சமூகம்,கல்வி மற்றும் எல்லாத்துறைகளிலும் தன் எழுத்தாற்றல் மூலம் பல தகவல்களையும், புதிய அத்தியாயங்களையும் காலத்திற்குக் காலம் பலதடைகளையும் தாண்டி அள்ளி வழங்கியதில் உதயனுக்கு நிகர் உதயனே. பல இன்னல்களுக்கு மத்தியில் தொடர்ச்சியாக உதயன் வெளிவந்து மக்களின் மனங்களில் நீங்கா இடத்தை தட்டிக் கொண்டுள்ளது. அன்றுபோல் இன்றும் தனதுபணியை செவ்வனேசெய்துமேலும் பல புதிய அத்தியாயங்களை உருவாக்கி பரிணாம வளர்ச்சியடைய வேண்டும் என இறைவனைவேண்டி நிற்கின்றேன்.

சோ.சுகிர்தன்,
தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை,

## மக்கள் மனம் கவர்ந்து வீறுநடை போடும் உதயனே

தமிழர் மண் இருள்சூடி வெளித் தொடர்பு அற்று, நாட்டு நடப்புக்களை அறியமுடியாமல் அங்கலாய்த்துக் கொண்டிருந்த வேளை இருளைக் கிழித்துத் தாயக மண்ணில் மக்கள் குரலாக 34 ஆண்டுகளுக்கு முன் உதயமாகிய உதயசூரியனே! நீ பணியென்னும் கதிர் பரப்பி நாட்டு நடப்புக்களை மட்டுமல்லாது, கல்வி, கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களோடுசமையல்கலை, தேக ஆரோக்கியம், விஞ்ஞானம், மனித வாழ்வின் தத்துவங்கள் என பல துறைகளைச் தெரிய வைத்து தமிழ்மக்களின் வாழ்வியல் பொக்கிசமாக மக்கள் மனம் கவர்ந்து வீறுநடை போடும் உன்னை பல்லாண்டு பல்லாண்டு வாழி என வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தாமோதரம்பிள்ளை தியாகமூர்த்தி, தவிசாளர், பிரதேச சபை, நல்லூர்.

## விடியப்போகும் ஈழத்தின் விடிவெள்ளி உதயன்



நீண்ட காலமாக விடுதலைக்காக போராடிக்கொண்டிருக்கும் எமது இனத்தின் துன்பியல் நிகழ்வுகளையும் ,போராட்டத்தின் நியாயங்களையும்,போரியல் வெற்றிகளையும்,இனத்தின் வரலாறுகளையும் பன்னாட்டுக்கும் ,எமது மக்களிடமும் கொண்டுசேர்ப்பதில் பல இடர்களைக் கடந்து இன்று தனது 34 ஆவது வயதில் காலடி எடுத்து வைக்கும் உதயனுக்கு எனது உளப் பூர்வமான வாழ்த்துக்கள்.

எமது இனமும் என்றோ ஒருநாள் விடுதலையடைந்து தேசத்தில் சுதந்திரக் காற்றை சுவாசிக்கும். அப்போது எமது தாயகத்தின் ஒவ்வொரு வீடுகளிலும் நிம்மதி குடியிருக்கும் நீதியும் நேர்மையும் எம்மவரிடம் நிறைந்தே இருக்கும் அக்கணம் எமது தேசமும் எல்லைகளற்ற பொருளாதார நலன்களைப் பெற்றுக்கொள்ளும் அந்த நேரத்தில் தாயகத்தின் தனித்துவமான தமிழ்த் தேசியத்தின் தலைமகனாக,தமிழ் வானில் விடிவெள்ளியாக உதயன் உதயமாகும் என்பது உறுதி.

வாழ்க உன்பணி ...வளர்க உன் சேவை ....

நடுநிலை தவறாத தமிழ்த் தேசிய நாளிதழ்

எஸ்.சுரேன்,
தவிசாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை.

## தமிழ் மக்கள் நலன் சார்ந்து வெளிவரும் பத்திரிகை உதயன்

தமிழ் மக்கள் நலன் சார்ந்து வெளிவரும் உதயன் பத்திரிகையானது பல இன்னல்களுக்கு மத்தியில் தனது 33 வருட சேவையை நிறைவு செய்வது பாராட்டத்தக்கது. மனச்சாட்சிக்கு உட்பட்டுப் புதிய புதிய உண்மைத் தகவல்களைத் தருவதில் பத்திரிகைகளில் உதயன் முதலாவது இடத்தை பிடித்துள்ளான்.

தமிழ் மக்கள் நலன் சார்ந்து வெளிவரும் பத்திரிகை என்பதால் தமிழ் - முஸ்லிம் மக்கள் மனதில் நீங்காத இடத்தை பிடித்து நிற்கின்றது. குறிப்பாக எமது கிராமப்புறத்து செய்திகளை தாங்கி வருவது எமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. உதயன் பத்திரிகை மேலும் தொடர்ந்து தனது சேவையை மக்களுக்கு செய்ய முசலி பிரதேச சபையின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்

சுபிஹான்,
தவிசாளர்,
முசலிப் பிரதேச சபை.

## இழப்புக்களை கடந்தும் தலைசாயாத பத்திரிகை

ஆபத்து நிறைந்த காலகட்டத்தில் செய்திகளை மிகவும் துணிச்சலுடன் மக்களுக்கும் உலகிற்கும் தெரியப்படுத்தி பல இழப்புகளை சந்தித்தும் தலைசாயாத உதயன், இன்று 33 ஆவது வருடத்தை நிறைவு செய்யும் உதயனுக்கு வாழ்த்து தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். பாரபட்சமின்றி கருத்துத் தெரிவிக்கும் பத்திரிகைகளில் உதயன் மிக முக்கியமானது நகரங்களை மட்டும் நாடும் பத்திரிகைகள் மத்தியில் கிராமப்புறத்து செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் உதயன், சிறந்த பணியை மக்களுக்குச் செய்ய வாழ்த்துகின்றேன்.

செல்லத்தம்பி சந்திரயோகு
தவிசாளர்
மாந்தை மேற்கு பிரதேச சபை

## தமிழ் மக்களின் உரிமைக் குரலாக ஒலிக்கும் உதயன்



வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரலாக வெளிவரும் உதயன் நாளிதழ் தமது 34 ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் இன்றைய நன்நாளில் எனது மனம் நிறைந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதமடைகின்றேன்.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக சுய இலாப நோக்கின்றி தன் ஊடகப்பணியை முன்னெடுத்து வரும் உதயன் எம்மக்களுக்காக சந்தித்த துன்ப, துயரங்கள், நெருக்குதல்கள் தமிழ் பேசும் மக்கள் மனங்களில் பசுமரத்தாணி போல் நிலைத்து நிற்கின்றது.

உதயன் வரித்துக்கொண்ட மக்கள் பணியில் ஊடக தர்மம் பிறழாது தொடரும் சேவைகளை இச் சந்தர்ப்பத்தில் விதந்து பாராட்டுவதுடன் கல்முனை மாநகர முதல்வர் என்ற ரீதியில் எமது மாநகர வாழ் மக்கள் சார்பில் நல்வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

சட்டத்தரணி ஏ.எம்.றகீப்
முதல்வர்
கல்முனை மாநகரசபை




## வடக்கின் நாயகனாம் உதயன்



தலைவன் கைகளில் தவழ்ந்து. பல தலைவர்கள் கைகளில் புரண்டு, களம் பல கண்டு, வடுப் பல பெற்றும், வையகம் புகழ வளர்ச்சி கண்ட வடக்கின் நாயகனாம் உதயனுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

நடப்புச் செய்திகள், அரசியல் நகர்வுகள், கலை கலாசாரம் பெருளாதாரம் கல்வி என பல்துறை செய்திகளையும் மட்டுமல்லாது மறைக்கப்பட்ட வரலாறுகள், ஒடுக்கப்பட்ட இனத்தின் கதறல்கள் , வஞ்சிக்கப்பட்ட மக்களின் கண்ணீர்க் கதைகள், புதைக்கப்பட்ட செய்திகள் என அனைத்தையும் துணிச்சலோடு பதிவு செய்துவரும் பத்திரிகை உதயன் என்பது உலகறிந்த உண்மை.

இன்று பல விருதுகள் உனை அலங்கரித்தாலும் பல களம் கண்டு, நடுநிலை தவறாது கருத்துரைத்ததனாலோ என்னவோ 1999 ஆம் ஆண்டு சிறந்த துணிச்சல் மிகு பத்திரிகைக்கான விருதினை இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் உனக்குக் கொடுத்திருந்தது என்பது வரலாற்றுப் பெருமைமிக்கது.

இதுவே எதிர்காலத்தில் துப்பாக்கி ரவைகளுக்கும் குண்டுகளுக்கும் உனைத் துளைத்து சிந்தப்பட்ட குருதித்துளிகளின் மத்தியிலும், இழக்கப்பட்ட மனித உயிர்களின் நடுவிலும் இனிப் பத்திரிகை வெளிவருமா என்ற மக்களின் ஏக்கத்திற்கு விடையாய் மறுநாள் காலையில் நீ நாளிகை தவறாது உதயமானது பத்திரிகை உலகில் நீ பதித்த முத்திரையாகும்.

உன் துணிச்சல் மிகு பயணம் தொடர்ந்து வெற்றி பெறவும் தமிழ்கூறும் நல்லுலகில் தொடர்ந்தும் மனிதநேயமும் மனசாட்சியும் மிக்க எந்நிலையிலும் நடுநிலை தவறாது மன்னவனாய் நீ வலம்வர என் புரட்சிகர வாழ்த்துக்கள்.

அ.ஜெபநேசன்
தவிசாளர்.
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
மானிப்பாய்



## நீடூழி நீ வாழ்க

34 ஆவது ஆண்டில் காலடி வைக்கும் உதயனின் காலப் பதிவுகள் கனதியானவையும் காத்திரமானவையுமாகும். இவன் நடந்து வந்தபாதை கரடு முரடானவை எனினும் காலத்தின் கட்டாயத்தை உணர்ந்தவனாக தனது கடமைகளை ஆற்றத் தவறவில்லை .

இதனால்தான் இன்று வீறுநடைபோட்டு வெற்றிக்களிப்போடு தன் தடங்களைப் பதித்து தலைநிமிர்ந்து நிற்கின்றான். சொல்ல வேண்டிய கருத்துக்களை சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்வதன் ஊடாக ஒரு ஊடகத்தின் கடமையை உறுதியுடன் ஆற்றி வந்திருக்கின்றான். இதன் மூலம் மக்களின் மனங்கவர்ந்த ஊடகமாக மக்களின் கருத்துக்களை பிரதிபலிக்கின்ற பத்திரிகையாகவும் காலத்தின் கண்ணாடியாகவும் செயற்பட்டு வருகின்றான்.

மேலும் பல நூற்றாண்டுகள் கடந்து தனது சேவையை ஆற்ற எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்வடைகிறேன்.

க.வாமதேவன்
தவிசாளர்
சாவகச்சேரி, பிரதேச சபை

## நெஞ்சுரத்தோடு செயற்படும் உதயன் பத்திரிகை



உதயன் பத்திரிகையின் 34 வருட பூர்த்தியையிட்டு வாழ்த்துவதுடன் பெருமிதமும் கொள்கின்றேன். தேசிய பத்திரிகைகளுக்கு நிகராக வடக்கிலிருந்து தமிழ் மக்களுக்கென வெளிவரும் நாளிதழ். எமது கிராமப்புறம் சார்ந்த அதிகளவான செய்திகளை பிரசுரித்து நிற்பது உதயன் பத்திரிகை மட்டுமே.

போர்க்காலத்தில் உதயன் பத்திரிகை பொருள்சேதம் உயிர் சேதங்களுக்கு முகம் கொடுத்ததை எவரும் மறக்கமுடியாது. அந்த வகையில் தொடர்ச்சியாக உதயன் தனது சேவையை தமிழ் மக்களுக்கு செய்ய வேண்டும் என்று எமது நானாட்டான் பிரதேச சபையின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்

தி.பரஞ்சோதி,
தவிசாளர் .
நானாட்டான் பிரதேச சபை.

## உண்மையின், உரிமையின் குரலாக ஒலிப்பவன் 'உதயன்'




34ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் உதயன் பத்திரிகையின் அளப்பரிய சேவையை மனதார வாழ்த்திப் பாராட்டுகின்றேன்.

காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு நாட்டு நடப்புகளை மனத் தைரியத்துடன் வெளிக்காட்டித் தமிழ் மக்களின் மனதில் கொடி கட்டிப் பறக்கும் உண்மையின், உரிமையின் குரலாக ஒலிக்கும் 'உதயன்' பத்திரிகையின் சேவையை மன்னார் சமூகத்தின் சார்பில் பாராட்டுகின்றேன்.

பரந்துபட்ட துறைகள் சார்ந்த செய்திகளையும் சமூக விழிப்புணர்வுகளையும் தாங்கி தமிழனை தலை நிமிரச் செய்து வரும் 'உதயன்' பத்திரிகையின் சேவை மென்மேலும் வட மண்ணில் மிளிர வேண்டி வாழ்த்துகின்றேன்.

ஞா.டேவிட்சன் (ஜெறாட்),
நகர முதல்வர்,
மன்னார் நகரசபை.

## தனக்குரிய தனி இடத்தை என்றும் பெற்றிருக்கும் நாளிதழ்




அகவை முப்பத்துநான்கில் காலடிவைக்கும் 'உதயன்' பத்திரிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். யாழ். மாவட்டத்திலிருந்து வெளிவரும் நாளிதழ் என்றவகையில் உதயன் பத்திரிகை தனது பணியைச் செவ்வனே செய்து தனக்குரிய இடத்தை மக்களிடத்தே பெற்றிருக்கும் நாளிதழ் எனலாம்.

அச்சு ஊடகங்கள் மக்களுக்கு அவர்தம் அறிவை விருத்திசெய்தல், செய்திகளைப் பிழையின்றி அறிந்து கொள்ளுதல், ஓய்வுநேர வாசிப்புத்திறனை வளர்த்தல் போன்ற சீரிய பணிகளை நோக்காகக் கொண்டு உருவாக்கம்பெற்றமை இவ்விடத்தில் குறிப்பிடமுடியும்.

இலங்கைத்திருநாடு பல்லின கலாசார மற்றும் சமய விழுமியங்களைக் கொண்டதாக விளங்குவதால், மக்கள் மத்தியில் பாரபட்சமின்றி நடுநிலையாக, விருப்பு வெறுப்புக்களைக் கடந்து கடமையாற்றுவதே பொருத்தமானது. இதனையே பத்திரிகைத் தர்மம் என்று குறிப்பிடமுடியும். ஒரு பத்திரிகை காலத்தின் கண்ணாடியாக நடந்ததை நடந்தபடியே வாசகர்களுக்குத் தெரிவிக்கவேண்டும். மக்களுக்குத் தேவையான உள, உடல், சமூக ஆரோக்கியத்துக்கும், பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்காது, சமூகப் பொறுப்புடன் விளங்க வேண்டும். சமூக, சமய, விழுமியங்களை அனைவருக்கும் பிரயோசனமாக இருக்கத்தக்கவகையில் மகத்தான பணியினை 'உதயன்' பத்திரிகை செவ்வனே செய்துவருவதனை அதனுடைய முப்பத்து மூன்று ஆண்டுகால வளர்ச்சி எடுத்துக்கூறுகின்றது எனலாம். இவ்வகையில் செயற்படும் 'உதயன் பத்திரிகைக்கு' வாழ்த்துத் தெரிவிப்பதுடன், இதனை நெறிப்படுத்தும் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**நா. வேதநாயகன்,**
மாவட்டச் செயலர்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

## உண்மைத் தன்மையும் நடுநிலைமையும் கொண்ட நாளிதழ்



தாயக மண்ணிலிருந்து மக்களின் குரலாக ஓங்கி ஒலித்து ஊடகத்துறையில் பல்வேறு சவால்களின் மத்தியிலும் வீறுநடை போட்டு, நாள்தோறும் உதித்து வரும் உதயன் நாளிதழுக்கு எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். நவீன தொழில்நுட்ப சாதனங்களின் வளர்ச்சியினால் இன்று ஊடகத்துறையானது பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வருகின்ற அதேவேளை பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் சமுத்திரம் போன்ற ஆழமான தடைகளையெல்லாம் தாண்டித் தமது சேவையினை ஆற்றுவது பாராட்டுக்குரியதே. நவீன விஞ்ஞான வளர்ச்சியின் பிடியில் அகப்பட்டுள்ள இன்றை நூற்றாண்டில் இணையத்தங்களினூடாக உடனுக்குடன் செய்திப் பரிமாற்றங்கள் மிக வேகமாக இடம் பெறுவதால் பத்திரிகைகளைப் படிக்கின்ற மனோநிலை அருகி வருவதும் வேதனைக்குரியதே ஆயினும் உண்மைத் தன்மையும் நடுநிலைமையும் கொண்ட செய்திகளைச் சுமந்து வருவது பத்திரிகைகளே என்பதில் எவ்விதமான ஐயமுமில்லை.

உதயன் நாளிதழானது சவால்கள் , போட்டிகள் நிறைந்த காலத்திலிருந்து இன்றுவரை தரம் மற்றும் உண்மைத்தன்மையிலிருந்து மாறாது தனது வளர்ச்சிப்படியியை எட்டிச் சமூகத்தினை அறிவூட்டி மக்களின் மனங்களில் அழியாது நிலைபெற்றுள்ளது எனக் கூறின் அது மிகையாகாது .

தமிழ் பேசும் மக்களின் மனங்களில் நிறைந்து 34 ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் உதயன் நாளிதழின் சேவை தொடர்ந்து பயணிக்க வாழ்த்துகின்றேன்.

**திருமதி.றூபவதி கேதீஸ்வரன்,**
மாவட்டச் செயலர்,
முல்லைத்தீவு.



## தமிழ் மக்களின் வாழ்வில் நீங்கா இடம்பிடித்த 'உதயன்'



உதயன் பத்திரிகை தனது வாழ்க்கைப் பயணத்தில் 33 ஆண்டுகளை நிறைவு செய்து 34 ஆவது அகவைக்குள் உள் நுழைகின்றான் என்ற செய்தி அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலக்கியங்களைக் காலத்தின் கண்ணாடிகள் என்பர். அவ்வாறே பத்திரிகைகளும் தாம் வெளிவரும் காலப்பகுதியில் தான் சார்ந்த சமூகத்தின் அன்றாடப் பிரச்சினைகள், வரலாறு, கலை, கலாசாரம் மற்றும் பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறுபட்ட விடயங்களைப் படம்போட்டுக்காட்டும் தன்மை வாய்ந்தவை. அந்த வகையில், தமிழ் மக்கள் தமது அன்றாட வாழ்வில் அனுபவித்த பிரச்சினைகள் மற்றும் அவர்களின் அடிப்படைத் தேவைகள் எவை என்பதை இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதில் முன்னின்று செயற்பட்டவன் உதயன். இதனைத் தமிழ் பேசும் சமூகம் என்றும் மறவாது.

தொலைத் தொடர்பு வசதிகள் பெரிதும் இல்லாத காலம் அது. நாட்டில் என்ன நடந்தது. நடக்கின்றது என்பதை உதயனின் மூலமே அறிந்து கொண்ட காலம் ஒன்று இருந்தது. அன்றாடம் விழித்தெழுந்தவுடன் உதயனின் வரவு தான் தமது வாழ்வு என்று எதிர்பார்த்து இருப்பவர்கள. எம்மில் பலர் உள்ளனர். இடப்பெயர்வுகள், பொருளாதாரத் தடை மற்றும் இன்னோரன்ன தடைகளை எல்லாம் தாண்டி வெற்றிப் பயணம் செய்ததன் ஊடாகத் தமிழ் மக்களின் வாழ்வில் நீங்கா இடம்பிடித்த 'உதயன்' பத்திரிகையின் வளர்ச்சிக்கு உரம் சேர்த்த அதன் நிர்வாகத்தினர், ஆசிரியர் மற்றும் பணியாளர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூறுவதுடன், உதயனின் பயணம் நூற்றாண்டு நிலைக்க எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி.ஏ.மோகன்றாஸ்,**
மாவட்டச் செயலர். மன்னார்.

## அயராத பணி தொடர நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்



வடக்கில் வீறுநடை போடுகின்ற உதயன் பத்திரிகை தனது 34 ஆவது அகவைக்குள் புகுவதனை முன்னிட்டு வெளியிடப்படுகின்ற சிறப்புமலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேரானந்தம் கொள்கிறேன்.

உதயன் பத்திரிகையானது, பத்திரிகைத்துறை வரலாற்றில் நீண்டகால அனுபவத்திலும், ஆற்றலிலும் ஆழமான பட்டறிவினைப் பெற்றுக் கொண்டவர்களது பேனாவினால் வழிநடத்தப்படும் பட்டை தீட்டிய ஓர் இரத்தினமாகும். தனது இந்த முப்பத்துமூன்று வருடகால வளர்ச்சிப் பாதையில் அது உருவாக்கிவிட்டிருக்கும் பெருந்தொகையான படைப்பாளிகளும், எழுத்தாளர்களும், செய்தியாளர்களும் உதயனின் வெற்றியையும், சிறப்பையும் பறைசாற்றி நிற்பவர்களாக எமது சமூகத்தில் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த நாளிதழானது ஊடக தர்மத்தின் வழிநின்று சமூகப் பொறுப்புடைய பத்திரிகையாகத் திகழவும் இனிவரும் காலங்களில் மேலும் பலசிறப்பான அம்சங்களைப் புதிதாக உருவாக்கிப் பத்திரிகைத்துறையில் முன்னோடியாக மிளிர வேண்டுமென வாழ்த்தி இந்தப்பத்திரிகையின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் எனது மனம் நிறைந்த நல்லாசிகளை வழங்குகிறேன்.

**சுந்தரம் அருமைநாயகம்,**
மாவட்டச் செயலாளர், கிளிநொச்சி மாவட்டம் .

## கல்விசார் வேலைத் திட்டங்களை முன்னிலைப்படுத்துபவன் உதயன்



எமது கல்விப் புலத்தின் தேவைகள் கல்விசார் அபிவிருத்தித் திட்டங்கள், கல்விசார் வேலைத் திட்டங்களை முன்னி லைப்படுத்துவதுடன் மாணவர்களின் கல்வி அடைவு மட்டங்கள் மற்றும் விளையாட்டு அடைவு மட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவற்றைப் பிரசுரிப்பதுடன் கல்விசார் கட்டுரைகள், அறிவியல் சார் அம்சங்களைத் தாங்கிய விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கிக் கல்விப் புலத்துக்கு உதயன் ஆற்றும் பணி பாராட்டத்தக்கது. கலாசார அம்சங்களை வெளிக்கொண்டு வருவதுடன் கல்விப் புலம் சார் போட்டி நிகழ்வுகள், பாடசாலைகளின் வரலாறுகள் போன்ற விடயங்களையும் முன்னு ரிமைப் படுத்தி வெளியிடுவது சிறப்பான அம்சமாகும். கல்விசார் கட்டுரைகள், ஆக்கங்கள் என்பன மாணவர்களை ஊக்கப்படுத்துவதுடன் அவர்களின் எதிர்கால வாழ்வுக்கு உறுதுணையாகவும் பக்கபலமாகவும் அமையும். உதயனின் சேவையை நன்றியுணர்வுடன் பாராட்டுவதுடன் பணிசிறப்பாகத் தொடர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சி.சத்தியசீலன்,**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு வடக்கு
மாகாணம்.

## சமூகத்தின் விடிவுக்கு உதயனின் ஒளிக்கதிர்கள் என்றும் பக்கபலமாக இருக்கட்டும்



ஊடகத்துறை இன்றைய உலகின் சமூகப் பொருளாதார, கலாசார, அரசியல், கல்வி, தொழில்நுட்ப முன்னேற்றத்தில் பெரியளவு பங்களிப்பை வழங்குவதனை எவராலும் மறுக்கப்பட முடியாத ஒரு விடயப்பொருளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அத்தகைய துறையில் உதயன் பத்திரிகை எமது சமூகத்தில் தனக்கென ஓர் அழியாத தனியிடத்தை வாசகர் மத்தியில் பெற்றிருப்பதை யாரும் மறுக்கமுடியாத உண்மையாகும். உதயன் பத்திரிகை தனது வளர்ச்சிப் பாதையில் எதிர்நோக்கிய சவால்களை எவரும் மறந்துவிட முடியாது. இருப்பினும் அத்தகைய சவால்களை எல்லாம் வெற்றிகரமாக முறியடித்து அபரிவிதமான வளர்ச்சியைக் கண்டு இன்று தனது 34 ஆவது அகவையில் கால் பதிப்பது என்பது உதயன் பத்திரிகையில் வெளியிடப்படும் செய்திகளின் நடுநிலமை, பக்கச்சார்பின்மை, உண்மை, நம்பிக்கை, விரைவு, பலம்வாய்ந்த செய்தியாளர்கள் மற்றும் விநியோக வலையமைப்பு என்பவற்றுக்கு வாசகர்கள் வழங்கிய முழுமையான அங்கீகாரமாகும். எமது சமூகத்தின் கலை, கலாசாரம், கல்வி, தொழில்நுட்பம், அரசியல், பொருளாதாரம், பொழுதுபோக்கு, சமூக முன்னேற்றம் என்பவற்றின் முன்னேற்றத்துக்குத் தனது பல்வேறு வெளியீடுகளின் மூலம் வலுச்சேர்த்திருப்பதை எல்லோரும் அறிவர்.

அந்த வகையில் உதயனின் 34 ஆவது அகவையையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்தை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைவதுடன் எமது சமூகத்தின் விடிவுக்கு உதயனின் ஒளிக்கதிர்கள் என்றும் பக்கபலமாக இருக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தி.திரேஷ்குமார்,**
மேலதிக மாவட்டச் செயலர், வவுனியா.

## மக்களின் குரலாக ஒலிக்கும் நாளிதழ்



ஒரு பத்திரிகை நிறுவனம் நடத்துவது என்பது நெருப்பாற்றினூடாக நீந்திச் செல்வதற்கு ஒப்பான ஒரு பயணமேயாகும். கடந்த காலங்களில் யாழ். மண்ணில் வெளிவந்த தமிழ் நாளிதழ்களின் பின்னணியை நோக்கிப் பார்க்கையில் பல தமிழ் பத்திரிகைகளின் அடையாளத்தை இன்று காணமுடியாமை உள்ளது.

1985 ஆம் ஆண்டு தன் ஆரம்பப் பயணத்தினை மேற்கொண்ட உதயன் கால் நூற்றாண்டைக் கடந்து இன்றும் பல சவால்களின் மத்தியில் ஒரு நீண்ட காலச் சரித்திரப் பின்னணியை கொண்டதாக தனது 34 ஆவது வருடத்திற்குள் பிரவேசிப்பது மிகவும் பாராட்டப்பட வேண்டியதும் ஊக்குவிக்கப்பட வேண்டியதுமொன்றாகும். ஒரு செய்தி ஊடகமாக மட்டுமே செயற்படாது, மக்களின் குரலாக, ஊடக ஒழுக்க விதிகளுக்கமைவாக , ஒரு நேரிய முற்போக்கான சிந்தனையோடும் சமூகப் ப ற்றுதியுடன் மக்களிற்கு உண்மையான ஆக்கபூர்வமான கனதியான தகவல்களைத் தரவுகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

1999ஆம் ஆண்டு சிறந்த துணிச்சல்மிக்க பத்திரிகைக்கான விருதைப் பெற்று மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை தூண்டவும், அறிவை வளர்த்துக் கொள்ளவும் ஏற்ற வகையில் சகல அம்சங்களையும் துல்லியமாக உள்ளடக்கி பன்னாட்டுச் செய்திகளையும் மக்களிற்கு தெளிவாக அறியத் தருகின்ற உதயன் இன்னும் பல்லாண்டுகள் மக்கள் செய்தியாளனாக, நடுநிலையாக நற்சேவையாற்றத் தக்க வகையில் அதன் இயக்குநர் ஆசிரியர்கள் மற்றும் சகல ஊழியர்களுக்கான இறைவனின் நல்லாசிகளை வேண்டிப் பிரார்த்திப்பதோடு எனது நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அ.பத்திநாதன் ,**
பிரதம செயலர், வடக்கு மாகாணம்.



## அசைக்க முடியா நம்பிக்கையாக மக்கள் மத்தியில் உதயன்



கடந்தகால பத்திரிகைகளின் வரலாற்றில் பல பத்திரிகைகள் ஆரம்பமாகி கால வெள்ளத்தில் அள்ளுண்டு போன போதிலும் ஒரு நீண்ட காலசரித்திரப் பின்னணியையும், வரலாற்றுப் பாரம்பரியத்தையும் கொண்ட பத்திரிகையாக உதயன் பத்திரிகை இன்றும் மக்கள் மத்தியில் பெருமைபேசிக் கொண்டிருக்கிறது.

இன்னல்கள், அசௌகரியங்கள், இழப்புக்கள் பலவற்றைச் சந்தித்தாலும் காலை உதயன் உதயமாவான் ஒளி தருவான் என்ற அசைக்க முடியாதநம்பிக்கையை மக்கள் மத்தியில் ஏற்படுத்திய தனிப்பெரும் நாளிதழாக விழங்குவது இந்த நிறுவனத்தின் அழிக்க முடியாத பலமாகும்.

பல்சுவை ஆக்கங்களுடன் வெளிவருகின்ற இந்த நாழிதழுக்கு இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம், பிரான்ஸ் நாட்டின் எல்லைகளற்ற அமைப்பு, என்பன விருதுகளை வழங்கி மதிப்பளித்தமை பாராட்டுதற்குரியது.

1985ஆம் ஆண்டு தினப் பத்திரிகையாக உதயமாகி இன்று ஊடக உலகத்தில் சிறப்புப் பெற்று முப்பத்தி நான்காவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைவதுடன் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்தும் மக்களுக்கு செய்திப் பணியாற்ற இறையாசி கிடைக்க வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**த.பிருந்தாகரன்,**
பிரதேச செயலர்,
பிரதேச செயலகம், கண்டாவளை.

## மகத்தான பணி சிறக்க வாழ்த்துக்கள்

இன்று 34ஆவது ஆண்டில் கா்லடி எடுத்து வைக்கும் தமிழ்த் தேசிய நாளிதழ் உதயனை வாழ்த்துவதில் மன மகிழ்வடைகின்றேன்.

ஆரம்ப காலம் முதல் தமிழ் மக்களின் துன்ப துயரங்களில் தோள் கொடுத்து தமிழ் மக்களின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்து மக்கள் மனம்நிறைந்த தமிழ் நாளிதழான உதயன் நடுநிலமை தவறாது பத்திரிகைத் தா்மத்தைப் பேணி உடனுக்குடன் செய்திகளை வெளியிடுவதில்உதயனின் வகிபாகம் அளப்பரியது. போர்க் காலத்திலும் இன்னல்களுக்கு மத்தியில் தமிழ் மக்களுக்கு உதயன் ஆற்றிய பணியை எவரும்மறக்க முடியாது.

உதயன் பத்திரிகை தொடர்ந்தும் நடுநிலமை தவறாது தமிழ் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்று பிரார்த்தித்து அதன் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

**சி.ச.கிருஸ்ணேந்திரன்,**
பிரதேச செய்லாளர்,
பூநகரி.

## எம் தேசத்தின் உரைகல் உதயன்



உலகெங்கும் பரந்து வாழும் மக்கள் மனங்களில் நிறைந்து வாழும் உதயன் பத்திரிகையானது 33ஆவது வருடம் கடந்து 34 ஆவது அகவையில்கால் பதிப்பதையிட்டு மிகுந்த பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.


ஒவ்வொரு நாள் காலையிலும் உலகச் செய்திகளையும் பல்வேறுதகவல்களையும் மூன்று தசாப்தங்களையும் தாண்டி வெளிவரும் நிலையில் அந்தச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில்மகிழ்ச்சியடைகின்றேன். போர்க் காலத்தில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் உதயன் பத்திரிகை நடுநிலமை தவறாது செய்திகளைவெளியிட்டு வருவது எமது தேசத்தின் வரப்பிரசாதமாகும்.

எம் மக்களின் வாழ்வியல், மரபுரிமை, மாணவர்களுக்குப் பயனுள்ள செய்திகள், உலக நடப்புச் செய்திகள் என்பவற்றை எமது மக்களுக்கு வழங்கி வருவது போற்றத்தக்கது. இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகள்அனைத்திலும் உதயன் நாள்தோறும் காலையில் கைகளில் தவழ்வது சிறப்பம்சமாகும்.

உதயன் எம் மனங்களில் நிறைந்துள்ளதோடு ஒவ்வொருவரின் வீட்டிலும் மிகச் சிக்கலான அரசியல் சமூக பொருளாதார சூழ்நிலையிலும் இதுதொடர்ந்து வெளிவந்துள்ளது.

முப்பத்திநான்கு வருட அகவையில் கால் பதிக்கும் எம் தேசத்தின் உரைகல் உதயன் நாளிதழ் மேலும் பலவருடங்கள் கடந்து 100 ஆண்டு எம் மக்கள் மனங்களில் நிறைந்து கைகளில் தவழ வேண்டுமென்பதே எனது எதிர்பார்ப்பு. அதற்கு எனது மனம்நிறைவான நல் வாழ்த்துக்களை நல்கி நிற்கின்றேன்.

**திருமதி பரமோதயன் ஜெயராணி,**
பிரதே்ச செயலாளர்,
பச்சிலைப்பள்ளி.



## பத்திரிகைகளில் மிகவும் தனித்துவமானது!



1985ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வெளிவருகின்ற உதயன் பத்திரிகை தற்போது 34 ஆவது வயதில் காலடி எடுத்துவைப்பதையிட்டு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன் . தொடந்தும் தமிழ் மக்களுக்குச் செய்திப் பணியாற்ற எல்லாம்வல்ல இறைவன் அருள் புரியப் பிரார்த்திப்பதுடன் எமது ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு பத்திரிகையை நடத்துவது எவ்வளவு கடினம் என்பதனை இந்தியாவின் தினத்தந்தி பத்திரிகையின் நிறுவுநரும் ஆசிரியருமான சி.ப.ஆதித்தனன் "ஒரு பத்திரிகையை நடத்துவது நெருப்பாற்றை நீந்திக் கடப்பதையும், யானையைக் கட்டித் தீனிபோடுவதனையும் போன்றது"எனக்குறிப்பிடுகின்றார். அந்தவகையில் உதயன் பத்திரிகையும் இதற்கு விதிவிலக்கல்ல. பெரும் சவால்களுக்கு முகம் கொடுத்துயாழ்ப்பாணத்தில் வெளிவருகின்ற பத்திரிகைகளில் மிகவும் தனித்துவமானதும் பிரசித்திபெற்ற பத்திரிகையாகவும் விளங்குகின்றது. 1959ஆம் ஆண்டு ஈழநாடு பத்திரிகை வெளிவந்தபோது வாழ்த்துத் தெரிவித்த யோகர் சுவாமிகளின் வார்த்தையான"ஏசுவார்கள், எரிப்பார்கள்,உண்மையை எழுதுங்கள். உண்மையாக எழுதுங்கள்"என்ற வார்த்தைகள் உதயன் பத்திரிகைக்குப் பொருத்தமான வார்த்தைகளாகும். எனவே உதயன் பத்திரிகை எவ்வித தடங்கலும் இன்றித் தொடர்ந்து வெளிவர எல்லாம்வல்ல இறைவன் அருள் புரியவேண்டுமென்றுஇறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**க.கனகேஸ்வரன்,**
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம், வடமராட்சி
கிழக்கு,மருதங்கேணி.

## சரியான பாதையில் தொடர்ந்தும் பயணிக்க வாழ்த்துகின்றேன்



பத்திரிகைகள் பல வர்ணமிட்டு வகை வகையாய் வெளிவந்தாலும் பத்திரிகைத் தர்மத்தைப் பேணி நடக்கும் பத்திரிகை நிறுவனங்கள்அரிதாகவே காணப்படுகின்றன. அவ்வாறு பத்திரிகைத் தர்மத்தைப் பேணும் பத்திரிகைகளில் ஒன்றாக உதயன் பத்திரிகையும் உள்ளடங்கும்என்பதில் எவ்வித ஐயமுமில்லை. பல இன்னல்களின் மத்தியிலும் குறிப்பாக வடபுல செய்திகளையும் ஏனைய செய்திகளையும் மெய்யறியப்பிரசுரித்து வருகின்றது.

உதயன் பொது நலத்துடன் இனமத பேதமின்றி ஒரு சமுதாயத்தை ஒரு நாட்டை வழி நடத்தும் ஆசிரியனாகவும் ஏணியாகவும் திகழ்கின்றது.அரசியல், கல்வி, சமூகநலன், ஆன்மிகம், அறிவியல் எனப் பல்வேறுபட்ட முகங்களுடன் பொதுமக்களின் அபிவிருத்தி நோக்குக் கருதி தரமானபத்திரிகையாக நம்மை வலம் வந்துகொண்டிருக்கின்றது.

34 ஆவது அகவையில் கால் தடம் பதிக்கும் உதயன் பத்திரிகை ஊடகப் பொறுப்புடனும் சமூகப் பொறுப்புடனும் செய்திகளை வெளியிட்டுச்சரியான பாதையில் தொடர்ந்தும் பயணிக்க மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**கா. உதயராஜா,**
பிரதேச செயலாளர், வவுனியா.



## தமிழ் மக்களின் குரல்

27.11.2018 ஆம் திகதி 34 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் உதயன் நாளிதழுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலங்களில் எமது தமிழ் மக்கள் என்னென்ன இன்னல்கள், துன்பங்கள், தடைகள் போன்றவற்றிக்கு முகம் கொடுத்து வருகிறார்களோ அதைவிட அதிகமான இன்னல்கள், துன்பங்கள், தடைகளுக்கு முகம் கொடுத்து அவற்றை எல்லாம் தாண்டி தமிழ் மக்களின் குரலாக தன்னைக் காட்டிக் கொண்டு உதயன் வீறுநடை போடுகிறான் என்றால் அது மிகையாகாது. உதயன் உனக்கு இனிப் போட்டியும் இல்லை, வீழ்ச்சியும் இல்லை. நீ வாழ்க வளர்க.......

**இ.தயாபரன்**, செயலாளர்,
நகரசபை, வவுனியா.

## வீறு நடைபோட வாழ்த்துகின்றேன்



34ஆம் ஆண்டில் கால்டி எடுத்து வைக் கும் உதயன் பத்திரிகைக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு இன்னும் பல நூறு ஆண்டுகள் இன்று போல் என்றும் வீறுநடை போட வேண்டும். தமிழ் மக்களின் உண்மை நிலையை உலகம் முழுவதும் பரப்பும் எம் உதயன் சிறந்து விளங்க எனது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**தேசமான்ய சு.குமாரசாமி,**
உபதலைவர்,
நகர சபை, வவுனியா.

## தன்னிலை தவறாத உதயன்



34ஆவது அகவைக்குள் தனது சேவையைத் தொடரும் உதயனுக்கு வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்வதில் உள மகிழ்வடைகின்றேன். 33 ஆண்டுகள் தனது தனித்துவத்தோடு மக்கள் மனங்களில் நின்று நிலைக்கும் சிறப்பை உதயன் பெறுகின்றது என்றால் அதன் காரணம், நாலிரண்டு திசை தகவல்களையும் நயம்படத் தாங்கி வருவதாலேயே எனலாம். நாளிதழ் வாசகர்கள் குறைவடைந்து இணையங்களில் ஊடகத் தகவல் பரிமாற்றித்தில் திசை திரும்பியுள்ள சமகாலத்தில் தனது அவசியத்தை தினமும் ஒவ்வொரு காலைப் பொழுதிலும் உணர்த்திடும் உதயன் தொடர்ந்து தன்நிலை மாறாது மக்கள் மனங்களில் நின்று மாறாத வண்ணம் மேலும் சிறக்க வாழ்த்திக் கொள்வதோடு உதயன் குழுமத்தினர்க்கும் வாசகர்களுக்கும் எனது வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்கின்றேன்.

**லக்சனா நாகராஜன்**
நகர சபை உறுப்பினர்,
வவுனியா.

## உள்ளபடி உள்ளதை சொல்கின்றான்



தமிழ் மக்களின் ஒருமித்த குரல் என்று உதயனை அழைக்கலாம். அத்தனை தமிழர்களின் உணர்வுகளையும் உடன் பிரதி பலிக்கும். மக்களின் அடிப்படை பிரச்சினையாக இருந்தாலும் அரசியல் பிரச்சினையாக இருந்தாலும் உரிமைசார் பிரச்சினையாக இருந்தாலும் உள்ளதை உள்ளபடி உலகறிய செய்யும் உதயன் நாளிதழானது எத்தனை இடர் பாடுகள் வந்தாலும் தான் எடுத்துக் கொண்ட பணியை செவ்வனே செய்து மங்காப் புகழுடன் வடமாகாணம் மட்டும் இன்றி ஒட்டு மொத்த தமிழர் தாயகப் பகுதியிலும் ஒருங்கிணைந்த தமிழர் குரலாய் வலம் வர வேண்டும் என்று ஆசிக்கின்றேன்.

**ஜோசப் தர்மன்**
மன்னார் நகர சபை உறுப்பினர்





## மக்கள் மனங்கவர் ஊடகமாக தொடர்ந்தும் பயணிக்கட்டும்



அகவை 34 இல் கால்பதிக்கும் இலங்கைத் தமிழ் நாளிதழான "உதயன்" ஊடகத்தை வாழ்த்துவதில் பெருமிதமடைகிறேன். கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாகப் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து தமிழ்மொழிமூல வாசகர்களுக்கான ஊடக சேவையை வழங்கி பிரதேசத்தினதும் நாட்டினதும் மேம்பாட்டுக்கு அரும்பணியாற்றியிருப்பது பாராட்டுக்குரியதே. தற்கால நிகழ்வுகள் தொடர்பான தகவல்களை வேகமாகவும் வினைத்திறனாகவும் பெற்றுக்கொள்வதற்கு உதயனின் பங்களிப்பு மிக உயர்வாகவுள்ளது. வடபுல கல்வித்துறையின் செய்திகளைப் பிரசுரிப்பதிலும் மாணவர்களுக்குத் தேவையான கட்டுரைகள், கவிதைகள், பரீட்சை வினாத்தாள்கள் என்பவற்றைப் பிரசுரிப்பதிலும் அனுசரணை வழங்குவதிலும் விளையாட்டுத் துறைகளிலும் "உதயன்" ஆற்றிய சேவைகளை நன்றியோடு இத்தருணத்தில் சுட்டிக்காட்டுவது மிகப்பொருத்தமானதாகும். எதிர்காலத்திலும் மன்னார் மாவட்டமும் வடபுலமும் கல்வியில் வளர்ச்சியுற்று ஏனைய மாகாணங்களுக்கு ஈடிணையாக நிமிர்ந்து கொள்ள எடுக்கும் எல்லா எத்தனங்களிலும் "உதயன்" உறுதுணையாக நின்று உயரிய விருதுகள் பெற்று மக்கள் மனங்கவர் ஊடகமாக பல யுகங்கள் தொடர்ந்தும் வலம்வர மன்னார் கல்வி வலயத்தின் ஆசிகளை எடுத்தியம்பி அமைகின்றேன். மகிழ்வுடன்.

**க.ஜெ.பிறட்லி,**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
மன்னார் கல்வி வலயம்.

## வேரோடி விழுதெறியும் விருட்சம் நீ



பத்திரிகைத் துறை வரலாற்றிலே தனக்கென ஒரு தனியிடம் பதித்து, பன்னெடுங்கால சேவைதனை செம்மையாய் ஆற்றி, முப்பத்து மூன்று ஆண்டுகளை முழுமையாக்கி முப்பத்து நான்காவது ஆண்டிலே காலடி எடுத்து வைக்கும் உதயனுக்கு உவப்பான வாழ்த்துக்களை உரைப்பதில் பெருமைகொள் கின்றேன்.
காலநெடுவோட்டத்திலே அள்ளுண்டு வந்த தடைகளையெல்லாம் தகர்த்து சவால்களைச் சாதகமாக்கி, இழப்புக்களையும் மேவி,ஈழத்துச் செய்திகளை உலகறியச் செய்வதில் உதயன் ஆற்றிய பங்கு அளப்பரியது. இன்று ஏராளமான பத்திரிகைகள் முளைவிட்டிருக்கும் காலச் சூழலிலே தன் அழியாப் புகழையும் பெயரையும் என்றும் ஆழப் பதித்திருக்கும் தனித்துவ நாளிதழாக உதயன் மிளிர்கின்றான் என்றால் அது மிகையாகாது. செய்திகளை மட்டுமன்றி பல்சுவை விடயங்களையும் தாராளமாய்ப் பகிர்ந்து, என் போன்ற இளம் படைப்பாளிகளையும் இவ் உலகறியச் செய்து வரும் உதயனின் பணி சிறக்க என் இனிய வாழ்த்துக்கள். பலம் மிக்கதொரு வாசகர் வட்டத்தைக் கொண்டு, தலை நிமிர்ந்து நிற்கும் உதயன் தன் உயர்ந்த இலக்கு நோக்கிப் பயணிக்கவும், உலகத் தரம் வாய்ந்த நாளிதழாய் மிளிரவும், இன்னும் நூறாண்டு காலம் தன் பணி தொடரவும் மனமார வாழ்த்தி நிற்கின்றேன்.

**மல்லாவிக் கஜன்,**
முகாமைத்துவ உதவியாளர்,
வலயக் கல்வி அலுவலகம், துணுக்காய்.

## ஆரம்ப காலம் தொடக்கம், இன்று வரையில் பத்திரிகை தர்மத்தைப் பேணுபவன்



உதயன் - சஞ்சீவி குழுமம் தனது 34 ஆவது ஆண்டினை நோக்கி வீறுநடை போடுவதனையிட்டு பெருமகிழ்வு கொள்வதுடன், கடமையுணர்வுகளுக்கு அப்பால் அர்ப்பணிப்புடன் பங்களிப்புச் செய்த அனைவருக்கும் வாழ்த்துக்களினை தனிப்பட்ட ரீதியிலும், அமைப்பின் சார்பிலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.
ஆரம்ப காலம் தொடக்கம், இன்று வரையில் பத்திரிகை தர்மம் என்பதுடன் சமூகத்தின் நிலைக்கண்ணாடியாக போராட்ட காலத்திலும் போருக்குப் பின்பதான காலத்திலும் அஞ்சாது, நடுவுநிலைமையுடன் தொடர்ச்சியாக செயற்பட்டு வருவது என்பது இலகுவான விடயமன்று. சிறு பராயம் முதல் சட்ட மாணவராகிப் பின் சட்டம் சார் மனித உரிமைகள், சமூக நீதி தொடர்பான தொழில்களில் செயற்பட்டு வருகின்ற எமது வாழ்வியலில் சங்கமமான அச்சு ஊடகங்களில் உதயன் - சஞ்சீவி அதிகம் பங்களிப்பினை பல வேறு வழிகளில் செவ்வனே செய்திருக்கின்றது. காகிதாதிகள் தட்டுப்பாடான காலமது. உள்ளூரில் உருவாக்கப்பட்ட காகிதாதிகளில், பரீட்சைக்கு எடுத்துச் செல்லும் மட்டைகளில் வெளிவந்து வாசித்த பத்திரிகை எம் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையின் சிறந்த அடையாளம். சட்டம் சார் செயற்பாட்டாளர்கள், மற்றும் புலமையாளர்கள் 'பொருத்தப்பாடானதும், ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான, வலிதான' சான்றுகளினை 'மிகவும் சிறந்த சான்றாகக்' கொள்வர்.அந்த வகையில், தமிழ் மக்களின் பல்வேறு காலகட்டங்களில் வெளியாகிய பத்திரிகை என்கின்ற வகையில் மக்களுடன் மக்களாக இணைந்து பாதிப்புக்களுடன் மீள் எழுந்த வகையில் உதயன் - சஞ்சீவிக் குழுமமும் பாதிக்கப்பட்ட மக்களின் அவலங்களுக்கான, அவை சார்பான விடயப்பரப்புக்களுடன் கூடிய ஒரு சிறந்த சான்றே.
முற்கூட்டிய நூற்றாண்டு விழா நல்வாழ்த்துக்களுடன்,

**ஜெகநாதன் தற்பரன்,**
சர்வதேச சட்டத்தரணிகள் சங்க பிரதிநிதி.

## தடைகள் வந்தபோதிலும் துவளாது மிளிர்ந்தவன்

அதிகாலையில் உதிக்கும் சூரியன் போல் தினமும் ஒவ்வொரு இல்லங்களிலும் அதிகாலையில் புத்தம்புதுமலர் போல் உதயமாகும் உதயன்நாளிதழ் தனது34ஆவது ஆண்டில் காலடி எடுத்துவைக்கும் நேரத்தில் அவனுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். அரசியல், கலை, கலாசாரம், விளையாட்டு உட்பட அனைத்துத் துறை சார்ந்த ஊர்ச்செய்தி தொடக்கம் உலகச் செய்தி வரையும் செய்திகளை வழங்குவதில் உதயன் உத்தமனாய் உலாவருகின்றான். அந்தவகையில் தடைகள் வந்தபோது துவண்டுவிடாமல் தனித்துவத்துடன் நிமிர்ந்து தன்னிகரற்று மிளிர்ந்து இன்றும் எம் மண்ணில் நிலைத்து நிற்கும் உதயன் பத்திரிகை பலஆண்டுகள் சீரும் சிறப்புடனும் வளர்ந்து எமது பிரதேச செய்திகளையும் அள்ளிவரவேண்டும் என்று அவனை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**ஈ.தயாரூபன்,**
பிரதேச செயலாளர்,பிரதேசசெயலகம், கரவெட்டி.

## உதயனின் பணி தொடரட்டும்

தமிழ் மக்களின் அதுவும் வடபுல மக்களின் இதயத்துடிப்பாகச் செயற்படும் தினத்தாள் உதயன் என்பதில் ஐயமேதுமில்லை. நாட்டின் அன்றாடச் செயற்பாடுகள், நிலைப்பாடுகளை உடனுக்குடன் அறியத் தருவதோடு கல்வி, தமிழ்க் கலை, கலாசாரம், அறிவியல் செய்திகளையும் பிரசுரித்து அதிகாலையில் எழும் ஆதவன் போல சமூகத்துக்கு ஒளிகாட்டும் இன்னொரு சூரியனாகச் செயற்படும் உதயன் நாளிதழ் தனது 33 வருடங்களைக் கடந்து பல சோதனைகளைச் சந்திக்கும் வீறு நடைபோட்டுச் சாதனைகள் பலவற்றையும் கண்டு வருகிறது. பல்வேறு-தடைகளைத் தாண்டி தன்னை அழிவில் இருந்தும் சுதாகரித்துச் செயற்கரிய செயலைச் செய்து வருகின்றது என்றால் அதற்குரிய வாசகர் வட்டம் மிகப் பெரிது எனலாம்.
33 வருடங்களை அல்ல இன்னும் பல வருடங்கள் அகவை கண்டு மக்கள் மனங்களை வென்று தன் செயற்பாட் டில் தளராது உழைக்க உதயனின் வாசகர் என்ற வகையில் வாழ்த்துக்கள்ளத் தெரிவித்து அமைகின்றேன்.

**பண்டிதர் வீ.பிரதீபன்.**
பிரதேச கலாசார உத்தியோகத்தர். வவுனியா பிரதேசசெயலகம்.

## உதயசூரியன் உதிக்க மறுக்கலாம். ஆனால் உதயன் பத்திரிகை வரத் தவறுவதில்லை



வடமாகாணத்தின் மூலைமுடுக்கெங்கும் நடைபெறும் செய்திகளைச் சுடச்சுட வாசகர்களுக்கு நித்திரையிலிருந்து எழும்பி காலை பணிக்குச் செல்வதற்கு முன் சிறுவர் தொடக்கம் முதியோர் வரை கைகளில் தவழும். தித்திக்கும் அரசியல், கல்வி, சினிமா, உலகச் செய்திகள், விளம்பரங்கள் எனப் பல தரப்பட்ட விடயங்களை ஒரே பார்வையில் பார்க்கலாம். உதயசூரியன் உதிக்க மறுக்கலாம். ஆனால் உதயன் பத்திரிகை வரத் தவறுவதில்லை.
உதயன் பக்கச்சார்பின்றிக் கருத்துரைகளை வழங்கி மக்கள் மனங்களில் இடம்பிடித்ததுடன் தமிழர் வாழ் தேசமெங்கும் காட்டுத்தீ போல் பரப்பிவரும் அரிய பத்திரிகையானது நீடித்து தொடர்ந்து வெளிவர வேண்டும்.
முற்பக்கத்தில் அவசிய செய்திகளையும் ஏனைய பக்கத்தில் ஏனைய செய்திகளையும் காவி வரும். அதுமட்டுமன்றி படங்கள், கட்டுரைகள், துணுக்குகள் என மக்கள் மனங்களில் தீராத இடம்பிடித்த பத்திரிகை சூரியப் பிரகாசமாய் என்றென்றும் ஒளி வீசி அறிவுப் பசி தீர்க்கும் அரிய கட்டுரைகளைச் சுமந்து வருகின்றது. இதனால் இலங்கை விடயங்கள், உலக விடயங்கள் ஏனைய பத்திரிகையில் இடம்பிடிக்க முன்னர் முதன்மையாகச் செய்திகளைக் காவி வருகின்றது. வடபகுதி விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் பொருட்டு படங்களுடன் பாராட்டுச் செய்திகள் வெளிவருவது வீரர்களையும் சமூகத்தையும் கவரும் செய்திகளாகும்.
தொடர்ந்து இதுபோன்ற மகத்தான சேவையை மக்கள் பார்வைக்கு எவ்விதமான துயரங்கள், சிக்கல்கள் ஏற்பட்டாலும் உதயன் பத்திரிகை தொடர்ந்து பிரசுரிக்க வாழ்த்துகின்றேன்.

**எம்.ரி.சின்னையா,**
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்.



## அனைவரதும் பாராட்டை பெற்றது உதயன்



யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து வெளிவரும் முதன்மையான தமிழ்ப் பத்திரிகைகளில் உதயன் பத்திரிகையும் ஒன்று. கடந்த 33வருடங்களாகப் பல சோதனைகளையும் கடந்து தமிழ் மக்களின் கரங்களில் தவழ்கிறது. இன்று தனது 34 ஆவது ஆண்டில் காலடி எடுத்துவைப்பதையிட்டுப் பெருமகிழ்வடைகின்றேன். இன்று கணினி வலையமைப்பு ஊடாகப் பலகோடி மக்களைத் தனது வாசகர்களாகக்கொண்டுள்ளமை யாவரும் அறிந்ததே.
உதயன் பத்திரிகையில் நாளாந்த உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகள் மட்டுமன்றிப் பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கங்கள்,விளையாட்டுச் செய்திகள், அரசியல் கட்டுரைகள் சமய மற்றும் ஆன்மீகக் கட்டுரைகள், கருத்துக்கள், சிறுகதைகள், மருத்துவ ஆக்கங்கள்மற்றும் வாசகர் திருமுகங்கள் போன்ற பல விடயங்களும் இடம்பெறுகின்றமை முக்கிய அம்சம். கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளின்போது பத்திரிகை அச்சிடும் தாள்களுக்குத் தட்டுப்பாடு நிலவியபோதும்தொடர்ந்தும் வெளிவந்து மக்களுக்கான தனது செய்திகளை வழங்கி அனைவரதும் பாராட்டைப் பெற்றது சிறப்பம்சம். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பலகோடி வாசகர்ளைத் தன்னகத்தே கொண்ட உதயன் பத்திரிகை தனது 34ஆவது அகவைக்குள் புகும்இந்தநாளில் வெளியிடப்படும் உதயன் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டுப் பெருமகிழ்வடைகின்றேன்.

**உ.யசோதா,**
பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.

## எங்களோடு பயணிக்கிறான்

ஈழத்தில் பெரும்புகழ் கொண்ட ஒரு நாளிதழ் முப்பத்துமூன்று ஆண்டுகள் கடந்து இன்று முப்பத்துநான்காம் ஆண்டிலே கால்பதிக்கும்இந்தவேளை மனமெல்லாம் மகிழ்ச்சியில் துள்ளுகிறது. ஈழத்தமிழர் தம் வாழ்விலே ஓர் அங்கமாகப் பின்னிப் பிணைந்த ஒரு நாளிதழ்இருக்கிறது என்றால் அது 'உதயனே' அன்றிவேறில்லை. நாம் கடந்து வந்த பாதையில் தானும் நடந்து நாம் அனுபவித்த இன்னல்களையெல்லாம் தானும் அனுபவித்து எம்மோடு கூடப் பயணிக்கின்றான் உதயன்.
போர், அவலம், அழிவு, அச்சுறுத்தல் எல்லாம் உதயனின் வரலாற்றிலே பதிந்துபோயிருக்கிறது. ஆனாலும் கொண்ட கொள்கையில் உறுதியாய்.எம் இனத்தின் விடுதலையே மூச்சாய் இயங்கி வரும் உதயன் நீடு புகழ் கொண்டு எம் இனத்தை உய்விக்க வாழ்த்துகின்றேன்.

"ஒவ்வொரு விடியலும்
எமக்கு
உதயனின் வரவினூடே
விடிகிறது"

**த.முகுந்தன்,**
பிரதேச செயலாளர்,
கரைச்சி,
கிளிநொச்சி.

## உதயன் தனது இலக்கில் எவ்வித தளம்பலுமின்றிப் பயணிக்கிறது



உதயன் நாளிதழ் தனது 34 ஆவது அகவையில் காலடி எடுத்து வைப்பதை அனைத்து வாசகர்களும் அகமகிழ்வுடன் வரவேற்கின்றனர். காலத்தின் தேவையினை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட உதயன் தனது இலக்கில் எவ்வித தளம்பலு மின்றி மிடுக்குடன் இன்றும் வாசகர்களை மகிழ்விக்கிறான். கடந்த காலத்தில் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும் மக் களுக்குச் செய்தியை உரிய காலத்தில் கிடைக்கச் செய்வதில் உதயனின் அர்ப்பணிப்பு போற்றுதற்குரியது. மக்கள் இடம் பெயர்ந்து உலகம் முழுவதும் பரந்து வாழும் நிலையில் அவர்களது நன்மை,தீமை களை வெளியிடுவதன் மூலம் உதயன் உறவுகளை இணைக்கும் பாலமாகத் திகழ்கின்றான். கல்வி, பொருளாதாரம், இலக்கியம், அரசியல், ஆன்மீகம் போன்ற எல்லாத்துறைகளிலும் தனது பார்வையை உதயன் செலுத்துகின்றான். அத்துடன் சிறுவர், மகளிர், முதியோர், இளைஞர் போன்ற எல்லா அணியினரையும் உற் சாகப்படுத்தும் தனித்துவக் கருத்துக்களத்தினை உதயன் தாங்கி வருகின்றான். 34ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் உதயன் மேலும் பல்லாண்டுகள் வீறுநடை போட வாழ்த்துகின்றேன்.

**ப.விக்னேஸ்வரன்,**
தலைவர்,
காரைநகர் அபிவிருத்திச் சபை.

## வடக்கின் முன்னணி நாளிதழ்



உதயன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டநாளிலிருந்து இன்று வரை இலங்கையில் நடைபெறும் பெரும்பாலான முக்கிய செய்திகளை வெளியிட்டுவந்ததுடன் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துன்பங்களை உலகிற்கு வெளிச்ச மிட்டுக் காட்டிய பத்திரிகைகளில் வடக்கின் முன்னணி நாளிதழாக இன்றுவரை இருந்துவருகிறது.
பலநெருக்கடிகள், அச்சுறுத்தல்களுக்கெல்லாம் சற்றும் சளைக்காதுவிலைபோகாதஉறுதியுடன் உதயன் 33 ஆண்டுகள், கடந்து வீறுநடைபோடுகிறான். போர்க்காலத்தில் பலஉயிர்களை விலையாகக் கொடுத்தவன் தன்னைநொறுக்கியவர்களைப் பற்றித்துணிச்ச லோடு செய்திகளைவெளியிட்டுஉண்மைகளைவெளிக்கொண்டுவந்தவன். விடுதலைநோக்கியபாதையில் பயணித்தமக்களைதிசைதிரும்பவிடாதுஅனை வரையும் ஒருநேர்கோட்டில் பயணிக்கவைத்தபெருமைஉதயனையே சாரும். எமதுகலைகளின் வளர்ச்சிக்கும் தமிழ் இலக்கியமேம்பாட்டுக்கும் தமிழ்க்கலா சாரம் காக்கப்படுவதற்கும் உதயன் மிகப்பெரும் பங்களிப்புச் செய்கிறான் என் றால் மிகையாகாது. இத்தகையபெருமைகொண்டஉதயன் தொடர்ந்துநடு நிலை தவறாதுஉண்மைகளைஉலகிற்குஎடுத்துச்சொல்லித் தமிழ் மக்களின் விடுதலைப்பயணத்தில் தனதுகடைமையை நேர்த்தியாகச் செய்வதற்கு இறை வன் அருள்புரியவேண்டும். உன்னதசேவையால் சாதனைகள் படைத்து மக்கள் மனதில் இடம்பிடித்துப் பல நூற்றாண்டுகள் கடந்தும் உன் பணியில் சிகரம் தொடஅன்பான வாழ்த்துக்கள்

**த. நிறஞ்சன்.**
செயலாளர்,
கல்விக்கான கரங்கள் அமைப்பு, மல்லாவி.

## உண்மை, நேர்மை, பயமின்மை என்ற கொள்கையுடன் வலம் வரும் உதயனே

ஈழப்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் தமிழ் மண் செம்மண் ணில் இருக்க தமிழ்த் தாயின் வயிற்றில் வந்துதித்தாய். அந்த நேர காலம் தான் உன் குருதியில் இந்தக் கொள்கை கலந்திருக்கின்றது. மார்க்கண்டேயருக்கு ஒரு தடவை கண்டம் உனக்கோ பிறந்தநாள் தொட்டுக் கண்டம் எல்லாவற்றை யும் வென்று உதித்தவனே உதயன்.
முற்காலத்தில் வெற்றி பெற்ற மன்னர்கள் தங்கள் ஆயுதமாக அம்பு வில்லை பாவித்தார்கள். அந்த ஆயுதத்தை உனதாக்கிக் கொண்டதாலே வெற்றியையும் உனதாக்கிக் கொண்டாய்.
நாம் ஒரு செய்தியை நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றால் அனைவருக்கும் செய்தி கிடைக்க சில வாரங்கள் செல்லும். உன் செய்தி சென் றடையச் சில மணிநேரம் போதும். 34 வருங்கள் அல்ல 340 வருடங்கள் சென்றாலும் உன் சேவை ஓயாது.
உன் சேவை நீடூழி வாழ்க என வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**க.சுப்பிரமணியம்,**
தலைவர்,
கிராம அபிவிருத்திச் சங்கம், ஆனைக்கோட்டை.

## உதயனே உனது 34 ஆவது ஆண்டிலும் தொடர்ந்து காட்டிடு நடுநிலையை

விருப்பு வெறுப்பற்று உலக மக்கள் அனைவருக்கும்
இருள் நீக்கி ஒளி பரப்பும் ஆதவனின் பெயர் கொண்ட உதயனே
சமன் செய்து சீர் தூக்கும் கோல் போன்ற உன் பிரசுரங்கள்
உன் 34 ஆவது ஆண்டிலும் உலகெங்கும் வீறு நடைபோடுவதுடன்
காலைச் சூரியன் உதயத்திற்கு முன் எமது கைகளில் தவழ்ந்து
நீ கூறும் அரசியல், ஆண்மீகம், விளையாட்டு, சுகாதாரம் அறிவித்தல்
போன்ற அறிவூட்டல் செய்திகளை சிறப்புடன் வெளியிட்டு மென்மேலும்
உன் பயணம் பல்லாண்டு காலம் தொடர வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

**சி.சிவபரன்,**
தலைவர்,
வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்.

## தன்னம்பிக்கையுடன் பயணிக்கும் நாளிதழ்



வட மாகாணத்தை பொறுத்தவரை நிலைத்து நிற்கக் கூடிய தனிப் பெரும் ஊடகமாக வியாபித்து விருட்சமாய் வளர்ந்திருக்கும் உதயன் பத்திரிகையானது 33 வருட தனது சேவையில் என்றும் தனித்துவத்துடனும் தன்னம்பிக்கையுடனும் பய ணித்துக் கொண்டு இருக்கின்றது என்று கூறினால் அது மிகையாகாது
தனிப் பெரும் சமூகத்தின் தனிப் பெரும் குரலாய் போர்கள் கடந்தும் பல சன்னங்களைச் சுமந்தும் ஓயாமல் ஒலித்துக் கொண்டிருக் கும் ஒட்டு மொத்த தழிழருக்கான தனிக் குரலான உதயன் நாளி தழை உளமார வாழ்த்தி உம் பணி சிறக்க தரணி எங்கும் ஒலிக்க ஒத்தோட நாம் இருப்போம் என்று உறுதிகூறுகின்றோம்.

**ஜோசப் நயன்,**
தேசிய பிரதிநிதி,
மன்னார் மாவட்ட தேசிய
இளைஞர் சேவை மன்றம்.

## குன்றா ஒளியுடன் வீறுநடை போடும் உதயனே



34 ஆவது அகவை காணும் உத யன் என்றும் குன்றா ஒளியுடன் வீறு நடை போட வாழ்த்துகின்றோம்.
கடந்துவந்த பாதையில் கண்ட இடர்களை அனுபவமாக ஏற்று என்றும் உதயன் உண்மை, தர்மம், நீதிவழி நின்று எம் சமூகமும் எம் இனமும் தலைநிமிர்ந்து வாழ கடந்த காலங்கள் போன்று எதிர்வரும் காலங்களிலும் உறுதியோடு உழைக்க எம் விவசாயச் சமூகம் சார்ந்து மனமார வாழ்த்துகின்றோம்.
வாழ்க உதயன் வளர்க தமிழ்

**மு.சிவமோகன்,**
செயலாளர்,
இரணைமடுக் குளக் கமக்கார அமைப்புக்களின்
சம்மேளனம், கிளிநொச்சி.





## துணிச்சலுடன் வெளிவரும் பத்திரிகை



கொடிய போர்ச் சூழலுக்கு மத்தியில் பல்வேறுபட்ட உயிர், உடமை இழப் புக்களை, சந்தித்த நிலையில் துணிச்சலுடன் வெளிவந்து கொண்டிருக்கும் உத யன் பத்திரிகை 33ஆவது அகவையை நிறைவு செய்து 34ஆவது ஆண்டில் கால் பதிப்பதையிட்டு தொழிலாளர் வர்க்கத்தின் சார்பில் வாழ்த்துத் தெரி விப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.
தலைநகர் கொழும்புக்கு வெளியே ஒரு பத்திரி கையைத் தொடர்ச்சியாக வெளிக்கொணர்வது கடினமான பணியாகும். இதற்கும் அப்பால், வடக்கு- கிழக்கு வாழ் தமிழ் மக்களின் நியாயபூர் வமான உரிமைப் போராட்டத்துக்கு உதயன் பத்திரிகைக் காத்திரமான பங்களிப்பை நல்கியமை வரலாற்றுப் பதிவாகும்.
கடந்த கால நூற்றாண்டு காலமாக எமது தொழிற்சங்கத்துக்கு உரமூட் டிய இந்த ஊடக நிறுவனம் மேலும் பல வளர்ச்சிகளைக் காண இறை யாசியுடன் வாழ்த்துரைக்கின்றேன்.

**எஸ்.லோகநாதன்,**
தலைவர்,
அகில இங்கை அரச பொது ஊழியர் சங்கம்.



எமது மண்ணில் மக் களின் குரலாகக் கம்பீ ரமாக ஒலிக்கும் உத யன் இன்னும் இன் னும் எமது நாடு முழு வதும் தனது கம்பீரக் குரலை ஒலித்தோங்க இந்த 34ஆவது அக வையில் மனமார வாழ்த்துகின்றோம்.

தலைவர்,
வவுனியா சிறு
வியாபாரிகள் சங்கம்.

## தமிழர்களின் உரிமைக்காக குரல்கொடுக்கும் பத்திரிகை



தாயக மண்ணில் இருந்து மக்களின் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் உத யன் பத்திரிகையானது பல்வேறுபட்ட ஆழமான தடைகளை எல்லாம் கடந்து இன்று தனது 34 ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் தருணத்தில் வாழ்த்துச் சொல்வதில் பெருமிதம் அடைகின்றேன்.
ஆரம்பித்த நாள் தொடக்கம் இன்று வரை தனக்கென ஒரு தனித்துவமான நடையோடு சிறந்த செய்திகளை வெளியிட்டு தமிழ் மக்களின் உரிமைக்காக அன்று தொடக்கம் இன்று வரை தமிழர் களின் உணர்வோடு கலந்த பெருமைக்குரிய பத்திரிகை என்றால் அது உதயன் பத்திரிகை தான். தமிழர்களுடைய பாரம்பரிய கலை , கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களை எல்லாம் உலகறியச் செய்த பெருமைக்குரிய பத்திரிகைகளில் உதயன் பத்திரிகையின் பங்கு அளப்பரியது. இந்த மகிழ்ச் சியான தருணத்தில் பத்திரிகைத் துறையில் பணிபுரியும் போது தங்களுடைய உயிர்களைப் பறி கொடுத்த அந்த உன்னதமானவர்களை என் மனதில் நிறுத்திக் கொண்டு இப் பத்திரிகையானது இன்னும் பல சாதனைகளைப் படைக்க வேண்டும் என்றும் தமிழர்களின் உரிமைக்காக என்றும் குரல் கொடுக்க வேண்டும் என்றும் வாழ்த்துவதோடு இப் பத்திரிகையின் நிறுவனத்தினருக்கும் ஆசிரியர் குழாமினருக்கும் பணியாளர்களுக்கும் எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின் றேன்.

**பா. லம்போதரன்,**
தலைவர்,
வெளிச்சம் அறக்கட்டளை, வவுனியா.



## பீனிக்ஸ் பறவைபோல் மீண்டெழுந்து மக்கள் பணியை ஆற்றும் உதயனே



தமிழ்பேசும் மக்களின் இதயநாதமான 'உதயன்' பத்திரிகை 33 வருட அகவையை நிறைவு செய்து 34 ஆவது அகவையில் கால் பதிப்பதையிட்டு எமது சம்மேளனத்தின் நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

வடக்கு, கிழக்கு தமிழ்பேசும் மக்களின் குரலாக, மக்களின் பிரச்சினைகள், அவலங்களை வெளிக்கொணர்வதிலும், அவற்றுக்கு விடிவு தேடுவதிலும் உதயனின் பங்களிப்பு அளப் பெரியது.

இந்த ஊடகப்பணியில், தொடர்ச்சியாகப் புல்லுருவிகளின் நெருக்குதல்கள், தாக்குதல்கள், உயிர்ச் சேதங்கள் போன்றவற்றைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் உதயன் சந்தித்த போதும் பீனிக்ஸ் பறவைபோல் மீண்டெழுந்து மக்கள் பணியைத் தொடரும் திடமான பாங்கை என்றும் மறந்து விடமுடியாது.

உதயனின் பணிதொடரவாழ்த்துவதுடன் எதிர்காலத்தில் கிழக்குக்கும் வாசகர்களை நோக்கி வியாபிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையையும் இந்தச் சந்தர்ப்பத்தில் முன்வைக்கின்றோம்.

**கலாபூஷணம் மீரா எஸ்.இஸடீன்,**
தலைவர்.
அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனம்.



## உலகம் போற்றும் உன்னத பத்திரிகை



உயர்ந்த இலட்சியமும் உன்னதக் கொள்கையும் கொண்டு உதித்தவன் உதயன். இன்று அவன் தனது 34 ஆவது அகவையில் தடம்பதிப்பதையிட்டு பெரும் உவகை அடைகின்றேன்.

காலைக் கதிரவனின் ஒளிக்கீற்றுக்கள் மக்கள் பார்வைக்கு எட்ட முன்னர் உதயன் பத்திரிகை மக்கள் கைகளில் தவழத் தொடங்கிவிடுவான். பாமர மக்களில் இருந்து படித்த மக்கள் வரை உச்சரிக்கின்ற நாமம்.

வாசிப்புச் சமுதாய வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். வாசிக்காதவர்களால் நல்ல எண்ணங்களையும், சிந்தனைகளையும் வெளிப்படுத்த முடியாது. அந்த வகையில் உதயன் தன்னில் பல் துறைசார்ந்த விடயங்களைத் தாங்கி வருவதால் மக்களையும் மாணவர்களையும் வாசிக்கத் தூண்டுகின்றான்.

உலக வளர்ச்சிக்கு ஏற்ப தமிழ் மக்களை இட்டுச் செல்வதற்கு இயன்றளவு தனது முயற்சிகளை மேற்கொண்டு வருபவன் தன்னலமற்ற, தற்புகழ்ச்சி அற்ற தமிழ் மணம் கமழும் தன்னிகர் அற்ற உதயன் உலகம் போற்றும் உன்னத பத்திரிகை.

ஊடக சுதந்திரம் அடக்குமுறைக்கு உட்பட்ட போதும் அடங்காது தமிழர்களது பிரச்சினையை எழுதத் துணிந்தவன். மக்களை, எழுச்சியுறச் செய்தவன் இன்னல்களையும், இடர்களையும் கண்டு அஞ்சாது தமிழ்மக்களை இரசித்தவன் உதயன்.

மாணவர்களுக்கான அறிவுப் பசியைப் போக்கத் தேவையான கல்வி, பொருளாதாரம், அரசியல், உலகவிடயம், சமூகக்கட்டுரை, கவிதை, சிறுகதை, ஆன்மிகம் என்பவற்றை நாளிதழில் பதிப்பித்து மனம் கவர் பத்திரிகையாக வலம் வருகின்றான்.

மக்களின் குரலாய் மேலும் பல ஆண்டுகள் ஓங்கி ஒலித்திட இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

"நல்லது வேண்டுமென
நாடி சேவை செய்வார்க்குத்
தொல்லை துன்பம் தடையெல்லாம்
தோன்றும் அதற்கு உவமை உதயன்!

**பழனித்துரை தர்மகுமாரன்,**
தலைவர்.
உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கம்.

## அச்சமின்றி ஆழ்ந்து சிந்தித்து எழுதுகின்ற திறமை ஓங்கட்டும்



பிறந்த பொன்னாட்டின் தாயக மண்ணின் எண்ணக் கருத்துக்களை எழுத்துக்களால் மாற்றி எட்டுத்திக்கும் உதயன் உதிக்கும் ஆண்டது அகவை முப்பத்து நான்கு.

தேமதுரத்தமிழோசை திக்கெட்டும் பரவத் தினம் தினம் உதிக்கின்றது. அச்சமின்றி அனைத்தையும் ஆழ்ந்து சிந்தித்து எழுதுகின்ற திறமை ஓங்கட்டும்.

மின்னணு யுகத்தின் தொழில்நுட்பங்களோடு சிறந்தோங்கி வளர்ந்திட வாழ்த்துகின்றேன்.

நேற்று, இன்று, நாளையென வீறு நடை. போடும் உதயனை என்றும் புகழும் தமிழ் மனங்கள், நேற்றைய பதிவுகளை நாளைய வரலாற்றில் தமிழ் மணம் கமழப் படைத்திட 27.11.2018 இல் அகவையது 34 இல் முன்னேற முத்தமிழால் வாழ்த்துகின்றோம்.

தலைவர்,
வவுனியா மாவட்டப் பதிப்பாளர் கூட்டுறவு சங்கம், வவுனியா.

## தீப ஒளியாய் துலங்கட்டும் உதயன்

புலரும் காலையில் புதிய அகவையினை அள்ளிவரும் மக்கள் மனம் நிறை ஆற்றலின் ஆற்றலாய் ஒளிரும் உதயன் நாளிதழின் புன்னகையில், நாமும் அள்ளி அணைத்து வாழ்த்துரைப்பதில் மகிழ்வு பெறுகின்றோம். அதிகாலை நேரத்தில் ஆனந்தத் துதி பாடி ஒவ்வோர் இல்லங்களின் படியேறி, கரங்களில் தவழ்ந்து, அறிவுடன் ஆற்றலை, ஆர்வத்தை நிறைத்து முப்பத்தி மூன்றாம் வருடங்கள் நிறை பணியாற்றும் உந்தன் மகத்தான பணி, இன்னும் பல்லாண்டு காலம் இடைவிடாது செழிப்புடன் தொடர வாழ்த்துகின்றேன். வாசிப்பதால் மனிதம் அடையும் நிறைவின் பெரும்பங்காய் மிளிர்பவனே, கார்த்திகை மாதத்தில் சுடர்விடும் தூய ஒளியாய், என்றுமே முகம் மலர்வாய். ஊடக தர்மம் தாங்கியே வெல்லும் வாசல் வரை செய்தி சொல்வாய். ஆயிரம் சவால்கள், அடுக்கடுக்காய் சதிகள், நிலைகுலைக்க நெருடல்கள் சூழ்ந்து வரும் போதெல்லாம், நேர்மையின் வழிநில். துணிந்து செல். வாசக நெஞ்சங்களில் வாழுவாய் வற்றாத ஊற்றாகி. உனை வாழ்த்துவதில் அகம் நிறைகின்றேன்.

**தருமலிங்கம் அமிர்தேஸ்வரன்(அமுதன்),**
தலைவர்,
உறவுகளுக்குக் கரம்கொடுப்போம்,
நிர்வாகச்செயலகம், ஜேர்மனி.

## சாவு வந்த போதும் மண்டியிடாத உதயனே வாழ்க



ஈழத்தமிழர்களின் இதயத்துடிப்பாய்த் திகழ்கின்ற உதயனே. ஈழத்தமிழர்களின் உரிமைக்காய் உண்மையாய்க் குரல் கொடுக்கும் உதயனே. தரணியிலே உனையின்றி வேறு யார். தேசியத்தை அழிப்பதற்குப் புதிதாகப் புல்லுருவிகள் முளைக்கின்ற போதெல்லாம்.

பொறுப்புடன் மக்களுக்கு உண்மையை எடுத்துரைக்கும் மக்களின் மனம் நிறைந்த நாளிதழ் உதயனே தரணியில் என்றென்றும் நீ நீடூழி வாழ்க

**க.ஜெயக்குமார்,**
தலைவர்
கரைச்சி கிராம அபிருத்திச் சங்கம்,
மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம்,
கிளிநொச்சி.

## செய்திகளை உடனுக்கு உடன் கொண்டு செல்லும் பத்திரிகை



யாழ்.மண்ணில் இருந்து மக்களின் குரலாக வெளிவந்து கொண்டிருக்கும் உதயன் பத்திரிகைக்கு 34 ஆவது ஆண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றோம்.

இலங்கையின் தமிழ் ஊடகத்துறையில் ஓர் உன்னத நிலையில் முதன்மை வகிக்கும் உதயன் பத்திரிகை கடந்த 33 ஆண்டுகளாகத் தமிழ் பேசும் மக்களுக்கு ஆற்றிவரும் ஊடகப் பணி சிறப்புக்குரியது.

கடந்த காலங்களில் பல இக்கட்டான சூழ்நிலை களையும் தாண்டி மக்களுக்குச் செய்திகளை உடனுக்கு உடன் கொண்டு செல்லும் பத்திரிகை என்றால் அது உதயனுக்கு நிகர் வேறில்லை. உதயன் பத்திரிகையின் 34 ஆவது ஆண்டு அகவை வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர்,
கொழும்புத்துறை மேற்கு ,
சனசமூக நிலையம்.

## ஈழத்து முற்றத்தில் நிமிர வாழ்த்துக்கள்

எழுச்சியின் திறவு கோலாய் எழுதுபவனே! ஈழத் தமிழரின் உரிமைக் குரலாய் ஒலித்திட வேண்டும். விழிப்புறும் தமிழர் தாயகத்தின் தூதுவனே! வியத்தகு தீர்வொன்றுக்காக உழைத்திட வேண்டும். சலிப்பற்ற துணிச்சல் மிக்க தூயவனே சாதனைகள் ஆயிரம் எம் தேசத்தில் படைக்க வேண்டும். மொழிப்பற்றைப் பறைசாற்றி உருவேற்றும் முன்னவனே முப்பத்தி நான்காவது ஆண்டிலும் ஈழத்து முற்றத்தில் நிமிர வாழ்த்துக்கள்.

**மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்,**
பணிப்பாளர்,
சைவத்தமிழ் பண்பாட்டுப் பேரவை.

## உதயனின் சேவை அளப்பெரியது

தேசிய பத்திரிகைகளுக்கு நிகராக நாடாளுமன்றச் செய்திகளாக இருந்தாலும் சரி, சமூகச் செய்திகளாக இருந்தாலும் சரி சுடச்சுடச் செய்திகளை முந்திக்கொண்டு தருவது உதயனுக்கு நிகர் உதயன்தான். உதயன் பத்திரிகை பேசாத சமூகப்பிரச்சினைகள் என்று எதுவும் இல்லை. குறிப்பாக மீனவர், விவசாயிகள் பிரச்சினைகளை முக்கியத்துவத்துடன் செய்தி தருவது வரவேற்கத்தக்கது. உதயன் பணி மேன்மேலும் தொடர முத்தரிப்புத்துறை மீனவர்கள் சார்பில் வாழ்த்தி நிற்கின்றோம்.

மன்னார்,
முத்தரிப்புத்துறை மீனவர் சங்கத்தினர்.

## தரணியில் உன் பணி தொடர வாழ்த்துவோம்

வெளிப்படையான
கருத்துக்களைக் கொடுத்து– எம்
தமிழ்ச் சமுதாயத்தை அண்ணார்ந்து
பார்க்க வைத்த – இதழே
33 ஆண்டுகள் தரமான
பதிவுகளைக் கொடுத்து சாதனைகள்
பல்லாயிரம் படைத்திருக்கும் – நாளிதழே
எண்ணிலடங்காச் செய்திகளை அச்சிலேற்றி
எம் இனத்தின் கைகளிலே தவழும் உனக்கு
மேலும் பல்லாண்டு
தரணியில் உன் பணி தொடர
கடற்றொழில் மக்களின் சார்பில்
வாழ்த்துகள் பல கூறி
மகிழ்ச்சி கொள்கின்றோம்.

தலைவர் / செயலாளர்,
யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க,
சமாசங்களின் சம்மேளனம்.

## உதயனாக என்றும் உயர்ந்து நிற்பாய்



ஆதவன் உதயமாவதற்கு
முன்பதாக
அதிகாலை வேளைதனில்
எம் கைகளில்
கிடைத்திடுவாய்
உடன் செய்திகள்,
உண்மைச் செய்திகள்
உலகச் செய்திகள்,
விளையாட்டுச் செய்திகளை
உன்னதமாய் என்றும் தந்திடுவாய்
உலகம் முழுதும் இணையத் தளமூலம்
இணைந்துவிட்டாய்
ஊடக சுதந்திரத்துக்காக
உலக விருது வென்ற ஊடகமும் நீயே
தலைநகர் கொழும்பிலும் உனக்கு இன்று ஓர்
தனியிடம்
நடுநிலை தவறாத நற்றமிழ் ஏடு
உன்னைப் போற்றுவார்கள், ஏசுவார்கள்
அஞ்சவேண்டாம்
உள்ளதை உள்ளபடி என்றுமே துணிச்சலோடும்
துணிவோடும் எழுதிவா
உதயனாக என்றுமே உயர்ந்து நிற்பாய்

நயினை விசு இராசநாயகம்,
ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்.

## பாரினில் சிறந்து விளங்கிட வாழ்த்துகின்றோம்

34 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் உதயன் பத்திரிகைக்கு எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம். இனிவரும் காலங்களிலும் உண்மையை உலகிற்குஉரைத்து பாரினில் சிறந்து விளங்கிட வவுனியா வர்த்தகர் நலன்புரிச்சங்கம் சார்பில் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வர்த்தகர் நலன்புரிசங்கம்.
வவுனியா

## தொடர்ந்து வீறு நடை போடுவாய்

இன்று உதயன் பத்திரிகை புதிய ஆண்டில் காலடி எடுத்து வைப்பதை இட்டு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். பல்வேறு தடைகளைத் தாண்டி துணிச்சலான செய்திகளை வழங்குவதற்கு உதயனுக்கு நிகர் உதயனேதான். நீ தொடர்ந்து பல்லாண்டுகள் பணி செய்ய வாழ்த்துக்கள்

உதவும் கரங்கள் சமூக சேவை அமையம்,
வாதரவத்தை, புத்தூர்.



## உயிர்ப்பான தோழன்

உதயத்தின் கருவூலமேதமிழர்
இதயத்தின் அடிநாதமே வாழ்க
பொய்மைதனைப் புறந்தள்ளும்
வாய்மைக் குரலோனே வாழ்க!

தேசத்தின் புயலாய் எழுந்து
தேசத்தை வெளிக்காட்டும்
பாசத்தின் நாளிதழாம்
வாசமல்லிகையே வாழ்க!

வேதனைகள் சோதனைகள்
வென்றிட்ட வீரன் இவன்
உண்மைச் செய்திகளின்
உயிர்ப்பான தோழன் இவன்.

எழுத்தாளர்களை ஊக்குவிக்கும்
பழுதிலா திறனுடன் ஒழுகிடும் நெறிநிறு
எழுகவே வளர்கவே.

திருமதி கிருஷ்ணவேணி சிங்கராஜன்
வ்யாவிளான்,

## காலை உதிக்குமெங் காவலனே! வாழியநீ!

(நேரிசை வெண்பா)



காலமெலாங் காரிருளில் ஆழ்ந்தே தவிக்குமித்தீக்
கோலமெலாம் வீழ்ந்தே குலைந்தேகச் சாலவே
காலை யிலுதிக் குமெங்கா வலனார்க்காய்க்
கோலமாய் வாழ்த்திசைப்போம் நாம்

எண்ணற்ற மக்கள் இதயங்கள் வென்றாய் - நீ
பண்ணறு நற்கலைகள் பாதுகாப்பாய் பண்போடு
கண்ணார் மணியே நீ காண்கவே முப்பத்து
நான்ககவை நன்றே நனி

எத்திப் பிழைப்பாரும் பெற்றுப் பிழைப்பாரும்
கொத்திப் பிடுங்குங் கொடுமையை - நித்தம்
தலைகவிழ்ந்து கண்ணீர் சொரிகிற கேடாம்
நிலையினை நீ மாற்று வாய்



இன்பத் தமிழ்மண்ணும் ஏற்றமிகு செந்தமிழும்
அன்புத் தமிழ்செய்வோர் வாழியவே என்றும்
உதயனே எம்முணர் வாய்இன்னும் இன்னும்
விதைகளை நாட்டிடுவாய் நீ

செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன்
தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்.

## சங்கிலியன் பூமியில் பொங்கிவரும் தமிழே

சங்கிலியன் பூமியில் பொங்கிவரும் தமிழே
சரவணபவன் பெற்றெடுத்த தமிழ் இதழே
பொங்கிவரும் தமிழ் உணர்வின் அறிவே இந்த
பூமியில் என்றும் உதிப்பாய் உதயனே

யுத்தத்திலும் சுடச்சுட மலர்ந்தாய் குண்டுச்
சத்தத்திலும் நிமிர்ந்தே எழுந்தாய்
எத்தர்கள் உந்தன் குரல்வளை சுட்டபோதும்
புத்தம் புதிதாய் எழுந்தாய் நிமிர்ந்தாய்

காலங்கள் கடந்து வாழி எங்கள்
கனவுகள் மீதிலும் வாழி
ஞாலங்கள் செழித்திட வாழி இந்த
நானிலம் போற்றிட வாழி

வண்ணை கேந்திரன்

## உதயம் காணும் உதயனுக்கு வாழ்த்து.



ஊடகங்கள் பல இருந்தும்
உண்மைகள்உறங்கையிலே
விழிகளை திறந்து வைத்து
விடிய விடிய காத்திருந்து

நாற்நிலம் சீர்பெற்றெழ
நல்லதோர் சேதி சொல்லி
எம் தேசத்து உணர்வுகளை
எளிமையாய் தாங்கிச் சென்று

கள்ளமில்லா உள்ளம் கொண்டு
காலங்கள் கடந்து வாழும்
நல்லதோர் நாளிதழுக்கு
நவில்கின்றேன் வாழ்த்துப்பா

நியாயங்கள் நிலைத்து நிற்க
நின் சேவை தொடரட்டும்
அரசியல் சமூகம் புரட்சியென
அர்த்தங்கள் பல பேசட்டும்

காதலோடு கரைந்து நின்று
காவியமாய் வாழட்டும்
இலக்கியத்துள் புதைந்து நின்று
ஈகத்துள் நிலைக்கட்டும்

யாவும் நன்நெறியாய்
யாவற்றையும் செய்யும்
உதயத்து இதழுக்கு
இதயத்தின் வாழ்த்துகள்.

நாவலூரான் வ.ஜசிந்தன்.
தலைவர்
நதியோர நாணல்கள் இலக்கிய மன்றம்
நாவற்காடு, வரணி.

## தமிழ் மக்களின் இருப்பை பாதுகாத்து உலகறியச் செய்தவன்

பத்திரிகை வரலாற்றில் 34 ஆம் வருடத்தில் தடம் பதிக்கும் உதயன் குடும்பத்தை வாழ்த்துவதில்பெருமையடைகின்றேன்.

தமிழ் மக்களது நெஞ்சத்தில் குடிகொண்ட நாயகன் உதயன் நீண்ட பல சவால்கள், அர்ப்பணிப்புக்கள்,தியாகங்கள், சாதனைகள், இழப்புக்கள், துன்பங்கள் என அனைத்தையும் தாங்கி தினமும் அதிகாலையில் மக்களது கைகளில் கிடைப்பான்.

30 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாத்துவந்து உலகறியச் செய்த மூன்று அமைப்புக்களை தமிழ் மக்கள் இன்றும் தமது உள்ளங்களில் நிறுத்திப் பெருமை அடைந்து வருகின்றனர். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உதயன் பத்திரிகை நிறுவனம் போன்றனவாகும். இவற்றில் சிறிதேனும் வழிமாறாத திசையில் மக்கள் மனங்களில்குடிகொண்டு உயரிய சிந்தனையில் வீறுநடைபோடும் உதயன் நிறுவனம் மீது மக்கள் கொண்டுள்ள மதிப்பு வர்ணிக்க முடியாதவை. உதயன் நிறுவனம் தீயிடப்பட்டது, இயந்திரங்கள் சேதமாக்கப்பட்டன, பணியாளர்கள்படுகொலைசெய்யப்பட்டார்கள். இவ்வாறு பல துன்பங்கள் நடைபெற்ற நாள்களிலும்கூட ஒருநாளும்தவறாது மக்களுக்குச் செய்திகளைக் கொண்டுசென்றான். அவ்வளவு தியாக மற்றும் சேவை மனப்பாங்கு கொண்ட பணியாளர் குழாம் உதயனோடு சேர்ந்திருந்தார்கள். "சீரான வீதி இல்லையாம், செல்வதற்குப் பேருந்தும் இல்லையாம், ஆஸ்பத்திரிக்குச் செல்ல 15கீலோமீற்றராம், பொலிஸ் நிலையத்துக்கு 18 கீலோமீற்றராம், சிக்னல் சரியா விழுகுதில்லையாம், ஆனால் அடுத்த பெட்டிக்கடையில உதயன் பேப்பர் இருக்குதாம் என்னும் அளவுக்கு உதயன் செல்லாதஇடம் இல்லை. வடக்கு மாகாணம் முழுவதும் வாழும் தமிழ் மக்களின் மனம் நிறைந்த நாயகனாகப் போற்றப்படும் உதயன் மென்மேலும் வளரப் பிரார்த்திக்கிறேன்.

தமிழ் மக்களின் உரிமைக் குரலாய் பயணிக்கும் உதயன் நிறுவனத்தின் தலைமை மற்றும் பணியாளர்கள்அடங்கிய உதயன் குடும்பம் வழிதவறாது வாழ இறைவனை என்றும் பிரார்த்திக்கின்றேன்.

கதிர்மைந்தன்.
முல்லைத்தீவு

## என்னவனே நீடுழி வாழ்க

புலரும் பொழுதில்
விடியலாய் வந்து எம்மவர் கரங்களில்
சேயாய்த் தவழும்
என்னவன் உதயனே
நன் நாளாம் இந் நாளில்
சுந்தரத் தமிழில் சொல்லடுத்து
உன் புகழ் பாடவந்தேன்
புலம் பெயர் உறவுகளின்
புலரும் பொழுதாகி
நூறு படைப்பாளிகளை
பொங்கல் மலராய்ப் படைத்து
இளையோர் நெறிபரற் வாழ்வியலை
இடித்துரைத்து - எம்மவர்
பாடையியேற்றம் பாரம்பரியங்களை
தைத்திருநாளில் பறைசாற்றி
வாசகர் திருமுகத்தில்
சுட்டுவிரலாகி பக்தி எடுத்தில்
பவ் வியமாய்க்குந்தியிருந்து
ஆன்மீகம், அரசியல் விளையாட்டு என
தட்டிக் கேட்கும் அண்ணன்தம்பியாகி
அரங்கேறும் கலைஞர்களை மதிப்புறுத்தி
எட்டப்பர் கூட்டத்தின்
எண்ணங்கள் சிதைவுற நீறுபூத்த
நெருப்பாய் உயிர்ப்படைந்து நடுநிலை
தவறாது உண்மையுறைத்து
ஊடகத்தின் வேந்தனாகி
உயர்விருதின் மகுடம் சூடி
தன்னிகரில்லாத் தலைவனாய்
தமிழர் நெஞ்சங்களில் பவணிவரும்
அழகு மேனியினனே உன்
சேவைகள் ஒன்றா இரண்டா
சொல்ல என்னிடம் வார்த்தைகளில்லை
அகவை புதிதில் இன்று
களிப்புறும் நன்மை வாயாக,
மனதார வாழ்த்துகிறேன்
வாழ்க நீடூழி நீ வளர்க உன்பணி

உடுவிலூர் கலா

## உடனுக்குடன் செய்திகளை வெளியிடும் நாளிதழாக உதயன் திகழ்கிறான்



பல சவால்களை எதிர்கொண்டு 34ஆவது ஆண்டில் காலடி எடுத்து வீறுநடைபோடும் உதயனை வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப மக்களின் தேவைகளை அறிந்து அரசியல், வணிகம், கிராமம், விளையாட்டு என பலதுறையிலும் உடனுக்குடன் செய்திகளை வெளியிடும் நாளிதழாக உதயன் திகழ்கிறான். அரசியல்வாதிகள், அதிகாரிகளுக்குப் பயப்படாமல் உண்மையான தகவல்களை உறுதிப்படுத்திச் செய்திகளை வெளியிடுவதில் உதயனுக்கு நிகர் உதயனே. உதயனின் பணி மேலும் சிறக்க வாழ்த்துக்கள்.

**க.கனகராஜா,**
தலைவர்,
யாழ். மாவட்ட எறிபந்தாட்டச் சங்கம்.

## மக்களின் மனங்களில் தனக்கென தனியிடம் பதித்த நாளிதழ் உதயன்

34ஆவது அகவையில் உதயன் பத்திரிகை கால் பதிக்கிறது என்பது மகிழ்வான செய்தியாகும். இந்தப் பணியில் ஈடுபடும் நிர்வாக இயக்குநர் தலைமை ஆசிரியர், செய்தி ஆசிரியர்கள், ஆசிரிய குழுவினர், செய்தியாளர்கள் மற்றும் பணியாளர்கள், உடனுழைப்பாளர்கள் யாவரையும் பாராட்டி வாழ்த்த விரும்புகின்றேன்.

1985ஆம் ஆண்டு முதலாக அவன் நடந்த பாதை மிகவும் கரடு முரடானது. எனினும் அவை எல்லாவற்றையும் சமாளித்து இன்று மக்கள் மனங்களில் தனக்கென தனியிடம் பதித்த நாளிதழாக மிளிர்கின்றான்.

எமது ஈழ வளநாட்டின் தரமான பத்திரிகை என்ற பெயரை நிலைநாட்டி முதன்மை நாளிதழாகத் திகழ்வது பெருமைக்குரியதே.

யாழ்ப்பாணத்தில் எத்தனை பத்திரிகை வெளிவந்தாலும் உதயனை அசைக்க முடியாது. நல்ல முறையில் முறையான தமிழ் பற்றாளர்களால் உருவாக்கப்பட்ட உதயன் நாளிதழ் உயர்ந்து வளர்ந்து முன்னேறி எல்லோரது மனங்களிலும் இடம் பதித்து நன்கு பிரகாசிக்க எமது அருளாசியுடன் நம் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**முருகேசு எசேக்கியல்**
பருத்தித்துறை கட்டைவேலிச் சேகர
மெதடிஸ்த சபை உள்ளூர் அருளுரையாளர்

## வெற்றிப்பயணம் தொடர்வதற்கு வாழ்த்துகின்றோம்



34ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் உதயன் பத்திரிகை பல தடைகளைத் தாண்டி வீறு நடைபோட்டுக்கொண்டிருக்கின்றது. தொடர்ந்து வரும் காலங்களிலும் உண்மையை உரத்துக்கூறுவதுடன் நடு நிலமை தவறாது. சிறப்படையவேண்டும் என சிறிநகர்கிராம அபிவிருத்தி சங்கம்சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சு.ஆருணன்**
செயலாளர்
சிறிநகர் கிராமஅபிவிருத்தி சங்கம்

## "சமன்செய்துசீர்தூக்கும் கோல் போல" புகழ்பெற்றுத் திகழ வாழ்த்துகின்றேன்



தமிழ் மக்களின் உணர்வுக்கும் சுயமரியாதைக்கும் வெளிச்சம் தரும் கைவிளக்காகத் தொண்டாற்றிக் கொண்டிருக்கும் உதயன் நாளிதழானதுதனது34ஆவது அகவைதனில் "சமன்செய்துசீர்தூக்கும் கோல் போல"என்றும் மக்கள் மத்தியில் புகழ்பெற்றுத் திகழ எனதுஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மட்டற்றமகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ் மண்ணிலேதடம்பதித்துநம்நாடுமட்டுமன்றிபிறநாடுகளின் மூலை முடுக்கெல்லாம் உண்மைக் குரலைநீதி,நேர்மைவழியில் மக்கள் அறிந்துகொள்ளவழிசமைத்த பெருமைமிகுஉதயன்நாளிதழானதுதினசரிசெய்திமட்டுமல்லாதுகல்வி,விளையாட்டுஉட்படபல்துறைசார் விடயங்களை தன்னகத்தேதிரையிட்டுமக்கள் மத்தியில் நீங்கா இடம்பிடித்துள்ளதுஎன்றவகையில் நான் பெருமையடைவதுடன் சிறுவர் தொடக்கம் முதியவர் வரைஉதயன் செய்தியைஉண்மைத் தன்மையுடன்உள்வாங்கும் அளவுக்குஇன்றுபோல் என்றும் சிறப்புடன் ஒளிவீசஎனது இதய பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பொன். நித்தியானந்தம்**
தலைவர்,
மகாதேவா சுவாமிகள்
சிறுவர் இல்லம்,

## மக்களின் குரலாக ஒலிக்கும் எங்கள் உதயன்

தாயக மண்ணிலிருந்து மக்களின் குரலாக ஒலித்துக்கொண்டிருக்கும் எங்கள் உதயன் தனது 34ஆவது அகவையில் காலடி எடுத்து வைப்பதையிட்டு தொண்டைமனாறு கலைமகள் சன சமூக நிலையத்தினராகிய நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். தமிழ் மக்களின் தன்மான உணர்வுக்கும் சுயமரியாதைக்கும் வெளிச்சம் தரும் கைவிளக்காக மூன்று தசாப்தங்களைத் தாண்டியும் தொண்டாற்றிக்கொண்டிருக்கும் உதயன், என்றென்றும் மக்களின் மனம் நிறைந்த தாயக நாளிதழாக வெளிவருவதற்கு எல்லாம் வல்ல சிறி செல்வச்சந்நிதி முருகப்பெருமான் அருள் புரிவாராக.

தலைவர்,
கலைமகள் ச.ச.நிலையம்,
வல்லை வீதி,
தொண்டைமானாறு.



## துணிச்சலான ஊடகம்



34 ஆவது ஆண்டில் உதயமாகும் உதயன். இத்தனை ஆண்டு காலமாக பல்வேறு பட்ட இன்னல்களுக்கு மத்தியிலும் பக்கச் சார்பில்லாமல் அனைத்து செய்திகளையும் உரிய நேரத்தில் மக்களுக்கு வெளிப்படுத்தும் துணிச்சலான் ஊடகம்.அரசியல் செய்திகள் போல் விளையாட்டு செய்திகளும் முக்கியத்துவம் தரும் ஒரே ஊடகம். எமது பிரதேசத்தில் பல விளையாட்டு வீரர்களை வெளிக்கொணர வைத்தது உதயன் என்பதில் மகிழ்ச்சியே.

34 ஆவது ஆண்டில் உதயமாகும் உதயனுக்கு எனது வாழ்த்துக்கள்.

**இ.விஜயபாஸ்கர்,**
தலைவர்,
யாழ்.பளுதூக்கல் கழகம்.

## விளையாட்டுத்துறைசார் வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றியவன்



34ஆவது ஆண்டில் காலடிஎடுத்துவைக்கும் உதயன் பத்திரிகைக்கு எமதுசங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஆரம்பத்திலிருந்து இன்றுவரைபல்வேறுநெருக்கடிகளையும் இழப்புக்களையும் தாண்டிமக்களுக்கான சேவையை இறுமாப்புடன் தொடர்ச்சியாகவழங்கிவருகின்றமையை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது.

எமது இனத்தின் அரசியல்,சமூக,பொருளாதாரச் செய்திகளை மட்டுமன்றி விளையாட்டுச் செய்திகளையும் உடனுக்குடன் வழங்கிஎமதுதேசத்தின் விளையாட்டுத்துறைசார்வளர்ச்சிக்குபெரும் பங்காற்றிவருகின்றது.

பன்னாட்டு ரீதியான,தேசியரீதியானமற்றும் உள்ளூர்விளையாட்டுச் செய்திகளை வழங்கிவருவதன் மூலம் எமதுமக்களிடத்தில் விளையாட்டுத் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் விளை யாட்டுத்துறை மீதானபங்குபற்றுதல்களைஅதிகரித்துப் பிரதேசரீதி யானவிளையாட்டுத்துறைசார் மேம்பாட்டுக்கும் விரிவுபடுத்தலுக்கும் உறுதுணையாக இருந்துவருகின்றது. இதுமாத்திரமின்றிஎமதுபிரதேசத்தில் இடம்பெறும் விளையாட்டுப்போட்டிகள் நடைபெறுவதற்கானஊடகமற்றும் நிதிஅனுசரணைகளையும் வழங்கிபோட்டிகளைசிறப்பித்தும் வருகின்றது. எமது இனத்தின் அரசியல்,சமூக,பொருளாதார விடுதலைக்கு தொடர்ந்துகுரலெழுப்பிவரவேண்டுமென இந்தச் சந்தர்ப்பத்தில் உதயனைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மா.இளம்பிறையன்,**
தலைவர்,
யாழ். மாவட்டமெய்வன்மைசங்கம்.

## வீறு நடை போட்டு தவழ்ந்து வரும் உதயனே



தாயகத்தின் குரலாய் வடக்கிலே உதயமாகித் தடைகள் பல தாண்டிக் கொடைகள் பல பெற்று வீறு நடை போட்டுப் புலத்திலும் வெளியிலும் மக்கள் மனங்களில் தளந்து வரும் எம் இனிய உதயன் அகவை 34 இல் நுழையும் இவ்வேளை பல்லாண்டு காலம் நீடித்து நிலைக்கநல்லாசி வேண்டிநிற்கின்றோம்.

**ன்.எஸ்.சத்தியதாசன்**
தலைவர்
யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.



## சூரியன் உதிக்க மறுத்தாலும் உதயன் உதிக்க மறுத்தது இல்லை

34ஆவது ஆண்டுக்குள் காலடி எடுத்து வைக்கும் உதயனுக்கு எமது விளையாட்டுக்கழகம் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றோம். உதயன் நாளிதழ் அனைத்து தடைகளையும் தகர்த்து இன்னொரு ஆதவனாய் தமிழ் மக்களை நெருங்கி வரும் அநீதிகளை சுட்டிக்காட்டி தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்கு வழிகாட்டியாய் இன்றும் பல நூறாண்டுகள் இருக்க வாழ்த்துகின்றோம். மேலும் உதயன் எத்தனையோ உயிர் இழப்புக்கள், சொத்து அழிவுகள் அனைத்தையும் தாங்கி ஒரு போர் வீரனாய் வலம் வருவது உதயனுடைய அசாத்திய துணிச்சலும் நெஞ்சுரமுமே என்று சொன்னால் அது பொய் ஆகாது. இலங்கையின் சிங்களப் பேரினவாதமும் அதோடு இணைந்த சக்திகளும் உதயனது வரவை எத்தனையோ முறை தடுத்து நிறுத்த முயன்றபோதும் அவ்விடத்தில் உதயனது வரவை தடுத்து நிறுத்த முடியாமல் போனதே வரலாறு.

தமிழ் மக்கள் மத்தியில் சூரியன் உதிக்க மறுத்தாலும் உதயன் உதிக்க மறுத்தது இல்லை. இப்படிப்பட்ட உதயன் தமிழ்த் தேசிய இனம் தற்காலத்தில் எதிர்நோக்கி நிற்கும் அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கும் வழிகாட்டுவதோடு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களோடு இன, மத, மொழி, சாதி, பால் வேறுபாடு கடந்து சேவையாற்ற வாழ்த்துகின்றோம்.

லயன்ஸ் விளையாட்டுக்கழகம், வவுனியா.

## உயர்ந்திடுவான் உதயன்

அதிகாலையிலே அழைத்திடுவான்
ஆதாரமாய் செய்திகள் தந்திடுவான்
இணையற்ற சேவையைப் பரப்பிடுவான்
ஈடில்லா புகழை கொண்டிடுவான்
உண்மையை உலகுக்கு உரைத்திடுவான்
ஊருக்குள் உயர்ந்தே நின்றிடுவான்
எதுவரினும் எதிர்த்திடுவான்
ஏணியாய் இருந்தே ஏற்றிடுவான்
ஐயம் இன்றி உழைத்திடுவான்
ஒருநாளும் ஓயமாட்டான்
ஓடி ஒழிந்து மண்டியிடான்
ஔவியப்பேச்சை எஃதுவால்
வீழ்த்தி உயர்ந்திடுவான்- உதயன்.

வலுவிழந்தோர் மறுவாழ்வு நிறுவனம்,
தவசிகுளம், வவுனியா.

## மக்கள் மனங்களில் உறைந்த ஊடகம் உதயன்



எம் தாயக மண்ணில் ஒரு தன்னிகர் இல்லா ஊடகமாக எம் மக்களின் குரலாய் எம்மவர் மனங்களில் ஆள(ழு) உறைந்தாய் உதயன். தினமும் சூரியன் உதயமாகும் முன்னே எம்மவர் கைகளில் பத்திரிகை வடிவில் நீ தவழ்வாய். உனது 34 ஆவது வயதை அடைவதறகாய் எத்தனை சவால்கள், தடைகள் அச்சுறுத்தல்கள், இழப்புக்களை நீ சந்தித்தாய். அத்தனையும் கண்டும் நீ மக்களுக்காய் நிமிர்ந்து நிற்கிறாய். ஆதலால் நீ வாழ்க...

34ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் உன்னை வாழ்த்துவதில் நான் பெருமிதம் அடைகிறேன். நீ வாழ்க வாழ்க.

உனது தனிச் சிறப்புகளாக உண்மைத்தன்மை, உடனுக்குடன் தகவல்கள், ஊடக தர்மம் நவீன ஊடக முறைமைகள் தன்நம்பிக்கையுடைய இயக்குநர் சபை, பணியாளர்கள், முறையான நிர்வாகக் கட்டமைப்புக்கள் இதுபோன்ற இன்னும் பலவும்.

உனது குரல் ஊடாக எம் மக்களுக்கு அரசியல், சமூக கலாசார சீர்திருத்த விடயங்களையும் கல்வி, பொருளாதார, சமயம் சார் கருத்துக்களையும் விளம்பரம், துக்க, மகிழ்ச்சி விடயங்களையும் கற்றவரும் மற்றவரும் விளங்கக் கூடிய விதத்தில் போதிய மொழி வளத்துடனும் எமது சமூகத்துக்கு நல்வழி காட்டியாகவும் திகழ்ந்து வருகிறாய். உதயனே! உன் பணி ஊடகத்துறையில் மலைபோல் பலவித உயர்வுகள் கண்டு எமக்காய் வீறு நடை போட வாழ்க வாழ்க என உதயனே உன்னை வாழ்த்தி நிற்கிறேன்.

செ.மயூரன்,
உபதவிசாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.

## மக்கள் சேவகனுக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்கள்



காலப்பெருநதியின் ஓட்டத்தில் கூட கரைத்து விட முடியாத அளவுக்கு உதயனின் மக்கள் பணி காத்திரமானது. எழுத்துலகில், படைப்புத்துறையில் தனக்கென ஓர் தனியிடம் பிடித்து மூன்றரை தசாப்தங்களைக் கடந்தும் அதே கொள்கையோடும், இளமையோடும், புதுமையோடும் இன்றளவும் உறுதியாய் தொடரும் உதயனின் பயணத்தை வார்த்தைகளால் வரித்துவிட முடியாது.

அடக்கப்பட்ட மக்களுக்கும், ஒடுக்கப்பட்ட உறவுகளுக்குமாக ஓங்கி ஒலிக்கும் உரிமைக்குரல்களுள் எப்போதும் முதன்மையானது உதயனின் குரல் தான் என்றால் அது மிகையாகாது. தமிழ் மக்களின் உரிமைப்போராட்ட வரலாற்றுக்குப் பேனா முனையில் உறுதுணையாய் இருந்து உதயன் ஆற்றிய பணி ஆழமானது.

தனக்கென ஓர் கொள்கைப்பற்றோடும், கொண்ட கொள்கையில் உறுதியோடும் செயற்படும் ஒரே காரணத்துக்காக அடுக்கடுக்காய் பல இடர்களையும், இழப்புக்களையும் எதிர்கொண்டு தன் இலட்சியப் பயணத்துக்காய் பற்றுறுதியோடு, பணியாற்றிய ஊழியர்களின் உயிர்களைக்கூட விலையாய்க் கொடுத்த போதும் தன்வழி நின்று விலைபோகாது வீறுநடை போடும் உதயன் தன் சாதனைப் பயணத்தில் முப்பத்து மூன்று ஆண்டுகளைக் கடந்து பயணிப்பதும், அப்பயணத்தின் தடங்களை தாங்கிவரும் சிறப்புமலருக்கு வாழ்த்துரை வழங்குவதிலும் மகிழ்வடைகின்றேன். தமிழ் மக்களின் வாழ்வின் ஓர் அங்கமாய் தன் எழுத்துக்களாலும், படைப்புக்களாலும், அவர்களுக்காய் ஓங்கி ஒலிக்கும் உரிமைக் குரலாலும் எம் மக்களின் உணர்வுகளில் நிறைந்திருக்கும் உதயன் பல நூற்றாண்டுகள் கடந்தும் மக்களின் சேவகனாய், காவலனாய், உணர்வுகளின் ஊடகமாய் மக்கள் பணியாற்ற மனம் நிறைந்து வாழ்த்துகிறேன்.

கணேசன் கம்சநாதன்
செயலாளர்,
கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி.

## பத்திரிகைத்துறையில் நீண்ட வரலாறாக இடம் பிடிக்கும் உதயன்



இலங்கையில் குறிப்பாக வடக்கு – கிழக்கு மாகாணங்களைத் தாயகமாகக் கொண்ட ஈழத்தமிழ் மக்களினதும் இந்த உலகத்திலே பரந்து வாழ்கின்ற எமது உறவுகளின் குரலாகவும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றது உதயன் பத்திரிகை. பத்திரிகைத்துறையில் மிக நீண்ட வரலாறாகவும் இடம் பிடித்துக் கொண்டிருக்கும் உதயன் பத்திரிகையானது தனது 34 ஆலது ஆண்டில் தடம்பதிக்கின்றமையும் நினைவு கூறுவதற்கும் எமது தமிழ் மக்களுக்கு இலங்கையிலேயே ஏற்பட்டிருக்கின்ற ஏற்படுத்தப்படுகின்ற பல்வேறுபட்ட அரசியல் சமூக கலாசார பொருளாதார விடயங்களில் தனது தனித்துவமான பங்களிப்பை துணிச்சலுடன் வெளிக்கொண்டுவருகின்ற மகத்தான பணியில் உதயன் முக்கியமான பங்களிப்பை எதுவித தயக்கமும் இன்றிச் செய்து வருவதை இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூறுவதில் பெரு மகிழ்வு கொள்கின்றேன். எமது மக்களின் ஏகோமித்த குரலாக என்றென்றும் இருக்க வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

ச.தணிகாசலம்
தவிசாளர்
வவுனியா வடக்குபிரதேச சபை




சவால்கள் பல வென்று...
துணிச்சலுடன் நின்று...
தினம் தினம் உதயமாகும்
உதயன் உயிர் உள்ளவரை என்றும்
என்இதயத்தில் இருப்பான்!
33 வது அகவை கடந்து வீறுநடை போடும்
உதயனுக்கு நெஞ்சார்த்த வாழ்த்துக்கள்.

தஸ்லீமா
முசலி பிரதேச சபை உறுப்பினர்

## தமிழ் மக்களின் உயிர் மூச்சு உதயன்



உடனுக்கு உடன் செய்திகளை தெரியப்படுத்துவது உதயன். போர்க் காலத்தில் தமிழ் மக்களுக்கு உற்ற துணையாய் நின்ற உதயன். பத்திரிகை துறையில் புதிய பரிணாம வளர்ச்சியை கண்டுள்ளது உதயன் பத்திரிகை. கட்டம் கட்டமாக நடந்த ஈழப்போராட்டத்தில் தமிழ் மக்களுக்கு உற்ற துணையாய் நின்று உதயன் குடும்பத்தில் பல உயிர் பொருள் சேதங்களை சந்தித்த உதயன் பத்திரிகை சற்றும் தளராது வெற்றியுடன் 34ஆவது ஆண்டில் காலடி வைப்பது வியக்கத்தக்கது இந்தத் தருணத்தில் உதயன் பிரதம ஆசிரியர், உதவி ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் மன்னார் பிரதேச சபை சார்பில் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைக்கின்றேன்.

பாலசிங்கம் கதிகாமநாதன்(விஜயன்)
மன்னார் பிரதேச சபை உறுப்பினர்

## உதயன் பத்திரிகையே வாழ்க!



உதயன் நாளிதழின் முப்பத்து நான்காவது அகவைக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம் என்றவாறு தேனினும் இனிய தமிழ் மொழியிலே தமிழ் மக்களின் தாயக மண்ணில் உதித்தெழுந்து விடிகின்ற ஒவ்வொரு காலைப் பொழுதிலும் நாட்டு நடப்புக்களையும் சுடச்சுடச் செய்திகளையும் அள்ளிவழங்கும் அற்புதத்தை இந்த 34 ஆவது அகவை நாளிலே வியந்து போற்றுகின்றேன்.

எமது தமிழ் மக்களின் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் சிகரம் வைத்தாற்போல் மிளிர்கின்றது உதயன் பத்திரிகை. தமிழ் மக்களின் வேணவாக்களை மதித்து அவர்களின் துன்ப துயரங்களில் பங்கு கொண்டு புடம் போட்ட செய்திகளை அவ்வப்போது மக்களுக்கு அளித்து வரும் செயல்வடிவம் என்றென்றும் நீடித்து நிலைக்கவேண்டும்.

இந்த ஊடகத்துறையோடு இணைந்து பணியாற்றுகின்ற அனைவருக்கும் எனது இதயம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்பதுடன் 34 ஆவது அகவையில் இருந்து இன்னும் நீண்ட ஆயுளுடன் பயணிக்கவும் மக்கள் பயன் பெறவும் மனமுவந்து நல்லாசிகளை வழங்குகின்றேன். வாழ்க உதயன். வளர்க அதன் பணி.

திருமதி செ.அனுசியா
செயலாளர்
பச்சிலைப்பள்ளி பிரதேச்சபை , பளை.



## சேவை தொடர வாழ்த்துகின்றேன்

ஆண்டுகள் பல சென்றிடினும் உதயன் பத்திரிகையின் சேவை தமிழ் பேசும் மக்களுக்காகத் தொடர்வது சிறப்பானது. அரசியல், கலை, கலாசார, இலக்கிய, சமய, விளையாட்டு என்று பல்சுவை அம்சங்களின் சங்கமமாய் உதயன் திகழ்கிறான். காலங்கள் பல சென்றாலும் மாறாத பொலிவுடன் சாதனைகள் பல புரிய இந்த நன் நாளில் வாழ்த்துகின்றேன்.

முத்துலிங்கம் இராஜகோபால்
செயலாளர், பிரதேச சபை, பூநகரி

## மென்மேலும் வளர வாழ்த்துகின்றேன்



"மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்" என்ற வாசகத்துக்கு இணங்க தமிழ் மக்கள் தம் மனங்களில் என்றும் நீங்கா இடம் பிடித்த பத்திரிகை என்றால் அது உதயன் பத்திரிகை மட்டுமேயாகும். உதயன் பத்திரிகையானது செய்திகளை உடனுக்குடன் விரைவாகவும் வெளிப்படையாகவும் வழங்குவதில் முன்னிலை வகிக்கின்றது. நீண்டகால வரலாற்றைத் தன்னகத்தே கொண்டு நிலைத்து நிற்கின்ற பத்திரிகை என்றால் மிகையாகாது.

அந்த வகையில் இன்று 34 ஆவது அகவையில் காலடி வைக்கும் இனிய இந்த நன்நாளில் உதயன் பத்திரிகையானது மென்மேலும் வளர்ச்சிபெற்று நூற்றாண்டு அகவை தாண்டி புகழ் பரப்ப மனதார வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

திரு.ச.சந்திரமவுலி
செயலாளர்
வலிகாமம் மேற்குப்பிரதேச சபை, சுழிபுரம்

## கடந்து வந்த பாதை கடினமானது



உன்னத ஊடகப் பணியில் 34ஆம் ஆண்டில் கால் பதிக்கும் "உதயன்" ஊடக்க் குழுமத்துக்கு வாழ்த்துகள்.

எமது தமிழ் சமூகத்தின் இன்னல்களை உலகறியச் செய்த நாளிதழ் உதயன் தனது 34 ஆம் ஆண்டில் கால் பதிப்பதையிட்டு மனமார வாழ்த்துகிறேன். பல அச்சுறுத்தல்கள், அழுத்தங்கள், பிராந்திய ஊடகவியலாளர்கள் மீதான கொலைவெறித் தாக்குதல், ஊடக நிறுவனம் மீதான தாக்குதல் என்று பல எதிர்ச் செயற்பாடுகளைத் தாங்கி கடினப் பாதையைக் கடந்து 33 ஆண்டுகள் தாயக மக்களின் மனம் வென்ற நாளிதழ் உதயன். அத்துடன் எமது தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தினது மக்கள் நலச் செயற்றிட்டங்களை வெளிக்கொணர்ந்ததுடன், நான் வவுனியா மாவட்ட இளைஞர் சம்மேளனத் தலைவராக இருந்த 2016-2017 காலப் பகுதியில் எமது நிகழ்வுகளை உலகறியச் செய்த உதயனுக்கு கோடான நன்றிகள்.

சுந்தரலிங்கம் காண்டீபன்
வவுனியா நகர சபை உறுப்பினர்

## தனித்துவமான பயணம் தொடரட்டும்



34ஆவது ஆண்டில் கால் பதிக்கும் உதயன் ஊடகக் குழுமத்துக்கு வாழ்த்துகள்.

ஊடகப் பயணத்தில் 33 ஆண்டுகள் என்பது எமது சமூகத்தின் மிகப்பெரிய உன்னத பயணம். பிராந்திய ஊடகமாகக் கால் பதித்துத் தனக்கெனத் தனியான பாதையில் மக்கள் மனமறிந்த ஊடகமாக தேசிய அளவில் பயணிக்கின்றது.

போர்க் காலத்தில் பாரிய அச்சுறுத்தலுடன் தனது ஊடகவியலாளர்களைக் கூடப் பறிகொடுத்து சொல்ல முடியாத அழுத்தங்களின் மத்தியில் மக்களுக்காகச் செயற்பட்ட உதயனுக்கு வாழ்த்துகள்.

எமது தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தினையும் செயற்பாடுகளையும் சமூகத்துக்கு அறிமுகம் செய்த உதயனுக்கு உள்ளார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு பயணம் தொடர்வதற்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சந்திரகுலசிங்கம் மோகன்
வவுனியா நகர சபையின் முன்னாள் உப நகர பிதாவும் தற்போதைய உறுப்பினரும்.


## தேவை

கிளி.நகரில் அமைக்கப்பெற்று வரும் நிறுவனம் ஒன்றுக்கு பள்ளங்களை நிரப்புவதற்கான கட்டட இடிபாடுகள் உடன் தேவை.

தொடர்பு - 077 766 9407

விளம்பரத் தொடர்புகளுக்கு உதயன் advt@uthayan.com, 021 493 1111


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் முத்தையா அருந்தவநாதன்

(ஓட்டோ சப்ளையர்ஸ் உரிமையாளர்)

நாங்கள் இப்புவியில் வாழ்வாங்கு வாழ வழி அமைத்தீர்கள்
நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும்
வாழ வழிகாட்டினீர்கள்
உங்களை உருக்கி எங்களுக்கு ஒளி ஊட்டினீர்கள்
எங்களை சீராக்கிய சிற்பி நீங்கள்
நீங்கள் எங்களுக்காக செய்த தியாகங்களை
வார்த்தைகளில் வடித்து விடமுடியாது
ஆனாலும் இன்னும் வேண்டுகின்றோம்
தங்களுடைய நல்லாசியும் வழி காட்டலும்
இன்றும் என்றும் துணை நிற்பதாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

34/6, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். — மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### திருமதி சகுந்தலா கார்த்திகேசு



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 10.06.1943 | 24.11.2018 |

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கு 7 ஆம் வட்டாரம் சிற்பனை கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலா கார்த்திகேசு 24.11.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்புமகளும் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் (அம்மான் கார்த்திகேசு) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பூரணம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் பாலசந்திரன் (கொழும்பு), மனோன்மணி, இராசலிங்கம், கணநாதன், பத்மநாதன், செல்வராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சீர்மாறன், வளர்மதி (டென்மார்க்), வானதி, நிறைமதி, செல்வமாறன் (கனடா), ஜெயமாறன் (கனடா), குலமாறன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராஜலட்சுமி, பேரின்பநாதன் (டென்மார்க்), செல்வசுந்தரராசா, மதியழகன் (சாவகச்சேரி பிரதேசசபை), காஞ்சனா (கனடா), மேனகா (கனடா), சர்மிளா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மதன்ராஜ், மயூறி, குகன்ராஜ், ஜீவராஜ், மதுராமி, நவீனா, வாசவி, றாதவி, கானவி, மதுராகரன், மயூரன், விபுலன், விபுஜா, அபிநயன், கனுசன், கார்த்தி, கஷ்வின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பிரனு, தருண் ஆகியோரின் அன்புப்பூட்டியும் அம்பலவாணர் (கனடா), கணேசலிங்கம், செல்வநாயகி (கனடா) காலஞ்சென்ற சபாநாதன் (செவ்வந்தி) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 7ஆம் வட்டாரம் வேலணையில் அவரது இல்லத்தில் இன்று (27.11.2018) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அம்பலவி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7 ஆம் வட்டாரம், வேலணை. (CS 21442) (14,17) — தகவல்: குடும்பத்தினர்.

077 324 1773

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா பொன்னுத்துரை



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15.02.1930 | 25.11.2018 |

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் மண்டைதீவு, 6ஆம்வட்டாரத்தைபுகுந்த இடமாகவும் கொக்குவில், தலையாழியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா பொன்னுத்துரை கடந்த (25.11.2018) ஞாயிற்றுக்கிழமை இறையடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் புங்குடுதீவு, குறிகட்டுவானைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான முத்துவேலு சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புத்திரியும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, சுந்தரம்பிள்ளை, வள்ளியம்மை, தம்பிஐயா, நல்லம்மா, நாகேஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் குலமணிதேவி, சுந்தரேஸ்வரி, காலஞ்சென்ற சரவணபவன் (ராசா) மற்றும் மனோரமா (பிரான்ஸ்), சாந்தி (பிரான்ஸ்), ஸ்ரீ (சுவிஸ்), தமிழரசி (இத்தாலி), ரவீந்திரன் (பிரான்ஸ்), தேவமனோகரி (லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும் கிருஸ்ணானந்தன், கிருபவாணி (ஓய்வுநிலை மு. உதவியாளர் வ. க. அலுவலகம், யாழ்ப்பாணம்), இராசேந்திரம் (பிரான்ஸ்), உருத்திரன் (பிரான்ஸ்), ராதை (சுவிஸ்), கிருஸ்ணானந்தன் (இத்தாலி), மலர்மதி (பிரான்ஸ்), மோகனதாஸ் (லண்டன்) ஆகியோரின் அருமை மாமியாரும் மஞ்சுளா, பிரதீசன், கிருபவன் (பிரான்ஸ்), சாம்பவன், பிரணவன், சாயுக்ஸன், சிந்துஜா, நீருஜா (பிரான்ஸ்), நிலக்ஷன் (பிரான்ஸ்), சுப்பிரிதி, சொப்பியா (சுவிஸ்), அனோஜன், நீருஜன் (இத்தாலி), சுருதி, சுதாங்கி (பிரான்ஸ்), பாணுஜா, மதுஜா, கௌதம் (லண்டன்), ரமணன் (இலங்கை மின்சார சபை), அமிர்தாப் (பிரான்ஸ்), திலீபன் (லண்டன்) ஆகியோரின் அருமை பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.11.2018) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் 50, சபாபதி வீதி, தலையாழி அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

50, சபாபதி வீதி, தலையாழி, கொக்குவில். 021 222 8552 — தகவல்: குடும்பத்தினர்.

(CS 18549/15/18)

## மரண அறிவித்தல்

### திருமதி திவ்யசிரோன்மணி நாகராசா

(ஓய்வுநிலை அதிபர் யாழ். இந்து மகளிர் கல்லூரி)



பண்டத்தரிப்பு, வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாவும் கொண்ட யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபருமான திருமதி திவ்ய சிரோன்மணி நாகராசா நேற்று (26.11.2018) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் வேலணை இளையதம்பி கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஓய்வுநிலை ஆசிரியர் நாகராசாவின் (EKN) பாசமிகு மனைவியும் ரஜனி (ஆஸ்திரேலியா), அசோகன் (புளூணை), கல்யாணி (லண்டன்), சுமதி (ஆஸ்திரேலியா), உதயணன் (விமலன் - உரிமையாளர் மாதவா ஸ்ரூடியோ) ஆகியோரின் அன்புத் தாயாரும் ராமேஸ்வரன், வசந்தி, நடராசா, இரஞ்சகுமார், ரதினி (கொக்குவில் நாமகள் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான திருக்குலசிங்கம், சிவபாலசிங்கம், வரத சிரோன்மணி, தனபாலசிங்கம், பூபாலசிங்கம், ஜெயமங்களசிரோன்மணி ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான தியாகராசா, தங்கராசா, யோகராசா மற்றும்செல்வராசா, தவமணிதேவி, காலஞ்சென்றலீலாவதிமற்றும்லலிதாதேவி ஆகியோரின் மைத்துனியும் நிரூசன், ஜனனி, அஸ்வின், அக்சரா, அருணன், சாம்பவி, தனிஸ்கன், தனிஸ்க்கா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லமான 40/5 A, புகையிரத கிழக்கு ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் வைக்கப்பட்டு எதிர்வரும் (29.11.2018)வியாழக்கிழமைமுற்பகல்10.00மணியளவில்இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

40/5 A, புகையிரத கிழக்கு ஒழுங்கை கந்தர்மடம், யாழ்ப்பாணம். 077 022 9942 — தகவல்: குடும்பத்தினர்.

## மாவீரர்...

ஆயுதப் போர் மௌனிக்கப்பட்ட பின்னர் கடந்த ஆண்டு மாவீரர் நாள் மிக எழுச்சியுடன் நினைவேந்தப்பட்டது. இந்த ஆண்டும் மாவீரர் நாள் நினைவேந்தலை உணர்வெழுச்சியுடன் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாவீரர் துயிலும் இல்லங்கள் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. நினைவேந்துவதற்காக ஏற்பாடுகள் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிற்பகல் 6.05 மணிக்கு ஈகச் சுடர் ஏற்றப்பட்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

**உடுத்துறை**

உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நினைவேந்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன என்று ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது. மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவுகளின் போக்குவரத்துக்கான பயண ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அறிவித்துள்ளது.

பருத்தித்துறையிருந்து 2 மணிக்கு புறப்படும் பேருந்து மந்திகை - வல்லிபுரம் - அம்பன் ஊடாக உடுத்திறை மாவீரர் துயிலும் இல்லம் வந்தடையும் என்றும் கேவிலிலிருந்து பி.ப. 3 மணிக்குப் புறப்படும் பேருந்து கட்டைக்காடு வெற்றிலைக்கேணி ஊடாகத் துயிலுமில்லம் வந்தடையும். வெளியிடங்களிலிருந்து வருபவர்களுக்காகப் புதுக்காடுச் சந்தியிலிருந்து மருதங்கேணி ஊடாக துயிலுமில்லம் வரை போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**தீருவில்**

தீருவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தலுக்கான அனைத்து நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. கடந்த காலங்களைப் போன்று அங்கு நினைவேந்தல் நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

**யாழ்.பல்கலை**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள மாவீரர் நினைவுத் தூபி சீரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் மாவீரர் நினைவேந்தலுக்குத் தயார்ப்படுத்தப்பட்டுள்ளது. மாவீரர் நாள் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டுள்ள நிலையில் நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**சாட்டி**

தீவகம், சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில், நினைவேந்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மாவீரர்களை நினைவேந்த அனைவருக்கும் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

**கோப்பாய்**

கோப்பாய் இராசவீதியில் மாவீரர் நினைவேந்தல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள நிலையில் துயிலும் இல்லத்துக்கு முன்பாக உள்ள பகுதியில் நினைவேந்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் நடைபெற்றதைப் போன்று மாவீரர்நாள் இன்று அங்கு நடைபெறும் என்று ஏற்பாட்டளர்கள் தெரிவித்தனர்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி, கனகபுரம் முழுங்காவில் மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர் நாள் நினைவேந்தலுக்குச் சிறப்பான முறையில் தயார் செய்யப்பட்டுள்ளன. அனைத்துத் தரப்பினரும் இணைந்து இந்த ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

எந்தவித நெருக்கடிகளும் இன்றி மாவீரர் நாள் நினைவேந்தல் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும், நினைவேந்தலில் அனைவரும் கலந்து கொண்டு மாவீர்களை உணர்வெழுச்சியுடன் அஞ்சலிப்போம் என்றும் கனகபுரம் மாவீரர் பணிக்குழுச் செயலாளர் குமாரசிங்கம் தெரிவித்தார்.

**முல்லைத்தீவு**

அளம்பில் தேவிபுரம், முள்ளிவாய்க்கால், இரணைப்பாலை துயிலும் இல்லங்களில் மாவீரர் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அந்தப் பகுதி இளைஞர்கள், உறவினர்கள், ஏற்பாட்டுக் குழுவினர் இணைந்து நினைவேந்தலுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

**கஞ்சிகுடிச்சாறு**

அம்பாறை, கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் நிறைவு பெற்றுள்ளன. போக்குவரத்து, குடி தண்ணீர், உணவு போன்ற அனைத்து ஏற்பாடுகளும் மாவீரர் பணிக்குழுவால் முற்கொள்ளப்பட்டுள்ளன. அனைவரும் கலந்து கொண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும் என்று பணிக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

ஏனைய மாவீரர் துயிலும் இல்லங்களிலும் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. ஆலயங்களிலும் சிறப்பு வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (ந-37,26,214)

## விடுதலைப்...

அமைப்பு) இந்த ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. அந்த நிகழ்வைத் தடை செய்ய வேண்டும் என்று ஊர்காவற்றுறை தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஊர்காவற்றுறை நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்றுக் காலை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி அ.யூட்சன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அதன்போதே நீதிமன்று மேற்கண்டவாறு கட்டளை பிறப்பித்தது.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் புலிகளின் பாடல்கள் ஒலிபரப்புச் செய்யப்பட்டன. அது தொடர்பாகப் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில் இறந்தவர்களோடு தொடர்புடையவர்கள், துயிலுமில்லத்தில் மேற்படி பாடல்களை ஒலிபரப்பி உணர்வுபூர்வமானக் கடைப்பிடிப்பதை மாத்திரம் பொலிஸார் தடை விதிக்கக் கோருவது ஏன்? என்று நீதிவான் கேள்வி எழுப்பினார்.

புலிகளின் பாடல்கள் ஒலிபரப்புவதைத் தடை செய்ய முடியாது. புலிகள் அமைப்பின் கொடி, இலச்சினை, புலிகளின் சீருடைகளோடு கூடிய உருவப்படங்களை மேற்படி நிகழ்வில் பயன்படுத்த தடை விதிக்கப்படுகின்றது. இறந்தவர்களின் சாதாரண உருவப் படங்களைப் பயன்படுத்தி அஞ்சலி செலுத்தலாம் என்று நீதிமன்று கட்டளை பிறப்பித்தது.

**பொலிஸார் பிரயத்தனம்**

அதேவேளை, புலிகளின் இலட்சினைகள், கொடிகளைப் பயன்படுத்தி கோப்பாயில் மாவீரர் நினைவேந்தலை நடத்துவதற்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று தடை விதித்துள்ள நிலையில் அந்தக் கட்டளையை நடைமுறைப்படுத்தும் வகையில் வீரசிங்கம் சிறீதரன் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோருக்கு எதிரான எழுத்துமூலத் தடை உத்தரவை வழங்க வேண்டும் என்று கோப்பாய் பொலிஸார் தமது மனு மீது நேற்று நகர்த்தல் பத்திரம் அணைத்துக் கோரியுள்ளனர்.

வீரசிங்கம் சிறிதரன் என்பவரின் கர்ணியில் தடை செய்யப்பட்ட இயக்கம் ஒன்றின் சின்னங்கள், கொடிகள் மற்றும் வரைபடங்களைப் பயன்படுத்தி நிகழ்வு நடத்தப்படவுள்ளது என்று பொலிஸாரின் புலன் விசாரணையின் அடிப்படையில் அறியப்பட்டுள்ளது. அதற்குத் தடை விதிக்க வேண்டும் என்று கோப்பாய் பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

மனுவை விசாரித்த யாழ்ப்பாணம் நீதிவான் மன்று, மாவீரர் நினைவேந்தலை நடத்துவதற்குத் தடை விதிக்க முடியாது என்று தெரிவித்ததுடன், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கொடிகள், சின்னங்கள் மற்றும் வரைபடங்களைப் பயன்படுத்தி நிகழ்வுகளை நடத்த முடியாது என்று கடந்த வெள்ளிக்கிழமை கட்டளை வழங்கியிருந்தது.

நினைவேந்தல் நடத்துவதற்குத் எந்தத் தடையும் வழங்கப்படாத நிலையிலேயே பொலிஸார் எழுத்து மூலத் தடை உத்தரவைக் கோரியுள்ளனர். (ந-26,154,37)

## நாடாளுமன்று...

போதும் பொதுமக்களுக்கான பார்வைக் கூடமும், சபாநாயகர் சிறப்பு விருந்தினருக்கான பார்வைக் கூடமும் மூடப்படவுள்ளன என்று நாடாளுமன்றப் படைக்கலச் சேவிதர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நாடாளுன்றம் இன்று பிற்பகல் 1 மணிக்குக் கூடவுள்ளது. அமர்வு நேரத்தின்போது நாடாளுமன்ற வளாகம் மற்றும் கட்டடத் தொகுதியின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 14, 15 மற்றும் 16ஆம் திகதிகளில் நடைபெற்ற நர்டாளுமன்ற அமர்வுகளில் ஆளும் கட்சியினருக்கும், எதிர்க்கட்சியினருக்கும் இடையே கடும் மோதல்கள் ஏற்பட்டிருந்ததை அடுத்தே இன்றும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (ந)

## விடுதலைக்...

அவர் தெரிவித்துள்ளதாவது

தியாக வேள்வியில் வெந்துருகிய இந்த மாவீரர்கள் எமது வணக்கத்துக்கும், மரியாதைக்கும் உரியவர்கள். மாவீரர்கள் இந்த உலகைத் துறந்தவர்கள். வாழ்வின் வசந்தங்களைத் தொலைத்தவர்கள். இளமையின் இனிமைகளை நிராகரித்தவர்கள். சுதந்திர தேசம் பற்றிய கனவையே தம் கண்முன் கொண்டு ஓயாது ஓடிக் கொண்டிருந்தவர்கள். தமது உன்னதமான உயிரையே உவந்தளித்த இந்த உத்தமர்களுக்கு இன்று நாம் தலைசாய்த்து மரியாதை செய்வோம். தனது தாயக மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும் என்பதற்காக களப்பலியான அனைவரையும் இன்று நாம் நினைவிலிருத்துவோம்.

காலச் சுழற்சியில் நமது விடுதலைக் கனவுகள் எல்லாம் கலைந்துவிட்டன என்று நாம் நினைக்கலாம். ஆனால் எமது இலட்சிய நெருப்பு அணைந்து போகக் கூடாது. அது கனன்று கொண்டே இருக்க வேண்டும். எந்தக் காரணங்களுக்காக அகிம்சைப் போராட்டமும், ஆயுதப் போராட்டமும் ஆரம்பிக்கப்பட்டனவோ, அந்தக் காரணங்கள் இப்போதும் அப்படியே இருக்கின்றன. தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை அழித்துவிட்டோம் என்று கூறிவரும் இலங்கை அரசுகள் தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்க இதயசுத்தியுடன் எந்த முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை. ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்க இன்று தம்முள்ளே முட்டி மோதிக் கொண்டிருக்கின்றன.

போருக்குப் பின்னர் மேலேழுந்த பிரச்சினைகளான நில ஆக்கிரமிப்பு, அரசியல் கைதிகள் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் போன்றவை இன்னமும் தீர்க்கப்படவில்லை. தமிழர்களாகிய நாம் எமது விடுதலைக் கனவுகளைக் கண்முன்வைத்து அரசியல் வழியில் அகிம்சை வழியில் தொடர்ந்தும் போராடுவோம். நமக்குள் இருக்கும் அரசியல், இன, மத, பிரதேச, வேற்றுமைகளைக் களைவோம். ஒன்றுமையே பலம் தரும் என்று உணர்வோம். அதுவே மாவீரர்களுக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாக அமையும் - என்றுள்ளது.

**தேசத்தின் வீரர்களை அஞ்சலிக்கும் புனித நாள்**

மாவீரர் நாள் என்பது மரணித்தவர்களை நினைவுகூரும் சாதாரண நாள் அல்ல. தாயக விடுதலையை தம் உயிரினும் மேலாக நேசித்து அந்த இலட்சியத்துக்காகப் போராடி மடிந்த எமது தேசத்தின் வீரர்களை நெஞ்சிருத்தி அஞ்சலிக்கும் புனிதமான நாள்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

மாவீரர் நர்ளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் உள்ளதாவது

இந்த நாளைத் தியாகிகளின் திருநாளாகவும், தேசத்தின் பெருநாளாகவும், எமது போராட்டத்தின் எழுச்சி நாளாகவும் உலகெங்குமுள்ள தமிழர்கள் உணர்வெழுச்சியுடன் அஞ்சலித்து வருகின்றனர்.

தாயக தேசத்தின் விடுதலைக்காகக் களமாடி மடிந்த ஆயிரம் ஆயிரம் வீரர்களை எமது வீர மண்ணின் மார்பைப் பிளந்து புதைத்துள்ளோம். உயிரற்ற உடல்களாக அவர்கள் மண்ணுக்குள் மறையவில்லை. விடுதலையின் விதைகளாகவே இன்றும் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். தமிழீழம் என்ற சுதந்திர தேசம் வரலாற்றின் குழந்தையாகப் பிறப்பெடுக்க வேண்டும் என்ற பேரவாவில் ஆயிரமாயிரம் தனிமனித உயிர்கள் சரித்திர கருவூலத்தில் சங்கமித்தன. அந்த உயிர்கள் அனைத்தும் கருவாகி காலத்தால் உருவம் பெற்று என்றோ ஓர் நாள் தேசத்தின் சுதந்திரமாக வடிவம் பெற வேண்டும் என்பதே எம் ஒவ்வொருவரினதும் எதிர்பார்ப்பு.

புலிகள் எப்போதும் போரை விரும்பியவர்களோ, அகிம்சையை வெறுத்தவர்களோ அல்லர். அவர்கள் விடுதலை என்ற இலட்சியத்தை இலகுவாகத் தேர்ந்தெடுக்கவில்லை. வரலாறுதான் அதைக் கட்டாயமாக அவர்களிடம் கையளித்துள்ளது. ஓயாத புயலாக வீசிய ஒடுக்குமுறையின் கோரத் தாண்டவமே விடுதலைப் பாதையில் புலிகளைத் தள்ளிவிட்டது. இன அழிப்பின் தாங்க முடியாத நெருக்குவாரங்களின் காரணமாக தமது வல்லமைக்கு மிஞ்சிய வல்லாதிக்கச் சக்திகளை எதிர்த்தேனும் விடுதலை பெற்ற மனிதர்களாய் வாழ்வதற்கு முடிவு செய்த புலிகளின் இலட்சிய உறுதிக்கு முன்பாக எந்த வல்லரசாலும் எழுந்து நிற்க முடியாது போனது என்பது வரலாற்று உண்மை.

ஒடுக்குமுறையின் கொடுமைகளுக்கு ஆளாகி இலட்சியத்தால் ஒன்றுபட்ட மக்களை எந்தவொரு சக்தியாலும் அசைக்க முடியாது என்ற தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் சிந்தனையை உண்மையாக்கும் இன்றைய புனிதம் நிறைந்த புனிதர்களின் நாளை எமது இதயங்களில் பதித்து இனவிடுதலை என்ற சந்தியத்துக்கான கொள்ளைப் பற்றோடும், இலட்சிய உறுதியோடும் இறுதிவரை பயணிப்போம் என்று வீரத் தெய்வங்களின் மீது ஒவ்வொரு தமிழர்களும் உறுதி கொள்வோமாக. என்றுள்ளது.

**மக்கள் மனங்களில் நிலைத்திருப்பர்**

எமது மக்கள் சுதந்திரமாகவும், சகல உரிமைகளுடனும் வாழ வேண்டும் என்ற உயரிய சிந்தனையுடன் தமது இன்னுயிர்களை ஈகம் செய்த எமது துயில் கொள்ளும் உள்ளங்கள் எமது மக்களின் மனங்களில் எப்போதுமே வாழ்ந்து கொண்டிருப்பர்.

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மாவீரர் நாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் உள்ளதாவது

தமிழ் மக்களின் உரிமைக்காக உயிர் நீத்த் எமது விடுதலை வீரர்களை நினைவுகூரும் எமது மக்களின் உணர்வை எந்தத் தரப்பினராலும் தகர்த்துவிட முடியாது என்று நான் உறுதியாக நம்புகின்றேன். அவ்வாறு எதிர்ப்பவர்கள் எம் மக்கள் மனதில் மேலும் மேலும் உறுதியையும் சுதந்திரத் தாகத்தையும் மேலெழச் செய்கின்றார்கள்.

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் தமது விடுதலை வீரர்களை நினைவு கூரும் உரிமைக்கு எதிராகத் தெற்கில் கடும் எதிர்ப்பு வெளியிடப்படும் துர்ப்பாக்கிய நிலமை இன்று காணப்படுகின்றது. போரில் உயிர் நீத்த தமது பிள்ளைகளைத் தாய், தந்தையர் நினைவு கூர்ந்து அழுவதையோ, தமது உடன்பிறப்புகளைச், சகோதாரங்கள் நினைவு கூர்ந்து தேற்றிக் கொள்வதையோகூட சகித்துக் கொள்ள முடியாத தெற்கின் இழி மனோ நிலையை பன்னாட்டுச் சமூகம் புரிந்து கொள்ள வேண்டும். என்றுள்ளது.

(ந-60)

## இன்று...

புலனாய்வுப் பிரிவுக்கு இன்று அழைக்கப்பட்டுள்ளார். (ந-5)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 24 . 07 . 1942

ஆண்டவன் அடியில் 18 . 11 . 2016

யா/ சாவகச்சேரி சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மன், லண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்டிருந்த

## அமரர் கதிர்காமு கந்தையா தியாகராஜா

(Adm.Secretary Cum Chief Clerk of Chavakachcheri MPCS Ltd)

திதி: கார்த்திகை அபரபக்க பஞ்சமி

மண்ணிற்காய் வாழ்ந்து மரணித்த மாவீரனைப் போல்
மனைவி மக்கள் உறவினர்களுக்காய் வாழ்ந்து மரணித்த
மாமனிதருக்கு ஆண்டு இரண்டானதோ என்று
ஆச்சரியம் அடைகின்றோம் ஆண்டுச் சிரார்த்தம்
செய்து ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்

உருவம் தான் இல்லையப்பா உணர்வாய் உடன் உறைகின்றீர்கள்
உயிருடன் எம்மோடு உடனிருந்து வழி நடத்துகிறீர்கள்
பெற்றவரை வாழவைத்து பெருமகிழ்வு அடைந்தீர்கள்
உற்றவர்க்கும் உறவுகட்கும் உறுதுணையாய் இருந்தீர்கள்

சிறப்பாய் நாம் வாழ சீரியமாய் நின்று உழைத்த எங்கள் பாசமிகு தந்தையின் பாதங்களைப் பணிந்து அவரின் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

வருத்தத்துடன் நினைவு கூரும் :
அன்பு மனைவி, பிள்ளைகள்,
உடன் பிறப்புக்கள், மைத்துனர்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இத்தியடி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(CS 21430) (14.17)

# மரண அறிவித்தல்



## திருமதி பரமேஸ்வரி வேல்முருகன்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி (வட்டுக்கோட்டை), நடேஸ்வரா கல்லூரி (K.K.S), இந்துக் கல்லூரி (கொழும்பு))

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி வேல்முருகன் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி (வட்டுக்கோட்டை), நடேஸ்வரா கல்லூரி (K.K.S), இந்துக் கல்லூரி (கொழும்பு)) 25.11.2018 ஞாயிற்றுக்கிழமை ஆஸ்திரேலியாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் வேல்முருகன் (முன்னாள் பிரதம கணக்காளர் - சிமெந்துக் கூட்டுத்தாபனம் K.K.S) அவர்களின் அன்பு மனைவியும், Dr.ஈஷானி (Perth Australia), பாலமுரளி (British School of Colombo) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கோகுலனின் அருமை அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக Seasons Funeral Homes, Nichoison Road, Perth இல் நாளை (28.11.2018) புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வைக்கப்பட்டு அதே தினத்தில் Fremantte மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : ஈஷானி வேல்முருகன்

(IN.8512)(11,17) +61 411 796 133 - ஆஸ்திரேலியா

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி தனலட்சுமி குணரத்தினம்



மலர்வு 04.04.1954

உதிர்வு 07.12.2017

திதி:- பஞ்சமி

அன்பும் பண்பும் நிறைந்த எங்களது
அன்புத் தெய்வமே!
இன்ப வாழ்வில் இதயம் மகிழ்ந்திட
இனிக்கும் நினைவுகளுடனே
ஓராண்டு ஆயிற்றோ நீவீர்
எம்மைவிட்டுப் பிரிந்து?
சொந்த பந்தங்கள் வாழ்வாதாரமாய்
மகிழ்வுடன் வாழ்ந்திருக்க
உந்தனையே அர்ப்பணித்தீரே
என்றும் உம்மை நினைத்தே நாம்
அஞ்சலி செய்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



6ஆம் வட்டாரம்,
வேலணை.

என்றும் நினைவில்
M.குணரத்தினம்

## வளர்மதி வெளியே

யாழ்ப்பாணம், நவ. 27
இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் டயலொக் கிண்ணத்துக்கான 22 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான தேசியமட்ட கரப்பந்தாட்டத் தொடரில், முதலாவது சுற்றுடன் தொடரில் இருந்து வெளியேறியது புத்தூர் வளர்மதி அணி.
கிக்கடுவ மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊவா மாவட்ட சக்தி அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கியது வளர்மதி அணி. இரண்டாவது மற்றும் மூன்றாவது செற்களில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்திய ஊவா மாவட்ட சக்தி அணி அந்த செற்களை முறையே 25:23, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## இளந்தளிர் வென்றது

யாழ்ப்பாணம், நவ. 27
கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக் நடத்தும் ஏ பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கனகபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:2 என்ற கோல் கணக்கில் இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)



# அழிவில்லாத நவம்பர் - 27

உலகில் பல உருக்கமான பதிவுகளைத் தந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதி கிரிக்கெட்டிலும் அழிவில்லா ஒன்றாக உருவெடுத்துள்ளது என்றால் மிகையில்லை.

**பிலிப் கியூக்ஸ் சாவு**
ஆஸ்திரேலியக் கழகங்களுக்கு இடையில் நடைபெறும் முதல் தரத் தொடரான செப்பீல்ட் சீல்டு தொடர் மிகவும் பிரபலமானது. கடந்த 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற தொடரில் வேகப்பந்து வீச்சாளரான சோன் அப்பொட் வீசிய பவுன்சர் பந்தை தவறாகக் கணித்த காரணத்தால் கியூக்ஸின் தலைக்கவசத்தை பந்து பலமாகத் தாக்கியது. தற்போது தலைக்கவசங்களுக்குக் கீழ் பக்கத்தில் இணைக்கும் மேலதிக இணைப்பு அக்காலத்தில் இல்லாத காரணத்தால் கியூக்ஸின் தலையில் பலமாக அடி விழுந்தது. நிலை தடுமாறி நிலத்தில் சரிந்தார் கியூக்ஸ். அருகிலிருந்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கும் அவர் சிகிச்சை பயனின்றி சாவடைந்த தினம் இன்றாகும்.

**பகலிரவு டெஸ்ட்**
ரி-20 ஆட்டங்களின் பின்னர் டெஸ்ட் ஆட்டங்கள் அதன் இயல்பான அங்கீகாரத்தை படிப்படியாக இழந்து வந்தன. டெஸ்ட் ஆட்டங்களைப் பார்க்கவரும் பார்வையாளர்களின் எண்ணிக்கையும் கணிசமான அளவு குறைவடைந்தது. இதனால் ரசிகர்களை டெஸ்ட் ஆட்டங்களை நோக்கி படையெடுக்க வைப்பதற்கு பல திட்டங்களை பன்னாட்டு கிரிக்கெட் சபை பரிசீலித்து வந்தது. அவற்றில் ஒன்று, பகலிரவு ஆட்டங்களாக டெஸ்ட்டை நடத்துதல். பல கிரிக்கெட் சபைகள் இந்த முடிவுக்கு தமது வரவேற்பைத் தெரிவித்தன. கிரிக்கெட் வரலாற்றின் முதலாவது பகலிரவு ஆட்டம் கடந்த 2015ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி நடைபெற்றது.
ஆஸ்திரேலியா, நியூசிலாந்து அணிகள் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆட்டத்தில் விளையாடின. (ம)

## தேசிய கராத்தே தொடரில் வடக்குக்கு 7 பதக்கங்கள்!

யாழ்ப்பாணம், நவ. 27
இலங்கை காரத்தே சம்மேளனம் நடத்திய கராத்தே பயிற்றுனர்களுக்கான தேசியமட்ட கராத்தே தொடரில் வடக்க மாகாணத்துக்கு 4 தங்கப்பதக்கம், 2 வெள்ளிப் பதக்கம், ஒரு வெண்கலப் பதக்கம் உள்ளடங்கலாக மொத்தம் ஏழு பதக்கங்கள் கிடைத்தன.
கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தப் போட்டிகள் இடம்பெற்றன. வடமாகாணத்தைப் பிரதிநித்துவம் செய்து பங்குபற்றிய ரத்தினசோதி 75 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான காட்டப் போட்டியில் தங்கப்பதக்கத்தையும், எஸ். விஜயராஜ் 45-50 வய்துப்பிரிவுக்கு உட்பட்ட 84 கிலோ எடைப்பிரிவு குமித்தே போட்டி, மற்றும் காட்டப்போட்டி




யில் தங்கப்பதக்கத்தையும், எஸ்.லவன் 45-50 வயதுப்பிரிவுக்கு உட்பட்ட 84 கிலோ எடைப்பிரிவு குமித்தே போட்டியில் தங்கப்பதக்கத்தையும் கைப்பற்றினர்.
எஸ்.செல்வச்சந்திரன் 45-50 வயதுப்பிரிவுக்கு உட்பட்ட 84 கிலோ எடைப்பிரிவு குமித்தே போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும், கே.கேதீவரன் 45-50 வயதுப்பிரிவுக்கு உட்பட்ட 55-60 கிலோ எடைப்பிரிவு குமித்தே போட்டியில் வெள்ளிப்பதக்கத்தையும், எஸ். லவன் 36-40 வயதுப்பிரிவு 55-60 கிலோ எடைப்பிரிவு குமித்தே போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23)

## உருத்திரபுரம் வென்றது

யாழ்ப்பாணம், நவ. 27
கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக் நடத்தும் ஏ பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் உருத்திரபுரம் அணி வெற்றிபெற்றது.
கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# இலங்கையை வழித்துத் துடைத்தது இங்கிலாந்து


இலங்கைக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் 42 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இங்கிலாந்து அணி. இந்த வெற்றியை அடுத்து இலங்கையை அதன் சொந்த மண்ணில் வைத்து 3:0 என்ற அடிப்படையில் வழித்துத் துடைத்தது இங்கிலாந்து அணி.
கொழும்பில் கடந்த 23ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பமாகி நேற்று முடிவுக்கு வந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 336 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பியாஸ்ரௌவ் 110 ஓட்டங்களையும், ஸ்ரோக்ஸ் 57 ஓட்டங்களையும், ரூட் 46 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சண்டகன் 5 இலக்குகளையும், பெரேரா 3 இலக்குகளையும், புஸ்பகுமார 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.
பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி 240 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக கருணாரத்ன 83 ஓட்டங்களையும், தனஞ்சய டி சில்வா 73 ஓட்டங்களையும், குசல் மெண்டிஸ் 27 ஓட்டங்கல்ளையும் பெற்றனர். பந்துவீச்சில் ரசிட் 5 இலக்குகளையும், ஸ்ரோக்ஸ் 3 இலக்குகளையும், லீச் ஓர் இலக்கையும் கைப்பற்றினார்.
96 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய இங்கிலாந்து அணி 230 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பட்லர் 64 ஓட்டங்களையும், ஸ்ரோக்ஸ் 42 ஓட்டங்களையும், போக்ஸ் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் டில்ருவான் பெரேரா 5 இலக்குகளையும், புஸ்பகுமார 3 இலக்குகளையும், சண்டகன் 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.
இலங்கை அணிக்கு 327 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. அந்த அணி நேற்றுமுன்தின மூன்றாம் நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. குசல் மென்டிஸ் 15 ஓட்டங்களுடனும், சண்டகன் ஓர் ஓட்டத்துடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினார்கள்.



சன்டகன் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும் குசல் மெண்டிஸ், சில்வா இணைந்து சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கினார்கள்.
இணைப்பாட்டமாக 102 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் 86 ஓட்டங்களுடன் ரண் அவுட் முறையில் ஆட்டமிழந்தார் குசல் மெண்டிஸ். 65 ஓட்டங்களுடன் சில்வா எல்.பி.டபிள்யு. ஆனார். புஸ்பகுமார கடைசிக்கட்டத்தில் அதிரடிகாட்டி 42 ஓட்டங்களைச் சேர்த்த போதிலும் மறுமுனையில் லக்மல் ஆட்டமிழக்க 284 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை. 42 ஓட்டங்களால் வென்றது இங்கிலாந்து. (ம)

# ஆஸியின் பந்துவீச்சாளர்களிடம் இருந்து உங்கள் தலைகளை காப்பாற்றுங்கள்!

## இயன் சப்பல் எச்சரிக்கை




ஆஸ்திரேலியப் பந்துவீச்சாளர்களிடம் இருந்து உங்களின் கழுத்துக்களையும், தலைகளையும் காப்பாற்றுங்கள் என்று இந்திய வீரர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரும் தற்போதைய பிரபல கிரிக்கெட் விமர்சகருமான இயன் சப்பல்.
இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ரி20 தொடர் 1:1 என்று சமநிலையில் முடிந்தது. அடுத்ததாக நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் சிமித், வோர்ணர் இல்லாத ஆஸ்திரேலிய அணியை இந்தியா புரட்டியெடுக்கும் என்ற பொதுவான கணிப்பு உள்ளது. இவ்வாறிருக்கையில் ஆஸ்திரேலிய அணியினர் அதிலும் குறிப்பாக ஆஸ்திரேலியப் பந்துவீச்சாளர்கள் இந்தத் தொடரில் சிறப்பாக விளையாடுவார்கள் என்றுள்ளார் சப்பல்.
பன்னாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
ஆஸ்திரேலியாவைக் குறைத்து மதிப்பிட்டால் அவ்வளவுதான். மிட்செல் ஸ்ரார்க், ஹசில்வுட், கமின்ஸ் என்று மிகச் சிறந்த வேகப்பந்து வீச்சு வரிசை கைவசம் உள்ளது. துடுப்பாட்டத்தில் பலவீனம் இருப்பதால் பந்துவீச்சாளர்கள் இன்னும் ஆக்ரோசமாக வீசி எதிரணியினரின் வாய்ப்புகளைக் கடுமையாகக் குறைப்பார்கள். முதல் மூன்று இலக்குகளையும் விரைவாக வீழ்த்தி கோக்லியை பந்து பளபளப்பாக இருக்கும்போதே களத்துக்கு வரவழைத்து விடவேண்டும். அப்படியிருந்தால் கோக்லியையும் இலகுவாக வீழ்த்தலாம் என்று மேலும் தெரிவித்தார் இயன் சப்பல். (ம)

புதுவருட உணவு கொண்டாட்டம்
சைவம் - அசைவம்
▼ அப்பம்
▼ தம் பிரியாணி,
▼ ஒடியல் கூழ்,
▼ பகல் / இரவு உணவு
▼ பைறட் றைஸ்
மேலும் பல.....
YARL PARDY
49 - 51, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 075 987 5800
(C/32097)(11.17)

## ஆஸ்திரேலியாவை விட இந்தியா பலமான அணி

### கோக்லி சீண்டல்



ஆஸ்திரேலியாவை விட இந்தியா பலமான அணி என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.
இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ரி20 தொடர் 1:1 என்று சமநிலையானது. அடுத்ததாக நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடர் தொடர்பாக கருத்துப் பகிர்வுகள் உச்சமாக இடம்பெற்றுவரும் நிலையில் இவ்வாறு தெரிவித்தார் கோக்லி.
ஆஸ்திரேலியா, இந்தியா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் எப்போதும் எழுச்சியாகப் பேசப்படும் ஒன்று. ஒப்பீட்டளவில் இரண்டு அணிகளும் பலமானவை என்ற அடிப்படையில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படும். எனினும் தற்போதைய் நிலையில் இந்திய அணி ஆஸ்திரேலியாவை விடவும் வலுவானது என்று கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

## டோனி என்றால் விதிவிலக்கல்லர்

### கங்குலி எச்சரிக்கைத் தொனி

டோனிக்கு என்று தனியே சட்டமொன்றும் இல்லை. ஏனைய வீரர்களைப்போன்றுதான் அவரும். சிறந்த முறையில் விளையாடினால்தான் அவருக்கு அணியில் இடம்கொடுக்க முடியும் என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் வீரர் கங்குலி.
டோனியின் ஓய்வு தொடர்பில் தற்போது பல்வேறு கருத்துப் பகிர்வுகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் தனது பங்குக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார் கங்குலி.
டோனியால் இன்னும் கூட பந்துகளைத் தூக்கிவெளியே அடிக்க முடியும். அவர் பிரமாதமான கிரிக்கெட் வீரர். ஆனாலும் சட்டமென்பது மற்றவர்களுக்கு உள்ளது போல்தான் அவருக்கும். டோனிக்கு என்னுடைய வாழ்த்துக்கள், சம்பியன்கள் உச்சத்துக்குச் செல்ல வேண்டும் என்பதே என் விருப்பம். அவரால் இன்னும் பந்துகளை தூக்கி வெளியே அடிக்க முடியும் என்றே நான் நம்புகிறேன். ஏனெனில் அவர் ஒரு அபூர்வ கிரிக்கெட் வீரர் என்று கங்குலி மேலும் தெரிவித்தார். (ம)



ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➤ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
➤ அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➤ யாரும் படிக்கலாம்.
www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

Galaxy Star
வெற்றி வாரம் 279 / திகதி 25.11.2018
வெற்றி இலக்கங்கள் 05 09 32 40 43
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி
ரூ. 2,352,076/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

ஜயோதய
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1521 சீட்டிழுப்பு திகதி 26.11.2018
வெற்றி இலக்கங்கள் 02 07 13 14 Z
அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட்
ரூ 21, 943, 516/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3114 திகதி: 2018.11.26 திங்கட்கிழமை
SATURDAY FORTUNE நீலம்
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 16 26 29 68 T
போனஸ் இலக்கம் 59
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட் 52,137,125/-
Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 446
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.11.26
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,477,895/-
வெற்றி இலக்கங்கள் 24 46 61 75 N
தொ.பே: 011 4062002 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## கனகபுரம் வென்றது

யாழ்ப்பாணம், நவ. 27
கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக் நடத்தும் ஏ பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கனகபுரம் அணி போராடி வெற்றிபெற்றது.
கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் உழவர் ஒன்றியம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கனகபுரம் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் 3:2 என்ற கோல் கணக்கில் கனகபுரம் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.